# இஸ்லாமிய நாட்டில் முஸ்லிம் அல்லாதாரின் உரிமைகள்

"The Rights of Non-Muslims in the Islamic World" By Prof. Saleh Hussain Al-Aayed, Ph.D. Translated From Arabic to English by Alexandra Alosh and in Tamil by Bro. Abdul Hameed.

---

எல்லாப் புகழும் ஏக இறைவனாகிய வல்ல அல்லாஹ்வுக்கே உரித்தாகட்டும்! சாந்தியும் சமாதானமும் சத்தியத் தூதர் முஹம்மது (ஸல்) அவர்கள் மீதும் அன்னாரைப் பின்பற்றுகின்ற அனைவர் மீதும் உண்டாவதாக!

இஸ்லாம் அனைத்து உயிரினங்களின் மீதும் அளப்பரிய அன்பைப் பொழிகின்ற மார்க்கமாகும். அது தனது கருணையை அனைத்து உயிரினங்களின் மீதும் பொழிகின்றது. இறைவன் தன்னுடைய திருமறையிலே கூறுகின்றான் :

இது (குர்ஆன்) மனிதர்களுக்கு தெளிவான அத்தாட்சிகளைக் கொண்டதாகவும், உறுதியான நம்பிக்கையுடைய சமூகத்தாருக்கு நேர் வழியாகவும், ரஹ்மத்தாக (அருட்கொடையாக)வும் இருக்கிறது. (45:20)

இந்த பிரபஞ்சத்தில் வாழுகின்ற உயிரினங்களுக்கு இஸ்லாத்தில் நிறையவே அருட்கொடைகள் இருக்கின்றன. இன்னும் இஸ்லாத்தைப் பின்பற்றியவர்களுக்கும், இன்னும் அதனைப் பின்பற்றாதவர்களுக்கும் பல நன்மைகள் அதில் புதைந்து கிடக்கின்றன. யாரிடம் தெளிவான சிந்தனை இல்லையோ.., இன்னும் யாரிடம் ஊணப் பார்வை உள்ளதோ அத்தகையவர்களிடம் தான் இஸ்லாத்தைப் பற்றிய தெளிவான அறிவு இல்லாமல், அவர்கள் இஸ்லாத்தின் மீது காழ்ப்புணர்ச்சியுடன் நடந்து கொள்ளக் கூடியவர்களாக இருக்கின்றார்கள். இது அவர்களின் அறியாமையே ஆகும். இறைவன் தன்னுடைய திருமறையிலே கூறுகின்றான் :

.. இதுவே நிலையான மார்க்கமாகும். ஆனால் மனிதர்களில் பெரும்பாலோர் (இதை) அறிய மாட்டார்கள். (30:30)

பகல் வெளிச்சத்தை நம்புவதற்கு ஒருவனுக்கு ஆதாரம் தேவைப்பட்டால், இனி எதனைக் கொண்டும் அவனைத் திருப்தியுறச் செய்து விட முடியாது.

இங்கே நாம் பார்க்கப் போகும் இந்த அத்தியாயத்தில், இஸ்லாத்தைப் பற்றிய தெளிவானதொரு விளக்கத்தை நாம் உங்கள் முன் கொண்டு வர இருக்கின்றோம், அதன் மூலம் நீங்கள் நேர்வழியைப் பெற்றுக் கொள்ளக் கூடும். இன்னும் அதிகமாக முஸ்லிம் அல்லாதவர்களுக்கு இஸ்லாம் எந்தளவு உரிமைகளை வழங்கியுள்ளது என்பதை நீங்கள் அறியும் பொழுது, இஸ்லாம் அனைத்து உயிரினங்களின் மீதும் தனது அருட்கொடைகளை எந்தளவு பரந்த மனப்பான்மையுடன் தன்னுள் பொதிந்து வைத்திருக்கின்றது என்பதையும் நீங்கள் அறிந்து கொள்ளலாம். மத சகிப்புத் தன்மையை, வேற்றுமையிலும் இந்த உலகப் பூமிப் பந்தை எவ்வாறு பிரச்னைகளற்ற விதத்தில் பங்கு போட்டுக் கொண்டு, அமைதியாக வாழ முடியும் என்பதற்கு இஸ்லாம் காட்டித் தந்திருக்கும் அமைதி வழியை இதன் மூலம் நீங்கள் கண்டு கொள்ளலாம். இன்னும் முஸ்லிம் அல்லாதவர்களின் பல தேசங்களை முஸ்லிம்கள் வெற்றி கொண்ட போதும் கூட அவர்கள், வெற்றி மமதையில் தங்களது கொள்கையை ஏற்காத மக்களிடத்தில் நடந்து கொள்ளாமல், மதச் சுதந்திரத்தைக் கொடுத்து வந்திருக்கின்றார்கள் என்பதையும், இன்னும் மனமாச்சரியங்களுக்கு இடங்கொடாமல் நடுவு நிலையில் நின்று கொண்டு எத்தனையோ பெருமக்கள் இந்த மார்க்கத்தின் புகழுக்கு சாட்சியம் அளித்திருக்கின்றார்கள் என்பதையும் நீங்கள் இந்தத் தொடரில் கண்டு கொள்வீர்கள்.

அரபுக்கள், இவர்களுக்குத் தான் இறைவன் இந்த உலகத்தை ஆளக் கூடிய அதன் கட்டுப்பாட்டைக் கொடுத்தான், நீங்கள் அறிந்திருந்தபடி அவர்கள் நம்மை அப்பொழுது நடத்தினார்கள், இன்னும் அவர்கள் (முஸ்லிம்கள்) கிறிஸ்தவர்களின் எதிரிகளுமல்ல என்பதையும் நீரூபித்துக் காட்டினார்கள். இன்னும் நமது மார்க்கத்தை அவர்கள் போற்றினார்கள், நமது மத குருமார்களைக் கண்ணியப்படுத்தினார்கள், அவர்களை நல்லமுறையில் நடத்தினார்கள், இன்னும் நமது தேவாலயங்களுக்கும், மடங்களுக்கும் உதவிக் கொடை வழங்கினார்கள். (Patriarch Ghaytho)

உமையாக்களின் ஆட்சியின் பொழுது, கிறிஸ்தவர்கள், நெருப்பு வணங்கிகளான சூராஸ்டிரியர்கள், யூதர்கள், இன்னும் சாபியீன்கள் ஆகிய அனைவரும் முழுமையான மதச் சுதந்திரத்தை அனுபவித்தார்கள், இந்த மதச் சுதந்திரத்தை இன்னும் நமது கிறிஸ்தவ உலகத்தில் கூட நாம் கண்டிருக்க மாட்டோம். அவரவர் மத ஆச்சாரங்களைப் பின்பற்றும் சுதந்திரத்தையும், இன்னும் கிறிஸ்தவ தேவாலயங்களும், கோவில்களும் பெற்றிருந்தன. இன்னும் மத சட்ட வழங்கல்களில் அவரவருடைய மார்க்க அறிஞர்களின் தீர்ப்புகளை செயல்படுத்தும் அளவுக்கு சுயாதிக்கம் பெற்றவர்களாகத் திகழ்ந்தார்கள். ((Will Durant States, anachronism)

இஸ்லாத்திற்கும் இன்னும் மற்றுமுள்ள மதக் கொள்கைகளுக்கும் உள்ள வித்தியாசம் என்பது மதச் சடங்குகளுக்கு இடையே உள்ள வித்தியாசத்தைப் போன்றதல்ல, இஸ்லாத்திற்கும் மற்ற மதங்களுக்கும் உள்ள வித்தியாசம் என்பது, இஸ்லாம் காட்டி நிற்கும் வாழ்வியல் நெறிகளான மனித நேயம், அதாவது மனிதர்கள் அனைவரது உயிர்களும் கண்ணியப்படுத்தப்பட வேண்டியதே என்பதும் இன்னும், அவரவர் தங்களது விருப்பப்படி தங்களுக்குப் பிடித்த கொள்கைகளைப் பின்பற்றுவதற்கான சுதந்திரத்தையும் இஸ்லாம் மனிதர்களுக்கு வழங்கியுள்ளது. இந்த இரண்டு அடிப்படையில் தான் மற்ற மதங்களை விட இஸ்லாம் மேம்பட்டதாக இருக்கின்றது. வித்தியாசப்படுத்த முடிந்ததாக இருக்கின்றது. ஆனால் இன்றைக்கு துரதிருஷ்டவசமாக இஸ்லாத்தின் மீது சேற்றை வாரி இறைக்கும் நோக்கத்தை மட்டும் இலக்காகக் கொண்டு செயல்படும் மனிதர்கள், ஊடகங்கள் யாவும் கண்ணை மூடிக் கொண்டு தான்.., இஸ்லாத்தின் மீது பழியைப் போடுகின்றன. இஸ்லாத்தில் மனித உரிமைகள் இல்லை என்றும், இஸ்லாம் சகிப்புத் தன்மையற்ற மார்க்கம் என்றும், இஸ்லாம் மற்ற மதங்களின் மீது மல்லுக்குத் தான் நிற்கின்றது, இன்னும் அதனைத் தன் மக்களுக்கும் போதிக்கின்றது என்றும் ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளைக் கூறி வருகின்றார்கள். இவர்கள் கூறும் குற்றச்சாட்டில் எந்த ஆதாரமுமில்லை, காழ்ப்புணர்ச்சியைத் தவிர..!

இங்கே இஸ்லாத்தில், இஸ்லாத்தினைப் பின்பற்றாத மனிதர்களின் உரிமைகள் என்னவென்பதை நீங்கள் புரிந்து கொண்டீர்களென்றால், மேலே சொன்ன குற்றச்சாட்டுக்கள் யாவும் முனை முறிந்த அம்புகளாக இலக்கைத் தவற விட்டு, அற்பமாக கீழே விழுந்து விடும். மேலும், இஸ்லாத்தைப் பற்றிய புரிந்துணர்வையும் இது ஏற்படுத்தும்.

வல்ல அல்லாஹ் அதற்குத் துணை புரிவானாக என்று கேட்டுக் கொண்டு, இந்தத் தொடரை ஆரம்பம் செய்கின்றோம். இறைவன் இதன் மூலம் உங்களுக்கும் எங்களுக்கும் நேர்வழி காட்டுவானாக!

## முஸ்லிம் நாடுகளில் வாழுகின்ற முஸ்லிம் அல்லாதார்களின் உரிமைகளின் வகைகள்

இஸ்லாமிய நாடுகளில் வாழுகின்ற முஸ்லிம் அல்லாதார்களின் உரிமைகள் பற்றி நாம் விவாதிப்பதற்கு முன்பாக இஸ்லாமிய நாடுகளில் வாழக் கூடிய முஸ்லிம் அல்லாதார்களின் வகைகளைப் பற்றி நாம் பிரித்தறிய வேண்டிய தேவையிருக்கின்றது. அந்த பிரித்தறிதல் என்பது இன ரீதியாகவோ அதாவது

யூதர்கள், கிறிஸ்தவர்கள், நெருப்பு வணங்கிகள் இன்னும் இது போன்ற பிரிவுகளில் அடங்கக் கூடியவர்கள் என்ற வகையில் அல்லாது, வேறு வகையில் நாம் அவர்களை இனம் பிரிக்க வேண்டும்.

அதாவது குடிமக்கள் மற்றும் குடிமக்கள் அல்லாதவர்கள் என்ற ரீதியில் தான் இனம் பிரிக்க வேண்டும்.

இஸ்லாமிய ஷரீஅத் சட்டங்களைப் பற்றி அறிந்து கொண்டவர்கள், இஸ்லாமிய நாடுகளில் வாழக் கூடிய முஸ்லிம் அல்லாதவர்களை திம்மிகள் என்று அழைப்பார்கள். இவர்கள் இஸ்லாமிய நாடுகளில் உள்ள முஸ்லிம் அல்லாதார்களுக்கென உள்ள சட்ட திட்டங்களை ஏற்றுக் கொண்டு, இவர்களைப் பாதுகாக்கும் உரிமையை இஸ்லாமிய ஆட்சியாளர்களுக்கு வழங்கி அதன் மூலம் தங்களது பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்ளக் கூடியவர்களாவார்கள். இவர்களை திம்மிகள் அல்லது ஜிஸ்யா வரி செலுத்தக் கூடியவர்கள் என்றும் அழைக்கலாம். இது இறைத்தூதர் (ஸல்) அவர்களது காலத்திலிருந்தே நடைமுறையில் உள்ள வழக்கமாகும். ஒன்று இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டு இஸ்லாமிய பூமியில் வாழ்வது, அல்லது இஸ்லாமிய ஆட்சியை ஏற்றுக் கொண்டு தங்களைப் பாதுகாக்கும் பொறுப்பை இஸ்லாமிய ஆட்சியாளர்களிடத்தில் வழங்கி விட்டு, அதற்கு ஈடாக பாதுகாப்பு வரியைச் செலுத்திக் கொண்டு, சுதந்திரமான மக்களாக வாழ்வது.

இறைத்தூதர் (ஸல்) அவர்கள் தனது தோழர்களை போருக்கு அனுப்பும் பொழுதெல்லாம் இவ்வாறு அவர்களுக்குக் கட்டளை பிறப்பிக்கக் கூடியவர்களாக இருந்தார்கள் :

நீங்கள் எதிரிகளின் கோட்டையை முற்றுகையிட்டு அதனை வெற்றி கொள்ள இருக்கும் தருவாயில், அதில் வசிக்கக் கூடிய மக்கள் உங்களிடம் வந்து ஒப்பந்தங்கள் செய்து கொள்ள முன் வந்து இறைவன் பெயரின் மீதும் இன்னும் இறைத்தூதர் பெயரின் மீதும் அவர்கள் ஒப்பந்தம் செய்ய முன்வருவார்களென்று சொன்னால், நீங்கள் உங்களது ஒப்பதங்களை இறைவன் மீதும் இன்னும் இறைத்தூதர் மீதும் என்று எழுதாதீர்கள். அதை விட உங்கள் பெயரிலும் இன்னும் உங்கள் தோழர்கள் பெயரிலும் அந்த ஒப்பதங்களை எழுதிக் கொள்ளுங்கள். ஏனெனில், நாளை அவர்கள் இந்த ஒப்பந்தத்தை முறிக்க நேரிட்டால், இறைவனிடமும் இறைத்தூதரிடமும் செய்து கொண்ட ஒப்பந்தத்தை முறித்து விட்ட படுபாதக பாவத்திற்கு ஆளான குற்றத்திற்கு அவர்கள் ஆளாக நேரிடாது காப்பாற்றப்படுவார்கள் என்று கூறினார்கள்.

இன்னுமொரு உதாரணம் :

இஸ்லாத்தின் முதல் கலீபாவாக அபுபக்கர் சித்தீக் (ரலி) அவர்கள் நஜ்ரான் மக்களுக்கு எழுதிய கடிதமே இஸ்லாத்தின் மத சகிப்புத் தன்மைக்கு இன்னுமொரு சிறந்த சாட்சியமாக விளங்கிக் கொண்டிருக்கின்றது.

அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய அந்த அல்லாஹ்வின் திருநாமத்தைக் கொண்டும், சாந்தியும் சமாதானமும் சத்தியத் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் மீது உண்டாவதாக எனப் பிரார்த்தித்தவனாக, அப்துல்லா பின் அபுபக்கர் எழுதிக் கொள்ளும் அறிக்கை. இறைவனுடைய மற்றும் இறைத்தூதர் (ஸல்) அவர்களது வழிகாட்டுதல்களின்படி அந்நிய மதத்தவர்களாகிய நீங்கள் எங்களது பாதுகாப்பின் கீழ் உள்ளவர்கள் என்பதை உறுதி செய்கின்றோம், இன்னும் நீங்களும், உங்களது நிலங்கள், உங்களது சமுதாயங்கள், உங்களது சொத்துக்கள், நீங்கள் வைத்திருக்கின்றவைகள் இன்னும் உங்களது வேலையாட்கள், இவற்றை பெற்றுக் கொண்டு உள் நாட்டில் வாழக்கூடியவர்கள் அல்லது வெளி நாட்டில் வசிக்கக் கூடிய அதன் உரிமையாளர்கள், உங்களது பாதிரிமார்கள், துறவிகள் மற்றும் மடங்கள், மற்றும் நீங்கள் வைத்திருக்கக் கூடியவைகள் அவை சிறியவையாகவோ மற்றும் பெரியதாக இருந்தாலும் அதில் எதனையும் உங்களை விட்டும்

நாங்கள் அவற்றை அப்புறப்படுத்தி விட மாட்டோம், உங்களுக்கு உரிமையான எதிலும் நாங்கள் தலையிட மாட்டோம், உங்களுக்கு உரிமையான அனைத்தின் மீதும் நீங்களே பூரண உரிமை உடையவர்களாவீர்கள்.

இமாம் அவ்சாய் (ரஹ்) அவர்கள் அப்பாஸிய கலீபா அவர்களுக்கு எழுதிய கடிதத்தில், அலீ பின் அப்துல்லா அவர்களே!

உங்களுக்கு கீழ் உள்ள ஜிஸ்யா என்னும் வரியைக்கட்டி வாழக் கூடியவர்கள் உங்களது அடிமை போன்றவர்களல்லர். எனவே அவர்கள் சுதந்திரமாக வாழ்ந்து கொண்டிருக்கக் கூடிய நிலையில், அவர்களது நிலையை மாற்றுவதில் எச்சரிக்கை தேவை. அவர்கள் நமது பாதுகாப்பின் கீழ் உள்ள சுதந்திரமான மக்கள்.

இந்த நிலையில், கிறிஸ்தவ மன்னர்கள் தங்களுக்குக் கீழ் உள்ள மாற்றுமதத்தவர்கள் மீது கிறிஸ்துவத்தைத் திணிக்க முற்பட்டிருந்த பொழுது, அரபுக்கள் மதச் சிறுபான்மையினரை அங்கீகரித்தார்கள் இன்னும் அவர்களது இருப்பைக் கூட அவர்கள் அங்கீகரித்தார்கள். கிறிஸ்தவர்களும், யூதர்களும் இன்னும் நெருப்பை வணங்கக் கூடிய சூராஸ்டிரர்களும் இந்த அரபுக்களிடம் ஜிஸ்யா வரியைக் கட்டி விட்டு பாதுகாப்புப் பெற்றுக் கொண்டவர்களாக இருந்தவர்கள் தான் என்பதை அறிவோம், இதனை இன்னுமொரு வடிவில் சொல்ல வேண்டுமென்றால், இவர்கள் அனைவரும் அரபுக்களிடமிருந்து பாதுகாப்பைப் பெற்றுக் கொண்டு, தங்களை பாதுகாக்கப்பட்ட சமுதாயத்தவர்களாகவும் அதன் உரிமையை அனுபவித்தவர்களாகவும் திகழ்ந்தார்கள்.

### ஆ. பாதுகாப்புப் பெற்றுக் கொண்ட இன்னொரு வகையினர்

இவர்கள் முஸ்லிம் நாடுகளுக்கு பணி நிமித்தம் அல்லது வியாபார நிமித்தமாக வந்தவர்கள். இவர்கள் இந்த நாடுகளில் குறுகிய காலத்தில் இருந்து விட்டு, தங்களது நோக்கம் நிறைவடைந்தவுடன் மீண்டும் தங்களது தேசத்தை நோக்கிச் சென்று விடக் கூடியவர்கள்.

ஆக, மேலே உள்ள இந்த இரண்டு வகையினருக்கும் பொதுவான உரிமைகள் பல உள்ளன. மேலும் இந்த இரண்டு இனங்களிலும் அடங்காக மிகச் சிறப்பான உரிமைகள் பல உள்ளன. அவற்றையும் நாம் ஆங்காங்கே பார்த்து விட்டுச் செல்வோம்.

## இஸ்லாமிய நாட்டில் வாழும் முஸ்லிம் அல்லாதாரின் பொதுவான உரிமைகள்

இஸ்லாமிய நாட்டில் வாழுகின்ற முஸ்லிம் அல்லாதவர், அவர் எந்த இனத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும் அல்லது எந்த தேசத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும் அல்லது எந்த தகுதியைப் பெற்றிருந்தாலும், அவர் எந்த பாரபட்சத்திற்கும் உட்படுத்தப்பட மாட்டார். மனித இன வரலாற்றில் மற்ற எந்த கொள்கையிலும் பெற்றுக் கொள்ள முடியாத சமத்துவத்தை, இஸ்லாத்தின் நிழலில் தான் மனித குலம் பெற்றுக் கொண்டது. ஏனெனில் இஸ்லாம் எந்த தனிப்பட்ட இனத்துக்கோ, குலத்துக்கோ, நிறத்துக்கோ அல்லது தேசத்துக்கோ சொந்தமாக மார்க்கமல்ல. மாறாக அது தேசம், இனம், நிறம், குலம், தேசிய அடையாளங்கள், தேச எல்லைக்கோடுகள் அத்தனையும் தாண்டிய உலகளாவிய மார்க்கமாகும். அந்த மார்க்கத்தை மேற்கண்ட பிரிவுகளின் பட்டியிலில் எதனுள்ளும் தனித்துப் பிரித்து அடைத்து விட முடியாது.

இன்னும், அந்த இஸ்லாம் மார்க்கத்தின் இறுதித் தூதரான முஹம்மத் (ஸல்) அவர்கள் எந்த தனிப்பட்ட சமுதாயத்திற்கு மட்டுமல்லாது, உலகத்தில் வாழக் கூடிய மாந்தர் அனைவருக்கும்

பொதுவான தூதராக வந்தவர். இதற்கு முன் வந்த சகோதர தூதர்களைப் போலல்லாமல், முஹம்மத் (ஸல்) அவர்கள் தனிப்பட்ட எந்த சமுதாயத்திற்காக மட்டும் வந்தவரல்லர்.

இன்றைக்கு இருக்கின்ற ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பற்றிய சட்டங்களையும், இன்னும் இஸ்லாம் வழங்கியிருக்கின்ற மனித உரிமை சாசனத்தையும் ஒருவர் மாச்சரியமின்றி ஒப்பு நோக்குவாரென்று சொன்னால், ஐக்கிய நாடுகள் சபை வலியுறுத்துகின்ற மனித உரிமை சாசனத்தைக் காட்டிலும், விரிவாகவும் இன்னும் அதிக ஒழுக்க விழுமியங்களை அடிப்படையாகக் கொண்டதாகவும் இருக்கக் காண்பீர்கள். மனிதனின் உரிமைகளைப் பற்றி உலக சமுதாயம் இப்பொழுது தான் சிந்திக்க ஆரம்பித்திருக்கின்ற பொழுது, கிட்டதட்ட 1400 வருடங்களுக்கு முன்னால் இஸ்லாம் அது பற்றி தெளிவானதொரு கொள்கையைக் கொண்டிருந்தது என்பதை அறிந்து, அதனைப் புகழ்வதற்கு வார்த்தைகளே கிடையாது என்று சொல்லக் கூடியவராக அந்த ஆய்வாளர் இருப்பார்.

இஸ்லாம் தொகுத்து வழங்கியிருக்கின்ற மனித உரிமைகளில் காணப்படக் கூடிய ஒழுக்க விழுமியங்களை ஒருவர் பின்பற்றி நடந்தார் என்று சொன்னால், இன்றைக்கு மனிதனைப் பீடித்திருக்கக் கூடிய அனைத்து கேடுகளும் அவனை விட்டும் நீங்கி விடும், இன்னும் மனித சமுதாயம் அமைதிப் பூங்காவாக மாறி விடும்.

இன்னும் இஸ்லாமிய சட்டங்களை ஒருவர் மாச்சரியமின்றி ஆராய்வார் என்று சொன்னால், அதில் வழங்கப்பட்டிருக்கின்ற சட்டதிட்டங்களைப் போல, இன்னும் ஒழுக்க மேம்பாட்டுக்கு இஸ்லாம் அதிகக் கவனம் செலுத்தி இருப்பதைப் போல வேறு எந்த மதமும் அத்தகைய முக்கியத்துவத்தைக் கொடுத்தில்லை என்பதை அவர் ஒப்புக் கொள்வார்.

இஸ்லாமிய சட்ட திட்டங்களைக் கொண்ட சட்ட தொகுப்புக்கு ஷரீஅத் சட்டங்கள் என்று அழைக்கப்படுகின்றது. அந்த சட்டதிட்டங்கள் யாவும் இஸ்லாத்தைப் பின்பற்றுபவர்களுக்கு மட்டும் தான் அதில் சட்ட திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன என்று நீங்கள் நினைத்துக் கொண்டீர்கள் என்றால் அது தவறானதாகும். மாறாக, அது தன்னைப் பின்பற்றுபவர்களுக்கும் இன்னும், இஸ்லாமிய நாடுகளில் வாழக் கூடிய இஸ்லாத்தினைப் பின்பற்றாதவர்களுக்கும் உள்ள உரிமைகள், கடமைகள், சட்ட திட்டங்கள் ஆகியவற்றைப் பற்றியும் அது பேசுகின்றது. இது தான் இஸ்லாத்தின் தனித்துவமாகும். இந்த தனித்துவத்தை இன்று வரைக்கும் எந்த கொள்கையும், எந்த மதமும் அதன் வாசலைக் கூடத் தொட்டுப் பார்க்கவில்லை என்பதொன்றே, மற்ற மதங்களுக்கும் இஸ்லாத்திற்கும் உள்ள வேறுபாடாகும்.

முஸ்லிம்களைப் போலவே, முஸ்லிம் அல்லாதவர்களும் ஏகப்பட்ட உரிமைகளைப் பெற்றுள்ளார்கள் என்பதை கீழ்வரும் அத்தியாயங்களில் நாம் பார்ப்போம்.

### மனிதர்கள் என்ற அடிப்படையில் அவர்கள் கண்ணியத்தை பாதுகாக்கும் உரிமை

மனிதர்களில் அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டாலும் சரி அல்லது ஏற்றுக் கொள்ளா விட்டாலும் சரி, மனிதன் என்ற அடிப்படையில் அவன் கண்ணியத்திற்குரிய நிலையிலே இறைவன் அவனைப் படைத்துள்ளான். இன்னும் தனது அனைத்துப் படைப்பினங்களை விடவும் மனிதனை மிகச் சிறந்த படைப்பாகப் படைத்துள்ளேன் என்று இறைவன் தன்னுடைய திருமறையிலே மனிதனின் கண்ணித்தைப் பற்றிக் கூறுகின்றான். இந்த மனிதனைப் படைத்த இறைவனின் திருமறை இது பற்றிக் கூறுகின்றது :

நிச்சயமாக, நாம் ஆதமுடைய சந்ததியைக் கண்ணியப்படுத்தினோம் இன்னும், கடலிலும், கலையிலும் அவர்களைச் சுமந்து, அவர்களுக்காக நல்ல உணவு(ம் மற்றும்) பொருட்களையும் அளித்து, நாம்

படைத்துள்ள (படைப்புகள்) பலவற்றையும் விட அவர்களை (தகுதியால்) மேன்மைப் படுத்தினோம். (17:70)

மனித குலத்தின் தந்தையாரான ஆதம் (அலை) அவர்களுக்குச் சிரம் பணியுமாறு வானவர்களுக்கு இறைவன் கட்டளை பிறப்பித்திருக்கின்றதன் மூலம், இந்த மனித சமுதாயத்தை இறைவன் மிகவும் கண்ணியப்படுத்தி இருக்கின்றான். இதன் மூலம் மனிதனின் கண்ணியமானது, மற்ற ஜீவராசிகளை விடவும் மிகவும் உன்னதமான நிலைக்கு உயர்த்தப்பட்டுள்ளது. இதனைத் தன்னுடைய திருமறையிலே இறைவன் இவ்வாறு கூறுகின்றான் :

"நீங்கள் ஆதமுக்கு ஸு ஜூ து செய்யுங்கள்" என்று நாம் வானவர்களிடம் கூறிய போது, இப்லீஸை தவிர, அவர்கள் ஸு ஜூ து செய்தார்கள். அவன் (அவ்வாறு செய்யாது) விலகிக் கொண்டான். (20:116)

இறைவன் இந்த மனித சமுதாயத்தின் மீது பல அருட்கொடைகள் வழங்கியிருக்கின்றான். அவற்றில் சில வெளிப்படையாகத் தெரியக் கூடியவைகள், இன்னும் சில மறைவானவைகள். நாம் வசிக்கின்ற இந்த பூமியும் இன்னும் நம்மைச் சுற்றியுள்ள வான் வெளியும் இந்த மனிதனுக்காகவே இறைவன் படைத்துள்ளான், இதன் மூலம் இறைவன் இந்த மனிதனைக் கண்ணியப்படுத்தி இருக்கின்றான்.

நம்மைப் படைத்த இறைவன் தன்னுடைய திருமறையிலே கூறுகின்றான் :

அல்லாஹ் எத்தகையவன் என்றால் அவன் தான் வானங்களையும், பூமியையும் படைத்து வானத்திலிருந்து மழையையும் பொழியச் செய்து அதைக் கொண்டு கனிவர்க்கங்களையும் உங்களுக்கு - ஆகாரமாக வெளிப்படுத்தித் தன் கட்டளையினால் கடலில் செல்லுமாறு கப்பலை உங்களுக்கு வசப்படுத்திக் கொடுத்தும், ஆறுகளையும் உங்களுக்கு வசப்படுத்தித்தந்தான். (தவறாமல்), தம் வழிகளில் ஒழுங்காகச் செல்லுமாறு சூரியனையும் சந்திரனையும் அவனே உங்களுக்கு வசப்படுத்தித்தந்தான். மேலும், அவனே இரவையும் பகலையும் உங்களுக்கு வசப்படுத்தித் தந்தான். (14:32-33)

மனிதனது கௌரவத்தை இறைவன் மற்ற ஜீவராசிகளைக் காட்டிலும் உயர்த்தி இருப்பதன் மூலம், இன்னும் வானங்களையும், பூமியையும் இவன் பொருட்டே படைத்திருக்கின்றேன் என்று கூறுவதன் மூலமும் இறைவன் இந்த மனிதனை மற்ற ஜீவராசிகளைக் காட்டிலும் மிகவும் உயர்ந்த ஸ்தானத்தில் கொண்டு வைத்துள்ளான், அதன் மூலம் அவன் மனிதனைக் கண்ணியப்படுத்தி இருக்கின்றான். இந்தக் கண்ணியமானது முஸ்லிம்களுக்கு மட்டும் உரித்தானது என்று இறைவன் கூறவில்லை, மாறாக முழு மனித சமுதாயத்திற்கும் உரித்தானது என்று கூறுவதன் மூலம், பாகுபாடற்ற முறையில் இந்த மனிதனை இறைவன் கண்ணியப்படுத்தி, அனைத்து மனிதர்களின் கண்ணியத்தையும் சமமான முறையில் பாதுகாத்துத் தந்துள்ளான். இன்னும் ஒருபடி மேலே சென்று, இந்த பூமிப் பந்தில் ஊர்ந்து திரிகின்ற அனைத்து மனிதர்களும் ஒரு தாய், தந்தையின் வழித்தோன்றல்களே என்று ஆணித்தரமான தனது கொள்கையை வலியுத்துவதன் மூலம், இந்தக் கண்ணியத்தை பொதுவாக்கி வைத்திருக்கின்றது. அதனையே நம்மைப் படைத்த இறைவன் கீழ்க்கண்ட வசனம் மூலம் நமக்கு தெளிவாக்குகின்றான் :

மனிதர்களே! நிச்சயமாக நாம் உங்களை ஓர் ஆண், ஒரு பெண்ணிலிருந்தே படைத்தோம் நீங்கள் ஒருவரை ஒருவர் அறிந்து கொள்ளும் பொருட்டு. பின்னர், உங்களைக் கிளைகளாகவும், கோத்திரங்களாகவும் ஆக்கினோம் (ஆகவே) உங்களில் எவர் மிகவும் பயபக்தியுடையவராக இருக்கின்றாரோ, அவர்தாம் அல்லாஹ்விடத்தில், நிச்சயமாக மிக்க கண்ணியமானவர். நிச்சயமாக அல்லாஹ் நன்கறிபவன், (யாவற்றையும் சூழ்ந்து) தெரிந்தவன். (49:13)

இறைத்தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் தனது இறுதி ஹஜ்ஜின் பொழுது, ஈதுப் பெருநாள் தினத்தன்று ஆற்றிய உரையில் இவ்வாறு குறிப்பிட்டிருக்கின்றார்கள் :

என்னுடைய மக்களே! கேட்டுக் கொள்ளுங்கள்! உங்களைப் படைத்த இறைவன் ஒருவனே! உங்களது தந்தையும் ஒருவரே! அரபுக்கள் அரபு அல்லாதவரை விட உயர்ந்தவரல்ல என்பதையும், அல்லது அரபு அல்லாதவர் அரபுக்களை விட உயர்ந்தவரல்ல என்பதையும் அறிந்து கொள்ளுங்கள், மேலும் சிவப்பு நிறத்தை உடையவன் கறுப்பனை விடவோ அல்லது கறுப்பு நிறத்தை உடையவன் சிவப்பு நிறத்தவனை விடவோ உயர்ந்தவனல்ல, உங்களில் அவரவர் பெற்றுக் கொண்டிருக்கின்ற நற்செயல்களைத் தவிர. நான் என்னுடைய செய்தியை உங்களுக்கு எடுத்துரைத்து விட்டேனா?

முஸ்லிம் அல்லாதவர்களின் உணர்வுகளுக்கு மரியாதை கொடுப்பதன் மூலம், அவர்களது கண்ணியம் பேணப்படுவதாக இருக்கின்றது, இன்னும் வாதப் பிரதிவாதங்களில் நல்லொழுக்கப்பாட்டைக் கடைபிடிப்பதும், நல்ல முறையில் பேசுவதும், அல்லாஹ்வின் கட்டளைகளுக்குக் கீழ்படிவதிலும் உள்ளவைகளாக இருக்கின்றன என்பதை இறைவனது திருவேதம் இவ்வாறு நமக்குத் தெளிவுபடுத்துகின்றது :

இன்னும், நீங்கள் வேதத்தையுடையவர்களுடன் - அவர்களில் அக்கிரமமாய் நடப்பவர்களைத் தவிர்த்து, (மற்றவர்களுடன்) அழகிய முறையிலேயன்றித் தர்க்கம் செய்யாதீர்கள் "எங்கள் மீது இறக்கப்பட்ட (வேதத்)தின் மீதும் உங்கள் மீது இறக்கப்பட்ட (வேதத்)தின் மீதும் நாங்கள் ஈமான் கொள்கிறோம் எங்கள் இறைவனும் உங்கள் இறைவனும் ஒருவனே - மேலும் நாங்கள் அவனுக்கே முற்றிலும் வழிபட்டு, நடப்போர் (முஸ்லிம்கள்) ஆவோம்" என்று கூறுவீர்களாக. (29:46)

முஸ்லிம் அல்லாதார்கள் தங்களது நம்பிக்கையை நகைப்புக்கிடமானதாக ஆக்கி விடாமல் பார்த்துக் கொள்ளும் உரிமை பெற்றவர்கள். இந்த பூமியில் உள்ள எந்த கொள்கையையும், பிரிவின் மீதும் நான் நம்பிக்கை கொள்வதில்லை என்பது, இஸ்லாமல்லாத ஏனைய நம்பிக்கைகளை ஏற்றுக் கொள்வதைக் காட்டிலும் மிகவும் நீதமானது. இதனையும் நம்மைப் படைத்த இறைவன் தெளிவாகவே தன்னுடைய திருமறையிலே இவ்வாறு கூறுகின்றான் :

"வானங்களிலிருந்தும், பூமியிலிருந்தும் உங்களுக்கு உணவு (வசதிகளை) அளிப்பவன் யார்?" என்று (நபியே!) நீர் கேளும் "அல்லாஹ்தான்! இன்னும் நிச்சயமாக, நாங்களா அல்லது நீங்களா நேர்வழியில் அல்லது பகிரங்கமான வழிகேட்டில் இருப்பவர்கள்" என்றும் கூறும்.

மேலே உள்ள வசனத்தை நாம் கூர்ந்து நோக்கினால், அல்லாஹ் தன்னை நம்பாத மனிதர்களைப் பார்த்து எத்தகைய நயமான முறையில் கேள்வியைத் தொடுக்கின்றான் என்பதை அறிந்து கொள்ள இயலும். முஸ்லிம் எதனை சத்தியம் என்று நம்பிக் கொண்டிருக்கின்றார்களோ, அதனை மாற்று அணியில் உள்ள முஸ்லிமல்லாதவர்கள் நிராகரித்து அதன் மீது சந்தேகப் பார்வை வீசிக் கொண்டிருந்த போதும், தனக்கு எதிரில் உள்ளவனுக்கு கருத்துச் சுதந்திரத்தை வழங்கிய இறைவன், தனது வல்லமை பற்றி சிந்தித்து சத்தியம் எது அல்லது அசத்தியம் எது என்றதொரு முடிவுக்கு அவனே வரும்படித் தூண்டுகின்றது. மேலே உள்ள வசனத்தை அதன் மொழி நடையில் பார்ப்போமானால், வழக்குத் தொடுத்திருக்கும் எதிராளிக்கும் கூட இஸ்லாம் அவனுடைய கருத்தைச் சொல்வதற்கான சந்தர்ப்பத்தை வழங்கி இருப்பதை நாம் உணர்ந்து கொள்ளலாம்.

மேலே உள்ள உதாரணங்கள் யாவும் இந்த உலகத்தில் நடைபெறக் கூடிய விவாதத்தில் மாற்று அணியினருக்குப் புரியும்படிச் செய்வதற்குக் கையாண்ட முறையே அன்றி, வல்ல இறைவன் யார் சத்தியத்தின் பக்கம் இருந்து கொண்டிருக்கின்றார்கள் என்பதையும், இன்னும் அசத்தியத்தில் அமிழ்ந்து

கிடக்கின்றார்கள் என்பதையும் அறியாதவல்ல, இன்னும் பொய்யர்கள் யார் என்பதையும், உண்மை உரைப்பவர்கள் யார் என்பதையும் தெரியாதவனல்லன்.

இன்னும், அல்லாஹ் தன்னுடைய திருமறையில் தன்னை நம்பாத மக்கள் வணங்கக் கூடிய தெய்வங்களை நீங்கள் நிந்தித்துப் பேச வேண்டாம். அவ்வாறு நீங்கள் பேசினால் அவர்களும் பதிலுக்கு உங்களது இறைவனாகிய என்னை அவர்கள் பழிக்கக் கூடும் என்று அறிவுறுத்துகின்றான். இதன் மூலம் மனிதத்தை இறைவன் மதிக்கும்படி முஸ்லிம்களுக்குக் கற்றுக் கொடுப்பதோடு, பிற மனிதர்களின் உள்ளக் கிடக்கை அல்லது விருப்பங்களையும், உணர்வுகளையும் மதிக்கும்படி முஸ்லிம்களுக்கு அறிவுரை கூறுகின்றான்.

ஓரிறைவனை நம்பாத பல தெய்வ வணக்கக் காரர்கள், தங்களுடைய தெய்வங்களை முஸ்லிம்கள் நிந்தித்துப் பேசுவதையும், தூசன வார்த்தைகளால் திட்டுவதையும் செவியுற்றார்கள் என்று சொன்னால், எந்தத் தெய்வத்தை நீங்கள் நிந்தித்தீர்களோ, அந்த தெய்வத்திற்கு முற்றிலும் அவர்கள் வழிப்பட்டு தங்களது வணக்க வழிபாடுகளை தனித்துவப்படுத்தாத போதிலும், பதிலுக்கு அவர்களும் வல்ல ரஹ்மானை தூசன வார்த்தைகளால் ஏசுவதற்கு வாய்ப்பாகி விடும். நீங்கள் அவர்களது மன உணர்வுகளைப் புண்படுத்துவீர்கள் என்று சொன்னால், அவர்களும் உங்களது மன உணர்வுகளைப் புண்படுத்தக் கூடும் என்று முஸ்லிம்களைப் பார்த்துக் கூறுகின்றான். அதன் மூலம் இருவரும் பரஸ்பரம் ஒருவரை ஒருவர் வெறுக்கக் கூடும், பேதங்கள் வளர ஏதுவாகி விடும் என்றும் இறைவன் கூறுகின்றான். அதனை இறைவன் தன்னுடைய திருமறைக் குர்ஆனில் கூறுவதைப் பாருங்கள் :

அவர்கள் அழைக்கும் அல்லாஹ் அல்லாதவற்றை நீங்கள் திட்டாதீர்கள் (அப்படித் திட்டினால்) அவர்கள் அறிவில்லாமல், வரம்பை மீறி அல்லாஹ்வைது திட்டுவார்கள் - இவ்வாறே ஒவ்வொரு சமூகத்தாருக்கும் அவர்களுடைய செயலை நாம் அழகாக ஆக்கியுள்ளோம் - பின்பு அவர்களுடைய மீட்சி அவர்களின் இறைவனிடமே இருக்கிறது. அப்போது அவர்கள் செய்ததை அவர்களுக்கு அவன் அறிவிப்பான். (6:108)

இன்னும், மானிடர்கள் அனைவருக்கும் அவர்களது கண்ணியத்தைக் காப்பதற்கான நடைமுறை ஒன்றை இறைத்தூதர் (ஸல்) அவர்கள் முஸ்லிம்களுக்குக் கற்றுக் கொடுத்து விட்டுச் சென்றுள்ளார்கள். ஒரு முஸ்லிமைக் கடந்து மாற்று மதத்தவரின் மரண ஊர்வலம் சென்றால் கூட நீங்கள் எழுந்து நின்று, இறந்த அந்த ஆத்மாவைக் கண்ணியப்படுத்துமாறு கூறியுள்ளார்கள். அந்த நபிமொழியில் :

நீங்கள் ஒரு மரண ஊர்வலத்தைப் பார்த்து விட்டால், அது உங்களைக் கடந்து செல்லும் வரையில் எழுந்து நில்லுங்கள்.

இறைத்தூதர் (ஸல்) அவர்களின் வாழ்வில் ஒரு நாள் நடந்த நிகழ்ச்சி இது :

ஒருமுறை மரண ஊர்வலம் ஒன்று இறைத்தூதர் (ஸல்) அவர்களைக் கடந்து சென்ற பொழுது, அவர்கள் எழுந்து நின்றார்கள். அப்பொழுது அங்கு கூடியிருந்த அவர்களது தோழர்கள், இந்த மரண ஊர்வலம் ஒரு யூதனுடையது என்று கூறி, இறைத்தூதர் (ஸல்) அவர்கள் அதற்காக எழுந்து நிற்பதையிட்டு ஆட்சேபம் தெரிவித்தார்கள். அப்பொழுது (இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்) : அவனும் ஒரு மனிதனில்லையா? என்று பதிலளித்தார்கள்.

இதே நடைமுறையை இறைத்தூதர் (ஸல்) அவர்களின் தோழர்களும் (இறையருள் பொழிவதாக) முழுமையாகத் தங்களது வாழ்வில் பின்பற்றி நடந்தார்கள். இஸ்லாமிய வரலாற்றில் கதீஸிய்யாப் போர் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. அந்தப் போரின் பொழுது, இறைத்தூதர் (ஸல்) அவர்களின் தோழர்களான ஸஹ்ல் இப்னு ஹனீஃப் (ரலி) மற்றும் கைஸ் இப்னு சஅத் (ரலி) ஆகிய இருவரும் அமர்ந்திருக்கும் பொழுது, ஒரு மரண ஊர்வலம் அவர்களைக் கடந்து சென்றது. அப்பொழுது இவர்கள்

இருவரும் எழுந்து நின்றார்கள். இதனைப் பார்த்த மற்றவர்கள், செல்லுகின்ற மரண ஊர்வலமானது நமக்கு வரி செலுத்தி வரக்கூடிய இப்பகுதி வாழ் முஸ்லிமல்லாத மக்களைச் சார்ந்ததாகும் எனக் கூறி, இருவரும் எழுந்து நின்றதற்கு மற்ற தோழர்கள் ஆட்சேபம் தெரிவித்தார்கள்.

இதே போல ஒரு யூதனுடைய மரண ஊர்வலம் ஒன்று இறைத்தூதர் (ஸல்) அவர்களைக் கடந்து சென்ற பொழுது, இறைத்தூதர் (ஸல்) அவர்கள் எழுந்து நின்றார்கள். அப்பொழுது மற்றவர்கள் அதற்கு ஆட்சேபம் தெரிவிக்கையில், அவனும் ஒரு மனிதனல்லவா? என்று இறைத்தூதர் (ஸல்) அவர்கள் பதிலளித்தார்கள் என்று பதில் கூறினார்கள்.

இன்னும் முஸ்லிம் அல்லாதவர்களின் கண்ணியத்தைக் காத்ததொரு மாபெரும் வரலாற்று நிகழ்ச்சி ஒன்று இஸ்லாமிய சாம்ராஜ்யத்தின் இரண்டாவது கலீபாவான உமர் இப்னு அல் கத்தாப் (ரலி) அவர்களின் ஆட்சிக் காலத்தில் நடைபெற்றது.

அம்ர் இப்னு அல் ஆஸ் (ரலி) அவர்கள் இவர் ஒரு நபித்தோழர். இவர் உமர் (ரலி) அவர்களின் கலிபாவாக இருந்த பொழுது, எகிப்துப் பகுதியின் கவர்னராகப் பணிபுரிந்து வந்தார். அப்பொழுது இவரது மகன் ஒரு கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்த ஒருவரை தன்னுடைய சாட்டையால் அடித்து விடுகின்றார். இந்த வழக்கை அம்ர் இப்னு அல் ஆஸ் (ரலி) அவர்களிடம் கொண்டு சென்றால், ஆட்சி அதிகாரத்தைப் பயன்படுத்தி நம்மீது பொய்க் குற்றம் சுமத்தப்பட்டு விடலாம் என்று பயந்து, நேராக மதீனா வந்த அந்த கிறிஸ்தவர், நேரே உமர் (ரலி) அவர்களிடம் சென்று தனக்கு இழைக்கப்பட்ட கொடுமையைப் புகாராகப் பதிவு செய்கின்றார். புகாரைப் பெற்றுக் கொண்ட உமர் (ரலி) அவர்கள், ஒரு கடிதத்தை எழுதி, அக்கடிதத்தில் அம்ர் இப்னு அல் ஆஸ் (ரலி) அவர்களையும், அவரது மகனையும் உடனே மதீனா வந்து தன்னைச் சந்திக்குமாறு உத்தரவிடுகின்றார்.

உமர் (ரலி) அவர்களின் கடிதத்தைப் பெற்றுக் கொண்ட அம்ர் இப்னு அல் ஆஸ் (ரலி) அவர்கள், தனது மகனை அழைத்து மகனே! நீ ஏதாவது தவறு செய்தாயா? என்று வினவுகின்றார். மகனோ, இல்லை எனப் பதில் கூறுகின்றார். பின் ஏன் உமர் (ரலி) அவர்கள் என்னையும், என்னுடன் எனது மகனையும் அழைத்துக் கொண்டு மதீனாவுக்கு வரச் சொல்ல வேண்டும்? என சிந்தித்தவராக நேரே இருவரும் மதீனாவுக்குச் செல்கின்றார்கள்.

பின் இந்த சம்பவத்தைப் பற்றி அனஸ் (ரலி) அவர்கள் இவ்வாறு விவரிக்கின்றார்கள் :

இறைவன் மீது சத்தியமாக! நாங்கள் அப்பொழுது உமர் (ரலி) அவர்களுடன் அமர்ந்திருந்தோம். அப்பொழுது சாதாரண மக்கள் அணிந்திருக்கும் ஆடையுடன் அம்ர் (ரலி) அவர்கள் உமர் (ரலி) அவர்கள் சமூகம் வந்து நின்றார்கள். உமர் (ரலி) அவர்கள் அம்ர் (ரலி) அவர்களைச் சுற்றியும் நோட்டம் விட்ட பொழுது, அம்ர் (ரலி) அவர்களின் மகன் தனது தந்தைக்குப் பின் ஒழிந்து கொண்டிருந்தார்.

அப்பொழுது உமர் (ரலி) அவர்கள், எங்கே அந்த எகிப்து தேசத்துக்காரர்? என்று வினவிய பொழுது, அந்த மனிதர்.. உமர் அவர்களே! நான் இதோ இங்கிருக்கின்றேன் என்று பதில் கூறினார். இந்த சாட்டையை உங்கள் கைகளில் எடுத்துக் கொண்டு, மேன்மைதங்கிய, மிகப் பெரும் அதிகாரத்திற்குச் சொந்தக்காரரான அந்த மனிதனின் மகனை அடியுங்கள்! என்று கூறினார். சாட்டையை எடுத்த அந்த மனிதர் பலம் கொண்ட மட்டும் அம்ர் இப்னு ஆஸ் (ரலி) அவர்களது மகனை அடித்தார். பின் போதும் நிறுத்துங்கள், போதும் நிறுத்துங்கள் என்று கூறப்பட்டது. மீண்டும் அவரை சாட்டையால் அடிக்குமாறு உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள். பின் அவர் போதுமென்று கருதும் வரையில் சாட்டையால் அவரை

அடித்துக் கொண்டிருந்தார், இதில் அந்தத் தண்டனையைத் தடுத்து நிறுத்துவதற்கு நாங்கள் அனுமதிக்கப்படவில்லை.

பின் உமர் (ரலி) அவர்கள் ஆடைகளற்ற தனது முதுகைக் காண்பித்து, இப்பொழுது சாட்டையைக் கையில் எடுத்துக் கொண்டு, எனது முதுகில் அடியும். எனது அதிகாரத்தின் காரணமாக விழைந்தது தானே இந்தக் கொடுமை, அதன் காரணமாகத் தானே உமக்கு இந்த அநீதம் இழைக்கப்பட்டிருக்கின்றது, எனவே, இந்தத் தண்டனையைப் பெற்றுக் கொள்வதில் எனக்கும் பங்கிருக்கின்றது எனக் கூறி தனது முதுகைத் திறந்து காட்டிய பொழுது, அந்த மனிதர் கூறினார், உமரே! நான் திருப்தியடைந்து விட்டேன், எனது கோபம் தணிந்து விட்டது. யார் என் மீது அநீதம் இழைத்து என்னை அடித்தாரோ, அவரை நான் தண்டித்து விட்டேன். அப்பொழுது உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள், நீங்கள் என்னை அடிக்கலாம், உங்களுக்குப் போதுமென்ற வரையிலும் நீங்கள் என்னை அடிக்கலாம், அதுவரை நான் பொறுத்திருப்பேனே தவிர நான் தடுத்து நிறுத்த மாட்டேன் என்றும் கூறினார்.

பின், அம்ர் (ரலி) அவர்களே! இவர்களது தாய்மார்கள் இவர்களைச் சுதந்திரமானவர்களாகப் பெற்றிருக்கும் பொழுது, எப்பொழுதிலிருந்து நீங்கள் இவர்களை அடிமைப்படுத்தினீர்கள் என்று கேட்டார்கள். மன்னிப்புக் கோரிய அம்ர் (ரலி) அவர்கள், நிச்சயமாக உமர் (ரலி) அவர்களே! என்ன நடந்தது என்பது எனக்குத் தெரியாது. பின் அந்த எகிப்தியனின் பக்கம் திரும்பிய உமர் (ரலி) அவர்கள், இப்பொழுது நீங்கள் செல்லாம். உங்கள் மீது என்ன அநீதம் இழைக்கப்பட்டாலும் அங்கிருந்து கொண்டு எனக்குப் புகார் அனுப்புங்கள், நீங்கள் நேர்வழி காட்டப்படுவீர்கள் என்று கூறினார்கள்.

மேலே நடந்த இந்த வரலாற்றுச் சம்பவத்தை தனது நீதி நெறிமுறைகளுக்கு உதாரணமாக்கி ஆட்சி புரிந்த உமர் (ரலி) அவர்கள், தான் ஆட்சிப் பொறுப்பேற்றுக் கொண்ட பொழுது, மேலே உள்ள சம்பவத்தைக் கருத்தில் கொண்டதொரு உரையை அப்பொழுது நிகழ்த்தினார். அப்பொழுது அவர் எதனைச் சொன்னரோ, அதனை வழுவாது தன்னுடைய ஆட்சியின் பொழுது, நீதிவழுவாது ஆட்சி புரிந்தும் காட்டினார்.

எளியோரை வாழ வைப்பதும், வலியோரைத் தாழ்த்துவதும் தான் என்னுடைய ஆட்சியின் முக்கிய அடிப்படைக் குறிக்கோளாகும் என்றார் உமர் (ரலி) அவர்கள். ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட பொழுது, அவர் எதனைக் கூறினாரோ, அதனைத் தன்னுடைய ஆட்சிக் காலத்தில் நிறைவேற்றிக் காட்டினார் என்பதை எகிப்திலிருந்து புலம் பெயர்ந்து, நீதி கிடைக்கும் என நம்பி மதீனாவை நோக்கி வந்த அந்த கிறிஸ்தவரின் நம்பிக்கை ஒன்றே, உமர் (ரலி) அவர்களின் நீதிமிக்க ஆட்சிக்கு சான்றாகத் திகழ்கின்றது.

அரேபிய பூமியை இஸ்லாம் ஆட்சி செய்து கொண்டிருந்த அந்த கால கட்டத்தில் தான் ரோமப் பேரரசும், பாரசீகப் பேரரசும் கோலோச்சிக் கொண்டிருந்தன. நாகரீகமும் அங்கிருந்து தான் ஊற்றெடுத்துக் கிளம்பியது என்றும் இன்றைய வரலாறுகள் பெருமைப்பட்டுக் கொண்டிருந்த கால கட்டத்தில், ஒரு சாதாரண மனிதன் ஆட்சிப் பொறுப்பில் இருக்கும் ஆட்சியாளருக்கு எதிராகப் புகார் தொடுப்பது என்பது கனவிலும் நினைத்துப் பார்க்க இயலாத ஒன்று. அதனைப் போலவே, நீதி கிடைக்கும் என்பது நினைத்துப் பார்க்க இயலாத ஒன்று. ஆனால், பெரும்பான்மையினராக முஸ்லிம்கள் ஆட்சிப் பொறுப்பில் இருக்கும் நிலையில், ஆட்சிப் பொறுப்பில் உள்ளவர் மீது குற்றம் சுமத்தி, அவரது கரங்களாலேயே குற்றப்பரிகாரம் தேடிச் செல்லும் அளவுக்கு இஸ்லாமியச் சட்டங்கள் மிகப் பரந்த அளவில் நீதி செலுத்திக் கொண்டிருந்தன. நீதிக்கு முன்பாக யாரையும் அது பாகுபடுத்திப் பார்ப்பதில்லை.

மனிதர்கள் எந்தக் குலத்தவராகவும், இனத்தவராகவும், மொழி இனராகவும் இருப்பினும் சட்டத்தின் முன் அனைவரையும் சமமாகவே கருதியது. தனது கொள்கையைப் பின்பற்றாத போதிலும், மனிதர்கள் அனைவரும் சட்டத்தின் முன் சமமமே! என்று நீதியை நிலைநாட்டிக் காட்டிய பெருமை இஸ்லாத்திற்கு அன்றி, வேறு எந்தக் கொள்கைகளிடமும் இதனைக் காண முடியாததொரு வரலாற்று உண்மையாகும்.

### மத மற்றும் வழிபாட்டுச் சுதந்திரம்

தனது கொள்கைகளை ஏற்றுக் கொள்ளாத யாரையும் நிர்ப்பந்தப்படுத்தி, இஸ்லாத்தினை ஏற்றுக் கொள்ளுமாறு இஸ்லாம் தூண்டுவதில்லை, மதம் மாற்றுவதில்லை. அவர்கள் அவர்களது சொந்த மதத்திலேயே இருந்து கொள்ளலாம், எந்தவிதத்திலும் இஸ்லாம் அவர்களைக் கட்டாயப்படுத்துவமில்லை, மதம் மாற்றுவதுமில்லை. இந்த மதச் சுதந்திரத்தை இஸ்லாம் தனது திருமறைக் குர்ஆனிலும், இன்னும் நபிமொழித் தொகுப்புகளிலும் தெளிவாகவே பிரகடனம் செய்திருக்கின்றது. இறைவன் தனது திருமறையிலே இறைத்தூதர் (ஸல்) அவர்களைப் பார்த்து கூறுகின்றான் :

மேலும், உம் இறைவன் நாடியிருந்தால், பூமியிலுள்ள யாவருமே ஈமான் கொண்டிருப்பார்கள். எனவே, மனிதர்கள் யாவரும் முஃமின்களாக (நம்பிக்கை கொண்டோராக) ஆகிவிடவேண்டுமென்று அவர்களை நீர் கட்டாயப்படுத்த முடியுமா? (அத்தியாயம் யூனுஸ் : வசன எண் 99)

இன்னும் இறைத்தூதர் (ஸல்) அவர்கள், மக்களுக்கு இரண்டு விதமான உரிமைகளை வழங்கினார்கள். ஒன்று அவர்கள் இஸ்லாத்தினை ஏற்றுக் கொள்வது, அல்லது அவர்களது பழைய மதத்திலேயே இருந்து கொள்வது. அதாவது, இஸ்லாமிய ஆட்சி முறையை ஏற்றுக் கொண்டு, அதனோடு ஒப்பந்தம் ஒன்றையும் செய்து கொள்வதன் மூலம், நாட்டின் பிரஜைகளாக ஆகி விடுவதுடன் அவர், தனது மத மற்றும் வழிபாட்டுச் சுதந்திரத்தையும் பெற்றுக் கொண்டு, பாதுகாப்பையும், மதவழிபாடு மற்றும் சொத்து ஆகியவற்றில் சுதந்திரப் போக்கையும் பெற்றுக் கொண்டவராகி விடுகின்றார். இதன் மூலம் அவர்களது ஒப்பந்தத்தின் மூலமாக, அல்லாஹ்வும், அவனது தூதர் (ஸல்) அவர்களும் வாக்களித்த பாதுகாப்பை பெற்றுக் கொண்டார்கள். இந்த காரணத்திற்காகவே முஸ்லிம் அல்லாதவர்கள் திம்மிகள் - அதாவது பாதுகாப்பு வரி செலுத்துபவர்கள் என்ற பெயரைப் பெற்றார்கள். (Islam and Non-Muslims, pp.60-61)

புரைதா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள் :

வெளியிடங்களுக்கு படைகளை அனுப்பும் பொழுதெல்லாம், இறைத்தூதர் (ஸல்) அவர்கள் தனது தளபதிகளையும், தனது தோழர்களையும் பார்த்து, உங்களது சொந்த நடத்தைகளில் இறைவனைப் பயந்து கொள்ளுங்கள், இன்னும் உங்களது தோழர்களை நல்லமுறையில் நடத்துங்கள் என்று கூறி விட்டு, இவ்வாறு கூறக் கூடியவர்களாக இருந்தார்கள் :

போர் செய்வதற்கு புறப்படும் பொழுது, அல்லாஹ்வுக்காக போர் செய்வதற்காகவே கிளம்புங்கள். இன்னும் அல்லாஹ்வின் மீது நம்பிக்கை கொள்ளாதவர்கள் மீது போர் புரியுங்கள். இன்னும் போர் செய்யுங்கள், ஆனால், கொடுமைக்காரர்களாகவோ, அல்லது கொலைகாரர்களாகவோ, அங்கவீனத்தை ஏற்படுத்துபவர்களாகவோ அல்லது குழந்தைகளைக் கொல்லக் கூடியவர்களாகவோ மாறி விட வேண்டாம். இறைநம்பிக்கை கொள்ளாத உங்களது எதிரிகளைச் சந்திக்கும் பொழுது அவர்களிடம் மூன்று விதமான கோரிக்கைகளை முன் வையுங்கள் : முதலாவது, அவர்களை இஸ்லாத்தினை ஏற்றுக் கொள்ளுமாறு அழைப்பு விடுங்கள், அதனை ஏற்றுக் கொண்டால் அவர்களது இடத்தை விட்டு இஸ்லாமிய ஆட்சிப் பிரதேசத்திற்குள் குடிபெயர்ந்து விடுமாறு கூறுங்கள், அவ்வாறு அவர்கள் செய்யச் சம்மதித்தால், இவர்களைப் போலக் குடிபெயர்ந்து வந்தவர்களைப் போலவே இவர்களுக்கும் சில

முன்னுரிமைகளும் இன்னும் கடமைகளும் உள்ளன. அவ்வாறு அவர்கள் தங்களது வாழ்விடங்களை விட்டு இஸ்லாமிய ஆட்சிப் பகுதிகளுக்கு குடிபெயர்ந்து வரச் சம்மதிக்கவில்லையெனில், மற்றவர்களைப் போலவே அவர்களது அந்தஸ்தும் கணிக்கப்படும். இன்னும் அவர்கள் இறைச் சட்டங்களுக்கு உட்பட்டவர்களுமாவார்கள். அவர்கள் ஜிஹாத் போன்ற இறைப் போர்களில் கலந்து கொள்ளவில்லை எனில், வெற்றி கொள்ளப்பட்ட பகுதிகளில் கைப்பற்றப்படும் கனீமத் பொருட்களிலிருந்து அவர்களுக்கு எந்தப் பங்கும் வழங்கப்பட மாட்டாது, அதில் அவர்களுக்கு எந்தப் பங்கீடும் கிடையாது. இரண்டாவதாக, அவர்களிடம் ஜிஸ்யா எனும் வரியை செலுத்தும்படிக் கூறுங்கள், அதற்கு அவர்கள் சம்மதிக்கும்பட்சத்தில் அவர்களிடம் போர் செய்ய வேண்டாம். மூன்றாவதாக, இதில் எதனையும் அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை என்றால், இறைவனிடம் உதவியைக் கோருங்கள், அவர்களிடம் போர் செய்யுங்கள். (Sahih Muslim, v.2,p.1357)

(இஸ்லாமிய) மார்க்கத்தில் (எவ்வகையான) நிர்ப்பந்தமுமில்லை வழிகேட்டிலிருந்து நேர்வழி முற்றிலும் (பிரிந்து) தெளிவாகிவிட்டது. ஆகையால், எவர் வழி கெடுப்பவற்றை நிராகரித்து அல்லாஹ்வின் மீது நம்பிக்கை கொள்கிறாரோ அவர் அறுந்து விடாத கெட்டியான கயிற்றை நிச்சயமாகப் பற்றிக் கொண்டார் - அல்லாஹ் (யாவற்றையும்) செவியுறுவோனாகவும் நன்கறிவோனாகவும் இருக்கின்றான். (2:256)

மேற்கண்ட இறைவசனத்தில் வருகின்ற இஸ்லாமிய மார்க்கத்தில் (எவ்வகையான) நிர்ப்பந்தமுமில்லை என்ற வரிகளைக் குறித்து, அமெரிக்க அறிஞரான எட்வின் கால்காரி அவர்கள் இவ்வாறு கூறுகின்றார் :

இறைவேதமான குர்ஆனில் ஒரு வசனம் வருகின்றது, அது தன்னகத்தே சத்தியத்தையும் ஞானத்தையும் நிறைத்து வைத்திருக்கின்றது என்பது முஸ்லிம்கள் அனைவருக்கும் அது அறிந்த ஒன்று. அவர்கள் அறிந்து கொண்டிருப்பது போலவே மற்றவர்களும் அதனை அறிந்து கொள்ள வேண்டும். (வேதங்கள் என்று சொல்லக் கூடிய பல வேதங்கள் இருந்தாலும்) திருமறைக் குர்ஆன் ஒன்றே, மார்க்கத்தில் எந்தவித நிர்ப்பந்தமுமில்லை என்று தெளிவாகச் சுட்டிக் காட்டுகின்றது. The Near East : Society and Culture, pp.163-164)

மேற்கண்ட இந்த வசனம் சில மதீனத்து அன்ஸார்களைக் குறித்து இறங்கியது. அவர்களுக்கு வயது வந்த ஆண் மற்றும் பெண் மக்கள் இருந்தனர். அவர்கள் கிறிஸ்தவர்களாகவோ அல்லது யூதர்களாகவோ இருந்தனர். தங்களது பிள்ளைகளை இஸ்லாத்திற்குள் வந்து விடுமாறு அவர்கள் வற்புறுத்துவதைக் கண்ட இறைவன், அவ்வாறு செய்ய வேண்டாம், அவர்கள் மீது எந்த நிர்ப்பந்தத்தையும் திணிக்க வேண்டாம் என்று முஸ்லிம்களுக்கு அறிவுறுத்துவதற்காகவே மேற்கண்ட வசனம் இறக்கியருளப்பட்டது. (Al-Wahidi, History of the Revelation, pp.114-116)

மேற்கண்ட வசனத்தையும், அது இறங்கிய வரலாற்றுச் சூழ்நிலைகளையும் சிந்தித்துப் பார்த்தோமானால், கட்டாயப்படுத்தி ஒருவரை இஸ்லாமிய மார்க்கத்திற்குள் இணைப்பதை இஸ்லாம் ஏற்றுக் கொள்வதில்லை என்பது புலனாகின்றது. இன்னும் பெற்றார்கள் கூட தங்களது பிள்ளைகளைக் கட்டாயப்படுத்தி, மதம் மாற்றம் செய்யக் கூடாது. இன்னும் பெற்றோர்கள் தனது பிள்ளைகளுக்கு நல்லதை நாடினால், இன்னும் பிள்ளைகள் இஸ்லாமல்லாத வேறொரு மதத்தின் உறுப்பினர்களாக இருந்து கொண்டிருக்கின்ற நிலையில், அதாவது அந்தக் குழந்தைகள் அந்த மதத்தை விரும்பி ஏற்றுக் கொள்ளாத பட்சத்திலும் அவர்களை அந்த மதத்தில் நீடிக்கவிடுவது முஸ்லிம் பெற்றோர்களுக்கு தகுந்ததல்ல. தங்களது பிள்ளைகளை இஸ்லாத்திற்குள் கொண்டு வந்து விடலாம். உதாரணமாக,

முந்தைய காலத்தில், எந்தக் குழந்தையும் உயிரோடு பிறப்பதில்லை அல்லது பிறந்தாலும் இறந்து விடுகின்றதென்றால், அந்தப் பெற்றோர்கள் பிள்ளை உயிரோடு இருந்தால் அதனை நான் கிறிஸ்தவனாகவோ அல்லது யூதனாகவோ மாற்றுவேன் என இறைவன் மீது நேர்ச்சை செய்வார்கள். இவ்வாறு நேர்ச்சை செய்து கொண்ட பின் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட முஸ்லிம் பெற்றோர்கள் தங்களது பிள்ளைகளை இறைவனுக்கு நேர்ச்சை செய்து விட்டோமோ என்பதற்காக அவர்களது பழைய மதத்திலேயே தங்களது பிள்ளைகளை விட்டு விட வேண்டும் என்பது அவசியமில்லை. இத்தகைய நேர்ச்சைகளை தங்களது பிள்ளைகள் மீது கட்டாயப்படுத்த வேண்டிய அவசியமுமில்லை. (Non-Muslims in Muslims Society, pp.18-19)

(நபியே!) இன்னும் நீர் கூறுவீராக. "இந்தச் சத்திய (வேதம்) உங்கள் இறைவனிடமிருந்து (வந்து)ள்ளது" ஆகவே, விரும்புபவர் (அதனை) நிராகரிக்கட்டும். அநியாயக் காரர்களுக்கு (நரக) நெருப்பை நிச்சயமாக நாம் சித்தப்படுத்தியுள்ளோம் (அந்நெருப்பின்) சுவர் அவர்களைச் சூழ்ந்து கொள்ளும் அவர்கள் (தண்ணீர் கேட்டு) இரட்சிக்கத் தேடினால் உருக்கப்பட்ட செம்பு போன்ற தண்ணீரைக் கொண்டே இரட்சிக்கப்படுவார்கள். (அவர்களுடைய) முகங்களை அது சுட்டுக் கருக்கி விடும் மிகக் கேடான பானமாகும் அது! இன்னும், இறங்கும் தலத்தில் அதுவே மிகக் கெட்டதாகும். (18:29)

இஸ்லாமானது தனது கொள்கையை ஏற்றுக் கொள்ளாதவர்களுக்கு அவர்களது மதத்தையும், அதன் ஆச்சாரங்களையும் பின்பற்றுவதற்கான உரிமையை மட்டும் வழங்கி விட்டு நின்று விடவில்லை. மாறாக, அதனையும் தாண்டி அவர்கள் தங்களது மத வழிபாடுகளைப் பூரண சுதந்திரத்துடன் நடத்திக் கொள்வதற்கும், மத வழிபாட்டுத் தளங்களையும் பாதுகாத்துக் கொள்வதற்கும் கூட தன்னுடைய சகிப்புத் தன்மையை காட்டுவதோடு, அதனைத் தன்னுடைய திருமறைக் குர்ஆனிலும் பதிவு செய்து சட்டமாக்கி வைத்திருக்கின்றது என்பதைக் கீழ்க்காணும் குர்ஆன் வசனம் நமக்கு எடுத்தியம்புகின்றது :

இவர்கள் (எத்தகையோரென்றால்) நியாயமின்றித் தம் வீடுகளை விட்டு வெளியேற்றப்பட்டார்கள் 'எங்களுடைய இறைவன் ஒருவன்தான்' என்று அவர்கள் கூறியதைத் தவிர (வேறெதுவும் அவர்கள் சொல்லவில்லை). மனிதர்களில் சிலரைச் சிலரைக் கொண்டு அல்லாஹ் தடுக்காதிருப்பின் ஆசிரமங்களும் சிறிஸ்தவக் கோயில்களும், யூதர்களின் ஆலயங்களும், அல்லாஹ்வின் திரு நாமம் தியானிக்கப்படும் மஸ்ஜிதுகளும் அழிக்கப்பட்டுப் போயிருக்கும். அல்லாஹ்வுக்கு எவன் உதவி செய்கிறானோ, அவனுக்கு திடனாக அல்லாஹ்வும் உதவி செய்வான். நிச்சயமாக அல்லாஹ் வலிமை மிக்கோனும், (யாவரையும்) மிகைத்தோனுமாக இருக்கின்றான்.

இறைத்தூதர் (ஸல்) அவர்களது இறப்பிற்குப் பின் ஆட்சிப் பொறுப்பிற்கு வந்த இஸ்லாமிய ஆட்சியாளர்கள் பலர், இறைப்போர்களுக்குச் சென்ற தங்களது தளபதிகளுக்கு மேற்கண்ட இறைக்கட்டளையை வலியுறுத்தி, அதனைப் பேணி நடக்குமாறு அறிவுறுத்தி போருக்கு அனுப்பி வைத்தனர்.

உதாரணமாக..!

உஸாமா (ரலி) அவர்களைப் போருக்கு அனுப்பி வைத்த பொழுது, அபுபக்கர் (ரலி) அவர்கள் இவ்வாறு கட்டளை பிறப்பித்து அனுப்பி வைத்தார்கள்.

உஸாமா (ரலி) அவர்களே..! உங்களுக்கு நான் பத்துக் கட்டளைகள் குறித்து அதனைப் பேணி நடக்குமாறு கூறுகின்றேன். பெண்களையோ அல்லது குழந்தைகளையோ அல்லது வயதானவர்களையோ கொலை செய்து விடாதீர்கள். கனி தரும் மரங்களை வெட்டி வீழ்த்தி

விடாதீர்கள். மக்கள் குடியிருக்கும் வீடுகளை அழித்து தரைமட்டமாக்கி விடாதீர்கள். கால்நடைகளையோ அல்லது ஒட்டகங்களையோ உணவுக்காகவன்றி நீங்கள் கொன்று விடாதீர்கள், பேரீச்சம் மரங்களை வெட்டாதீர்கள் அல்லது எரித்து விடாதீர்கள். சதிகளிலும், நயவஞ்சகத்திலும் ஈடுபடாதீர்கள். நீங்கள் செல்லும் இடங்களில் தங்களை இறைவனுக்காகவே அற்பணித்து வாழக் கூடியவர்களைக் காண்பீர்கள், அவர்களை ஒன்றும் செய்யாது, தியானத்திலேயே இருக்கும்படி விட்டு விடுங்கள் என்று கூறி உஸாமா (ரலி) அவர்களை அனுப்பி வைத்தார்கள் அபுபக்கர் (ரலி) அவர்கள். (Tarikh At-Tabari, v.3, p.210)

இன்னும் உமர் (ரலி) அவர்கள் தனது ஆட்சிக் காலத்தில் ஜெருஸலம் மக்களுக்கு இவ்வாறு ஒரு பிரகடனத்தை வெளியிட்டார்கள்.

அல்லாஹ்வின் அடிமையும், இறைநம்பிக்கையாளர்களின் தலைவருமான உமர் இப்னு கத்தாபாகிய நான் ஜெருஸலம் - இலியா மக்களுக்கு எழுதிக் கொண்ட பாதுகாப்புப் பிரகடனம் : உங்களது பாதுகாப்புக்கு உத்தரவாதம் தரப்படுகின்றது, உங்களது உடமைகள், சர்ச்சுகள், உங்களது சிலுவைகள், இன்னும் உங்களிடம் உள்ளவைகள், உங்களில் நோய் வாய்ப்பட்ட அல்லது நல்ல நிலையில் உள்ளவர்கள், இன்னும் உங்களது சமூகத்தில் உள்ள அனைவருக்கும் இதன் மூலம் பாதுகாப்பு உத்தரவாதம் தரப்படுகின்றது. உங்களது சர்ச்சுகள் கைப்பற்றப்படவோ அல்லது அழித்தொழிக்கவோ பட மாட்டாது, அதிலிருந்து எதனையும் எடுத்துக் கொள்ளப்படவும் மாட்டாது. அவற்றில் உள்ள சாதனங்கள் அலலது சிலுவைகள் அல்லது செல்வங்கள் என எதனையும் நாங்கள் எடுத்துக் கொள்ள மாட்டோம். மதமாறும் படியும் நாங்கள் உங்களை வற்புறுத்த மாட்டோம் அல்லது மாறவில்லை என்பதற்காக உங்களைத் தொந்தரவும் செய்ய மாட்டோம். இன்னும் உங்களை யூதர்கள் ஆக்கிரமிக்கும்படி விட்டு விடவும் மாட்டோம் என்று அந்தப் பிரகடனத்தில் தெளிவாக்கி இருந்தார்கள். (Tarikh At-Tabari, v.3, p.159)

இஸ்லாமிய ஆட்சியாளர்கள் கிறிஸ்தவர்களுக்கும், யூதர்களுக்கு தங்களது இத்தகைய பிரகடனங்கள் மூலம் அவர்களுக்கு மதச் சுதந்திரத்தையும், வழிபாட்டு உரிமையையும் வழங்கினார்கள். இத்தகைய உரிமைகளை இஸ்லாமிய ஆட்சியாளர்களான அபுபக்கர் (ரலி) மற்றும் உமர் (ரலி) ஆகியோர்களது காலத்தில் முழுமையாகவும், நிறைவாகவும் பெற்று மாற்று மதத்தவர்கள் வாழ்ந்தார்கள் என்பது வரலாற்று உண்மையாகும். அதனைப் போலவே உமர் (ரலி) அவர்களுக்கும் ஜெருஸலம் - இலியா மக்களுக்கும் இடையே பிரசுரிக்கப்பட்ட பிரகடனமும் அமைந்தது. (Al-Qardawi Y. Religious Minorities : The Islamic Solution, p.13)

இன்னும் முஸ்லிம்கள் கிறிஸ்தவர்களின் சர்ச்சுகளையும் பாதுகாத்தார்களே ஒழிய, அதனை என்றுமே அழிக்க முற்பட்டதில்லை. முழுப் பெர்சியாவின் பங்குத் தந்தையும், ஆர்ச் பிஷப்புகளின் தலைவருமான சிமோன் என்பவருக்கு, நெஸ்டோரியன் பேட்ரியார்க் ஜியோஃப் (3) என்பவர் எழுதிய கடிதத்தில் இவ்வாறு குறிப்பிடுகின்றார் :

அரபுக்கள், அவர்களுக்கு அல்லாஹ் இந்த முழு உலகத்தின் அதிகாரத்தையும் வழங்கினான், அவர்கள் எந்தளவு வளமானவர்கள் என்பதை நீங்கள் அறிவீர்கள், இன்னும் அவர்கள் உங்களுடன் தான் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். இருந்த போதிலும், அவர்கள் தங்களது அதிகாரத்தைக் கொண்டு கிறிஸ்தவர்களின் கண்ணியத்தைக் குலைக்க முற்பட்டதில்லை. அதற்குப் பதிலாக நம் மதத்தின் மீது அவர்கள் கரிசனையே கொண்டிருக்கின்றார்கள், நம்முடைய மதகுருமார்களையும், இன்னும் நம்முடைய சந்நியாசிகளையும் கண்ணியப்படுத்துகின்றார்கள், இன்னும் நம்முடைய சர்ச்சுகளுக்கும், மடங்களுக்கும்

தாராளமாக நன்கொடை வழங்குகின்றார்கள், என்றும் அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுக் கூறியுள்ளார். (Arnold T. Invitation to Islam, p. 102)

நேர்வழி பெற்ற ஆட்சியாளர்களுக்குப் பின் வந்த கலீபாக்களில் ஒருவரான அல் வலீத் பின் அப்துல் மலிக் என்பவர், கிறிஸ்தவர்களின் சர்ச்சின் ஒரு பகுதியைப் பள்ளிவாசலுடன் இணைத்துக் கொண்டார். அல் வலீத் அவர்களை அடுத்து ஆட்சிப் பொறுப்புக்கு வந்த உமர் இப்னு அப்துல் அஜீஸ் அவர்களிடம் இந்த வழக்கை கிறிஸ்தவர்கள் கொண்டு வந்த பொழுது, தனக்கு முந்தைய ஆட்சியாளரான அல் வலீத் அவர்கள் கைப்பற்றி பள்ளிவாசலுடன் இணைத்த சர்ச்சின் நிலப்பகுதியை மீண்டும் கிறிஸ்தவர்களிடம் வழங்குமாறு அந்தப் பகுதி கவர்னருக்கு உமர் இப்னு அப்துல் அஜீஸ் உத்தரவிடுகின்றார்கள். இன்னும் அந்தப் பகுதிக்கு ஈடாக பணத்தைப் பெற்றுக் கொள்ள அவர்கள் முன்வரும் பட்சத்தில், அவர்கள் திருப்திபடும் அளவுக்கு அதனை ஈடுசெய்யும்படியும் தனது கவர்னருக்கு அறிவுறுத்துகின்றார்கள். (Non-Muslims in Muslim Society, p.32)

ஜெருஸலத்தில் உள்ள சுலைமான் ஆலயத்தின் ஒரு பகுதியை யூதர்கள் புனிதமானதாக வழிபட்டு வருவது நாமெல்லாம் அறிந்த ஒன்று. உதுமானிய சாம்ராஜ்யத்தின் கலீஃபாவாக சுல்தான் சுலைமான் அவர்கள் ஆட்சிப் பொறுப்பில் இருந்த பொழுது, யூதர்கள் புனிதமாகக் கருதிய அந்தப் பகுதி முழுவதும் குப்பைக் கிடங்காக மாறி அந்தப் பகுதியையே குப்பைக்குள் அமிழ்ந்திருந்தது. சுல்தான் சுலைமான் அவர்கள் ஜெருஸலத்தை நிர்வகித்துக் கொண்டிருந்த தனது கவர்னருக்கு ஒரு கடிதத்தை அனுப்பி, அந்தப் பகுதியைச் சுற்றிலும் உள்ள குப்பைகளை அகற்றி, அவற்றைப் சுத்தப்படுத்தி, யூதர்களின் வணக்கத்திற்குத் திறந்து விடுமாறு உத்தரவிடுகின்றார்கள். (Tolerance : The West and Muslims, p.67)

இஸ்லாமிய வரலாற்றை ஆராய்ந்து பார்க்கக் கூடிய மேற்கத்திய வரலாற்று ஆசிரியர் காய்தல் உவத்தலின்றி, இஸ்லாம் மாற்று மதத்தவர்களிடம் காட்டி வரக் கூடிய மத சகிப்புத் தன்மையைப் போற்றி, இஸ்லாத்தின் உண்மைத்துவத்திற்கு நற்சான்று வழங்கியும் உள்ளார்கள்.

குஸ்தவ் லீ பான் என்பவர் கூறுகின்றார் :

கிறிஸ்தவர்கள் மீதும், யூதர்கள் மீதும் இறைத்தூதர் (ஸல்) அவர்கள் காட்டிய மத சகிப்புத் தன்மை மிகவும் உயர்ந்தது. இஸ்லாத்திற்கு முன் தோன்றிய மதங்களான குறிப்பாக யூதம், கிறிஸ்த்தவம் ஆகியவை கூட இந்த நல்லெண்ணத்தைக் காட்டவில்லை. இறைத்தூதர் (ஸல்) அவர்களின் வழி வந்த கலீபாக்கள் கூட இந்த நல்லெண்ணத்தைக் கடைபிடித்தார்கள், மத சகிப்புத்தன்மையைக் காட்டினார்கள் என்பதை இஸ்லாத்தின் மீது சந்தேகம் கொள்பவர்கள் கூட, இஸ்லாமிய வரலாற்றை ஆராய்ந்து பார்ப்பார்களானால், அதன் உண்மையைப் புரிந்து கொள்வார்கள். (Arab Civilization, p.128)

மேற்கத்திய அறிஞரான சர் தாமஸ் அர்னால்டு என்பவர் கூறுகின்றார் :

மற்ற இனச் சிறுபான்மையினரைத் திட்டமிட்டு முஸ்லிம்கள் மதம் மாற்றினார்கள் என்ற செய்தியை நாம் கேள்விப்பட முடியவில்லை அல்லது ஒருங்கிணைந்த திட்டங்களின் மூலமாக கிறிஸ்தவர்களை கூட்டாகக் கொலை செய்யவும் அவர்கள் திட்டமிட்டதாகத் தெரியவில்லை. பெர்டினாண்டு என்ற ஸ்பெயின் ராணுவ அமைச்சருடன் இணைந்து கொண்டு ராணி இஸபெல்லா சிறுபான்மை முஸ்லிம்களைக் கூண்டோடு அழித்தது போல அல்லது கிறிஸ்துவத்தின் ஒருபிரிவான பிராட்டஸ்டன்டைப் பின்பற்றுவது கொடுங் குற்றம் என்று அறிவித்த பிரான்சின் லூயிஸ் (14) போலவோ அல்லது 350 வருடங்களாக யூதர்களைத் தன்னாட்டிலிருந்து நாடு கடத்தி வைத்திருந்ததே பிரிட்டன் அதைப்

போலவோ, இஸ்லாமிய கலீபாக்களில் எவராவது ஒருவர் தங்களுடைய பூமியில் வாழ்ந்த சிறுபான்மை யூத, கிறிஸ்தவர்களிடம் நடவடிக்கை எடுக்க நினைத்திருந்தால் எடுத்திருக்க முடியும்.

இந்த நேரத்தில் மேற்கத்திய சர்ச்சுகள் உலகின் மற்ற பாகங்களில் இருந்த சர்ச்சுகளுடன் சரியான உறவைக் கொண்டிருக்கவில்லை, முற்றாக துண்டிக்கப்பட்டிருந்தது. கிறிஸ்தவர்களும் ஒரு இனம் என்ற அடிப்படையில், உலகின் ஆதரவு அவர்களுக்கு இல்லாமலிருந்தது. இன்றைக்கு அவர்கள் அழியாமல், கிறிஸ்தவ இனம் நிலைத்திருப்பது ஒன்றே, இஸ்லாமியர்கள் காட்டிய மத சகிப்புத் தன்மைக்குச் சான்றாக உள்ளது. (Invitation to Islam, p.98-99)

அமெரிக்க எழுத்தாளர் லோத்ராப் ஸ்டோட்டர்ட் என்பவர் கூறுகின்றார் :

கலீபா உமர் (ரலி) அவர்கள் கிறிஸ்தவர்களின் புனிதத் தளங்களின் பாதுகாப்பில் அதிகப்படியான கவனத்தைச் செலுத்தினார். அவருக்குப் பின் வந்தவர்களும் கூட உமர் (ரலி) அவர்களின் வழிமுறையையே பின்பற்றினார்கள். ஒவ்வொரு வருடமும் புனித நகரமான ஜெருஸலத்தை தரிசிக்க வரக் கூடிய கிறிஸ்தவ யாத்திரீகர்களுக்கு முஸ்லிம்கள் எந்த இடையூறும் தந்ததில்லை. Stoddard LW, The islamic World at Present, v.1, pp.13-14)

உண்மை என்னவென்றால், சொந்த இனத்தவர்களின் ஆட்சியின் கீழ் வாழ்ந்த கிறிஸ்தவர்கள் பெற்ற உரிமைகளை மற்றும் சகிப்புத் தன்மைகளை விட, அதிகமாகவே முஸ்லிம்களின் ஆட்சியின் கீழ் வாழ்ந்த மற்ற இனத்தவர்கள் பெற்றுக் கொண்டார்கள்.

ரிச்சர்ட் ஸ்டெப்பின்ஸ் என்பவர் இஸ்லாமிய இறுதி கிலாபத் கோலோச்சிய துருக்கியில் வாழ்ந்த சிறுபான்மை கிறிஸ்தவர்கள் அனுபவித்த உரிமைகள் பற்றி இவ்வாறு குறிப்பிடுகின்றார் :

அவர்கள் (துருக்கியர்கள்) ரோம் கத்தோலிக்க கிறிஸ்தவர்கள் மற்றும் கிரேக்க பழமைவாத கிறிஸ்தவர்கள் ஆகிய அனைவரையும் தங்களது ஆட்சியின் எல்லைப் பகுதிக்குள் வாழ அனுமதித்ததோடு, அவரவர் கொள்கைப்படி வாழவும், பின்பற்றி நடக்கவும் அனுமதித்தனர். இன்னும் கான்ஸ்டான்டின் நோபிள் நகரம் மற்றும் அது போன்ற பல நகரங்களில் எவ்வாறு அவர்களது மதச் சடங்குகளை நடத்திக் கொண்டிருந்தார்களோ அவ்வாறே துருக்கியிலும், அவர்களது மதச் சடங்குகளை நிறைவேற்ற அனுமதித்தார்கள். ஆனால், இதற்கு நேர்மாறான போக்கையே..! நாங்கள் ஸ்பெயினில் வாழ்ந்து கொண்டிருந்த பொழுது அனுபவிக்க நேரிட்டது, அவர்களது பாப்டிஸ்ட் சர்ச் கொண்டாட்டங்களில் எங்களை வற்புறுத்தி கலந்து கொள்ளச் செய்தார்கள், அதுமட்டுமல்ல எங்களது உயிர்களும் இன்னும் எங்களது பரம்பரையும் கூட அபாயத்தின் விளிம்பின் கீழ் தான் இருந்தது. (Religious Minorities : The islamic Solution, pp. 56-57)

இன்னும் தாமஸ் அர்னால்டு தன்னுடைய Invitation to Islam என்ற நூலில் கூறுகின்றார் :

இத்தாலியில் வாழ்ந்த மக்கள் நம் நாட்டிலும் உதுமானிய சாம்ராஜ்யம் ஆட்சி வந்துவிடாதா என ஏங்கினர். கிறிஸ்தவ ஆட்சியார்களால் மறுக்கப்பட்ட சுதந்திரமும் உரிமைகளும், முஸ்லிம்களது பூமியில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற கிறிஸ்தவர்கள் பெற்றுக் கொண்டிருக்கின்ற சுதந்திரம் மற்றும் மத சகிப்புத் தன்மை போன்று நமக்கும் கிடைக்காத என ஏங்கினர். (Invitation to Islam, p.183)

15 ம் நூற்றாண்டில் ஸ்பெயினில் கிறிஸ்தவ ஆட்சியாளர்களால் நடத்தப்பட்டுக் கொண்டிருந்த யூத இனப் படுகொலைகளுக்குப் பயந்து அங்கிருந்து வெளியேறிய யூதர்கள், முஸ்லிம்களின் ஆட்சி நடந்து கொண்டிருந்த துருக்கியில் தான் அடைக்கலம் புகுந்தார்கள்.

இன்றைக்கும் சிரியா, எகிப்து, பாகிஸ்தான் மற்றும் மூரிஸ் ஸ்பெயினில் சிறுபான்மையினராக வாழ்ந்து கொண்டிருக்கின்ற கிறிஸ்தவர்களை வைத்தே, இஸ்லாம் எந்தளவுக்கு தன்னுடைய கொள்கையை ஏற்றுக் கொள்ளாத மக்கள் மீது மத சகிப்புத் தன்மையைக் காட்டி வந்து கொண்டிருக்கின்றது என்பதற்கு மிகச் சிறந்த சான்றாகும். அன்றைக்கு ஸ்பெயினிலும் மற்ற நாடுகளிலும் முஸ்லிம்கள் தங்களது ஆட்சியின் பொழுது காட்டிய மத சகிப்புத் தன்மை தான், இன்றைக்கு அவர்களின் அழிவுக்கே காரணமாக அமைந்து கொண்டிருக்கின்றது என்பது வேதனையான வரலாற்று உண்மையாகும்.

அவர்கள் முஸ்லிம்களைத் தாக்குதல்களுக்கும், படுகொலைகளுக்கும், அவர்களது அடையாளங்களைத் துடைத்தெறிவதிலும், அவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்ற பூமியை விட்டே அவர்களை அப்புறப்படுத்துவதிலும், யாருடைய ஆட்சியின் கீழ் நிம்மதியைப் பெற்றுக் கொண்டார்களோ அந்த யூதர்களும், கிறிஸ்தவர்களும் முனைப்புடன் இருப்பதை நாம் நமது வாழ்நாளில் கண்டு வருகின்றோம்.

இதைக் குறித்து எடியன்னி டினைய்யர் என்பவர் எழுதுகின்றார் :

முஸ்லிம்களைப் பற்றி மக்களில் பலர் நம்பிக் கொண்டிருப்பதைப் போல அல்ல அவர்கள். அவர்கள் ஹிஜாஸ் (மக்கா மற்றும் மதீனா அடங்கலாக உள்ள நகரங்களைத் தவிர) மற்ற இடங்களில் வாழ்ந்த சிறுபான்மையினருக்கு எதிராக முஸ்லிம்கள் எந்தவித பலப்பிரயோகத்தையும் உபயோகிக்கவில்லை. இன்றைக்கும் முஸ்லிம்களின் மற்ற பகுதிகளில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற கிறிஸ்தவர்களின் இருப்பே, அவர்கள் கடந்த எட்டு நூற்றாண்டுகளாக மதச் சுதந்திரத்தோடு தான் வாழ்ந்து வந்து கொண்டிருக்கின்றார்கள் என்பதற்கான ஆதாரமாகும். கார்டோபா (முஸ்லிம்களின் ஆட்சியின் கீழ் ஸ்பெயின் இருந்த பொழுது உள்ள நகரம்) வில் அவர்கள் பல உயரிய பதவிகளில் கூட இருந்தார்கள். ஆனால் அதே ஸ்பெயின் கிறிஸ்தவர்களின் ஆட்சியின் கீழ் வந்த பொழுது அவர்கள் செய்த முதல் வேலை, முஸ்லிம்களைப் படுகொலைக்கு உட்படுத்தியது தான். (Mohamed Messenger of Allah, p.332)

### மதச் சட்டங்களைப் பின்பற்றும் உரிமை

இஸ்லாத்தின் இன்னுமொரு மதசகிப்புத் தன்மை என்னவென்றால், அது தன்னுடைய நாட்டில் வாழுகின்ற முஸ்லிம் அல்லாதவர்களின் மீது தனது இஸ்லாமிய ஷரீஅத் சட்டங்களைப் பின்பற்றியே ஆக வேண்டும் என்று கட்டாயப்படுத்தாது. இன்றைக்கு இந்தியாவில் ஒரே மாதிரியான சட்டங்களைக் (பொது சிவில் சட்டம்) கொண்டு வர வேண்டும் என்று இந்து சனாதனவாதிகள் கூக்குரல் இடுவது போல இஸ்லாமானது பிறர் மீது தனது கொள்கையைத் திணிக்காது.

ஜகாத் என்பது இஸ்லாத்தின் அடிப்படைக் கடமைகளுள் ஒன்று. வசதி படைத்த அனைத்து முஸ்லிம்களும், தனது வருவாயில் இருந்து 2.5 சதவீதத்தை ஏழைகளுக்குக் கொடுக்க வேண்டும் என்று கட்டளையே இடுகின்றது. இதனைப் பின்பற்றாதவனை முஸ்லிம் என்று கூட அழைப்பதில்லை. ஏன், அத்தகையவன் இறந்தால் அவனை முஸ்லிம்கள் அடக்கம் செய்யப்படும் மையவாடியில் கூட அடக்கம் செய்யக் கூடாது என மார்க்கத்தீர்ப்புகள் கூறுகின்றன. அத்தகைய சட்டத்திலிருந்து முஸ்லிம் அல்லாதவர்களுக்கு இஸ்லாம் விதிவிலக்கு அளிக்கின்றது. அதைப் போலவே இராணுவத் துறையில் பணியாற்றுவதில் இருந்தும் முஸ்லிம் அல்லாதவர்களுக்கு இஸ்லாம் விதிவிலக்கு அளிக்கின்றது. ஆனால் முஸ்லிம்களோ ஜிஹாத் போன்ற இராணுவ முக்கியத்துவம் வாய்ந்த பணிகளில் கண்டிப்பாக கலந்து கொண்டு, சேவையாற்ற வேண்டும் என்று பணிக்கின்றது.

இந்த இரண்டு நிலைகளில் முஸ்லிம் அல்லாதவர்களுக்கு இஸ்லாம் விதிவிலக்கு அளித்து, அதற்குப் பதிலாக ஜிஸ்யா என்ற பாதுகாப்பு வரியைப் பெற்றுக் கொள்கின்றது. இதனைப் பற்றி சர் ஜேம்ஸ் அர்ணால்டு என்ற மேற்கத்திய அறிஞர் கூறும் பொழுது :

(முஸ்லிமல்லாதவர்கள்) ஜிஸ்யா என்னும் பாதுகாப்பு வரியைச் செலுத்துவது என்பது மிகவும் எளிதானது, அவர்கள் மீது மிகப் பெரும் பாரமாகவும் இருக்காது. குறிப்பாக முஸ்லிம்கள் இராணுவத்தில் சேவையாற்ற வேண்டும் என்று பணிக்கப்படுகின்ற அதேவேளையில், கண்டிப்பாக இராணவத்தில் பணியாற்றியே ஆக வேண்டும் என்றில்லாமல், முஸ்லிம் அல்லாதவர்களுக்கு அதிலிருந்து விதிவிலக்கு அளிக்கப்படுகின்றது. Invitation to Islam, p.77.

இன்னும், அவர்களது கலாச்சாரப் பழக்க வழக்கங்களின் படி வாழ்ந்து கொள்ளவும் இஸ்லாம் அவர்களை அனுமதிக்கின்றது. அவர்களது திருமணம், மணவிலக்கு, மற்றும் உள்ள அனைத்து சமுதாய விவகாரங்களிலும் அவர்களது கலாச்சாரத்தின்படி நடந்து கொள்ளவும் அனுமதிக்கின்றது. இன்னும் கிரிமினல் குற்றங்களைப் பொறுத்தவரையில், அதாவது களவு, விபச்சாரம் போன்ற கிரிமினல் குற்றங்களுக்கு, அவர்கள் செய்திருக்கின்ற குற்றம் என்பது ஒரு பாவகரமானது என்ற அடிப்படையில் தான், அந்தக் குற்றத்திற்காக தண்டனை வழங்கப்படுகின்றது. இன்னும், அதற்காக மது அருந்துவது, பன்றிக் கறி சாப்பிடுவது போன்றவற்றிற்காக அவர்கள் குற்றம் பிடிக்கப்பட மாட்டார்கள். The Rights of the people of the Covenant in the Islamic State. pp.20-21.

இரண்டாம் உமர் என்று அழைக்கப்படுகின்ற உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்கள் கலீஃபாவாக, இஸ்லாமிய ஆட்சியாளராக இருந்து கொண்டிருக்கின்ற சமயத்தில், தனது ஆளுகைக்கு உட்பட்ட பிரதேசங்களில் வாழும் முஸ்லிம் அல்லாதவர்களின் வாழ்க்கை முறையைப் பார்த்து விட்டு, என்ன இவர்கள் செய்வதெல்லாம் இஸ்லாத்திற்கு மாற்றமாக இருக்கின்றது, நாம் எதன் மீது நம்பிக்கை கொண்டிருக்கின்றோமோ, அந்தக் கொள்கையைத் தகர்க்கக் கூடியதாக அவர்களது செயல்பாடுகள் அமைந்துள்ளன, இன்னும் அவையாவும் இஸ்லாமியச் சட்டங்களுக்கு முற்றிலும் மாற்றமாக அல்லவா இருக்கின்றன என நினைத்து, இது பற்றி சட்ட விளக்கம் பெற அவர்களது காலத்தில் வாழ்ந்த மிகப் பெரும் மார்க்க அறிஞரான ஹஸன் அல் பஸரீ (ரஹ்) அவர்களுக்கு ஒரு மடலை எழுதி, இந்த விஷயத்தில் இஸ்லாமிய மார்க்கச் சட்டங்கள் என்ன கூறுகின்றன என்று கேட்கின்றார்கள். அதாவது,

நமக்கு முன் ஆட்சி செலுத்தி விட்டுச் சென்ற நேர்வழி பெற்ற கலீபாக்கள் - ஆட்சியாளர்கள், பாதுகாப்பு வரி செலுத்திக் கொண்டிருக்கும் இந்த மக்களை இஸ்லாம் தடை செய்திருக்கின்ற சொந்தங்களில் இருந்து மணமுடித்துக் கொள்ளவும், இன்னும் பன்றிக் கறியை உண்பதற்கும் எவ்வாறு அனுமதி கொடுத்து விட்டுச் சென்றிருக்கின்றார்கள்? என்பது புரியவில்லை. இதற்காக இஸ்லாமிய சட்ட விளக்கம் என்ன கூறுகின்றன எனக் கேட்டு, கடிதம் ஒன்றை ஹஸன் பஸரி (ரஹ்) அவர்களுக்கு அனுப்பினார்கள்.

அந்த கடிதத்தைப் பார்த்து விட்டு, ஹஸன் பஸரி (ரஹ்) அவர்கள், ஆட்சியாளராக உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்களுக்கு இவ்வாறு கடிதம் எழுதினார்கள் :

அவர்கள் ஜிஸ்யா எனும் பாதுகாப்பு வரியைச் செலுத்தி விடுகின்றார்கள் எனும் பொழுது, அவர்கள் எதனை மார்க்கம் என்று நம்பிக்கை கொண்டிருக்கின்றார்களோ, அதன்படி அவர்களை வாழ்ந்து கொள்ள விட்டு விடுங்கள். நீங்கள் உங்களது சட்டங்களைப் பின்பற்றுங்கள், புதிதாக ஒன்றையும் நீங்கள் கண்டுபிடிக்க வேண்டாம். The Rights of the people of the Covenant in the Islamic State. pp.22.

இன்னும் சட்டங்களைப் பொறுத்தவரை, அவர்கள் தங்களுக்குள் எழுகின்ற பிரச்னைகளில் தங்களுக்கென சட்ட வரையறைகள் இருக்குமானால், அதனைக் கொண்டு தங்களுக்குள் தீர்ப்பளித்துக் கொள்ளலாம். அவ்வாறு இல்லை எனில், இஸ்லாமிய சட்ட உதவியை அவர்கள் நாடிக் கொள்ளலாம். இதனையும் வரலாறு தன்னகத்தே பதிவு செய்து வைத்திருக்கின்றது. இது இன்றைக்கு இந்தியாவில் இந்துத்துவ வாதிகள் வாதிடுவதற்கு முற்றிலும் மாற்றமான மத சகிப்புத் தன்மையைக் கொண்டது.

இந்தியாவில் இருக்கின்ற சிறுபான்மை முஸ்லிம்கள் தங்களது மத சட்டப்படி, தங்களது பிரச்னைகளை – அதாவது சிவில் பிரச்னைகளைத் தீர்த்துக் கொள்கின்றோம் என்று சொன்னால், இந்துத்துவவாதிகள் அதனை மாற்றுவதற்கு தினம் தினம் மல்லுக்கு நின்று கொண்டிருக்கின்ற நிலையையும், இன்னும் இஸ்லாம் தனது ஆட்சிப் பிரதேசத்திற்குள் வாழக் கூடிய முஸ்லிம் அல்லாதவர்களின் உரிமைகளை எவ்வாறு பேணிக் காத்து வந்து கொண்டிருக்கின்றது என்பதே, இஸ்லாம் ஒன்றே இந்தப் பூமியில் உள்ள மதங்களிலேயே சுதந்திரமான, மதசகிப்புத் தன்மை கொண்ட மார்க்கம் என்பது புலனாகும்.

இன்னும் அவர்கள், தங்களுக்கிடையே ஏற்படும் வழக்குகளில், அவர்கள் நீதியை வேண்டி இஸ்லாமிய சட்ட முறையை அனுகினார்கள் என்று சொன்னால், முஸ்லிம்கள் அவர்களுக்கு நீதமான முறையில் நீதி வழங்க வேண்டும் என்று திருமறைக் குர்ஆனில் இறைவன் முஸ்லிம்களுக்கு அறிவுறுத்துகின்றான்.

(நபியே!) இவர்கள் உம்மிடம் வந்தால், இவர்களுக்கிடையே தீர்ப்பு வழங்கும் அல்லது இவர்களைப் புறக்கணித்து விடுவீராயினும், இவர்கள் உமக்கு யாதொரு தீங்கும் செய்ய முடியாது. ஆனால், நீர் (இவர்களிடையே) தீர்ப்பளிப்பீராயின் நியாயமாகவே அவர்களிடையில் தீர்ப்பளிப்பீராக. ஏனெனில் நிச்சயமாக அல்லாஹ் நீதிமான்களையே நேசிக்கின்றான். (05:42)

மேற்கத்திய வரலாற்று ஆசிரியர், ஆதம் மெட்ஸ் அவர்கள், தனது Islamic Civilization in the Fourth Century of the Hijrah நூலில் இவ்வாறு குறிப்பிடுகின்றார்கள் :

இஸ்லாமிய ஷரீஅத் சட்டங்கள் முஸ்லிம்களுக்கானதாக இருந்து கொண்டிருக்கையில், இஸ்லாமிய அரசானது தனது ஆட்சிப் பிரதேசத்திற்குள் வாழுகின்ற முஸ்லிமல்லாத மற்ற மதத்தவர்களை, அவர்களது சொந்த சட்ட முறைகளைப் பின்பற்றிக் கொள்ள அனுமதிக்கின்றது. நாம் அறிந்தவரையில், அந்த நீதிமன்றங்கள் யாவும் கிறிஸ்தவ தேவாலயங்களுக்குக் கட்டுப்பட்டவை, இன்னும் அதில் சட்ட வழங்கல்களில் இருக்கக் கூடிய நீதிமான்கள் யாவரும் அவர்களில் பிரபலமான பாதிரியார்களாக இருக்கின்றார்கள். கேனான் சட்ட முறைகள் பற்றி இவர்கள் ஏராளமான நூல்களை எழுதி வைத்திருக்கின்றார்கள், அதில் சொந்த விவகாரங்களில் இருந்து அனைத்து விவகாரங்களில் எழுகின்ற பிரச்னைகளுக்கான தீர்வுகளும், அதன் விதிமுறைகளையும் தொகுத்து வைத்திருக்கின்றார்கள். அவற்றில் சொத்துப் பிரச்னையிலிருந்து, கிறிஸ்தவர்களுக்குள் எழுகின்ற பிரச்னைகள் வரைக்கும், இன்னும் அதற்கான சட்ட வழங்கல் நடைமுறைகள் என்று அவர்கள் தங்களுக்கென தனி நீதித் துறையையே வைத்திருந்தாலும், இஸ்லாமிய ஆட்சி இவற்றில் எதிலும் தனது மூக்கை நுழைக்காது. Islamic Civilization in the Fourth Century of the Hijrah v.1, p.85.

இஸ்லமல்லாத மாற்றுமதத்தவர்கள் எதனை அவர்கள் தங்களது மத நம்பிக்கை மற்றும் சட்ட முறைகள் என்று நம்பிக் கொண்டிருக்கின்றார்களோ, இன்னும் எதனை அவர்களுக்கு அவர்களது சட்டம் ஆகுமானதாக ஆக்கி வைத்திருக்கின்றதோ, அதாவது மது அருந்துதல் அல்லது பன்றிக் கறி சாப்பிடுதல் ஆகியவை இஸ்லாமிய சட்டப்படி தடை செய்யப்பட்டதாக இருப்பினும், மாற்று

மதத்தவர்களைப் பொறுத்தவரை, இதற்காக இஸ்லாமிய ஷரீஅத் சட்டங்கள் தனது தண்டனை எனும் சாட்டையைத் தூக்காது.

இஸ்லாமிய சட்டங்கள் பழமையானவை, அதனுடைய ஆட்சி முறை இந்தக் காலத்திற்கு ஒவ்வாதவை என இஸ்லாத்தையும், அதன் சட்டங்களையும் ஏற்றுக் கொள்ளாதவர்கள் கூட, இஸ்லாத்தின் இந்த மத சகிப்புத் தன்மையை சந்தேகமில்லாமல் நீதமானது என ஒப்புக் கொள்வார்கள்.

குஸ்டவ் லீபான் என்வர் தனது The Civilization of Arabs நூலில் இவ்வாறு கூறுகின்றார் :

இந்த அரபுக்கள் தங்களது முதல் வெற்றியின் போதே கண்ணை மூடிக் கொண்டு அராஜகத்தில் இறங்கி இருக்கலாம், ஆக்கிரமிப்பாளர்கள் எவ்வாறு ஆக்கிரமிக்கப்பட்ட மக்களின் மீது அநீதமாக நடந்து கொள்வார்களோ அவ்வாறே நடந்திருக்கலாம், அவர்கள் வெற்றி கொள்ளப்பட்ட மக்களை மோசமான முறையில் நடத்தியிருந்திருக்கலாம் அல்லது அவர்கள் கட்டாயப்படுத்தி மதம் மாற்றி இருக்கலாம், இந்த உலகம் முழுவதும் தங்களது மதத்தை இவ்வாறான முறையில் பரப்புவதற்கு முயன்றிருக்கலாம்.

ஆனால் இந்த அரபுக்கள் இவை அத்தனையிலிருந்தும் தவிர்ந்து கொண்டார்கள். அந்த ஆரம்ப கால ஆட்சியாளர்கள், அவர்கள் அரசியலில் மிகவும் நிபுணத்துவம் பெற்றிருந்தார்கள், இத்தகைய நிபுணத்துவம் என்பது புதிய மார்க்கத்தில் மிகவும் அரிதாகக் காணப்படக் கூடியது, அத்தகைய தங்களது தொலை நோக்குச் சிந்தனையின் மூலமாக, மதத்தையும், மதச் சட்டங்களையும் வலுக்கட்டாயமாக யார் மீதும் திணிக்க முடியாது என்று அவர்கள் கருதிச் செயல்பட்டார்கள். இதனால் அவர்கள் சிரியா, எகிப்து, ஸ்பெயின் இன்னும் அவர்கள் வெற்றி கொண்ட அனைத்து மக்களையும் அன்போடும், இரக்கத்தோடும் நடத்தினார்கள். முஸ்லிம்கள் தங்களது சட்டங்களையும், நம்பிக்கைகளையும் அவர்கள் மீது திணிக்காமல் விட்டு விட்டதோடு, அவர்கள் மீது ஜிஸ்யா என்னும் பாதுகாப்பு வரியை மட்டும் விதித்தார்கள். இந்த ஜிஸ்யா வரி கூட புதிதானதல்ல, ஜிஸ்யா வரியோடு ஒப்பிடுகையில், இதற்கு முன் உள்ள ஆட்சியாளர்களுக்குக் கூட இந்த வரியை செலுத்தித் தானே அந்த மக்கள் வந்திருக்கின்றார்கள். இதற்கு முன் இருந்த ஆட்சியாளர்களிடம் செலுத்தியது போலவே பாதுகாப்பு சம்பந்தப்பட்டவைகளுக்காக ஜிஸ்யா வரி விதிக்கப்பட்டது. உண்மை என்னவென்றால், தேசங்களை வெற்றி கொண்ட எந்த ஆட்சியாளரும் முஸ்லிம்களைப் போல சகிப்புத் தன்மையுடன் இருந்திருக்க மாட்டார்கள், அல்லது எந்த மதமும் இஸ்லாத்தைக் காட்டிலும் மிகவும் சகிப்புத் தன்மையுடன் இருந்திருக்காது என்பதே உண்மையாகும். LeBon G, The Civilization of the Arabs, p.605. Also refer to Religious Minorities : The Islamic Solution, p.54.

### நியாயம் பெற்றுக் கொள்ளும் உரிமை

இஸ்லாம் என்பதே அநியாயத்திலிருந்தும், அநீதத்திலிருந்தும் மக்களைப் பாதுகாத்து நீதி வழங்கக்கூடிய மார்க்கமாகும். அல்லாஹ் தனது திருமறையிலே கூறுகின்றான், எல்லாவற்றிலும் நாம் நீதி எனும் அளவையை நிலைநாட்டியுள்ளோம் என்றும், மக்களுக்கு அநீதம் இழைப்பதிலிருந்தும் எச்சரிக்கை செய்துள்ளோம் என்றும் கூறுகின்றான். இதனை இறைவனே தனது வார்த்தைகளில் நமக்கு அறிவுறுத்தி இருப்பதைப் பார்ப்போம் :

மேலும், வானம் - அவனே அதை உயர்த்தித் தராசையும் ஏற்படுத்தினான். நீங்கள் நிறுப்பதில் வரம்பு மீறாது இருப்பதற்காக. ஆகவே, நீங்கள் நிறுப்பதை சரியாக நிலைநிறுத்துங்கள் எடையைக் குறைக்காதீர்கள். இன்னும், பூமியை - படைப்பினங்களுக்காக அவனே விரித்தமைத்தான். (55:7-10)

மேலும்,

நிச்சயமாக நம் தூதர்களைத் தெளிவான அத்தாட்சிகளுடன் அனுப்பினோம். அன்றியும், மனிதர்கள் நீதியுடன் நிலைப்பதற்காக, அவர்களுடன் வேதத்தையும் (நீதத்தின்) துலாக்கோலையும் இறக்கினோம் இன்னும், இரும்பையும் படைத்தோம் அதில் கடும் அபாயமுமிருக்கிறது. எனினும் (அதில்) மனிதர்களுக்குப் பல பயன்களும் இருக்கின்றன - (இவற்றின் மூலமாகத்) தனக்கும், தன்னுடைய தூதருக்கும் மறைமுகமாகவும் உதவி செய்பவர் எவர் என்பதையும் (சோதித்து) அறிந்து கொள்வதற்காக அல்லாஹ் (இவ்வாறு அருள்கிறான்) நிச்சயமாக அல்லாஹ் பலம் மிக்கவன், (யாவரையும்) மிகைத்தவன். (57:25)

இன்னும், முஸ்லிம்களே..! நீங்கள் அனைத்துத் துறையிலும் நீதத்தை நிலைநாட்டுங்கள், இன்னும் அவ்வாறு நீதியை நிலைநாட்டுவதனால் உங்களுக்கு நஷ்டமேற்பட்டாலும் சரியே..! அல்லது யாருக்கு எதிராக நீங்கள் தீர்ப்புச் செய்யப் போகின்றீர்களோ அவர்கள் உங்களுக்கு மிகவும் நெருக்கமான தொப்புள் கொடிச் சொந்தமாக இருந்தாலும் சரியே..! நீதத்தையே நிலைநாட்டுங்கள் என்று கீழ்க்கண்ட வசனம் மூலம் முஸ்லிம்களுக்கு படிப்பினையை வழங்குகின்றான் :

முஃமின்களே! நீங்கள் நீதியின்மீது நிலைத்திருப்பவர்களாகவும், உங்களுக்கோ அல்லது (உங்கள்) பெற்றோருக்கோ அல்லது நெருங்கிய உறவினருக்கோ விரோதமாக இருப்பினும் அல்லாஹ்வுக்காகவே சாட்சி கூறுபவர்களாகவும் இருங்கள் (நீங்கள் யாருக்காக சாட்சியம் கூறுகிறீர்களோ) அவர்கள் செல்வந்தர்களாக இருந்தாலும் ஏழைகளாக இருந்தாலும் (உண்மையான சாட்சியம் கூறுங்கள்) ஏனெனில் அல்லாஹ் அவ்விருவரையும் காப்பதற்கு அருகதையுடையவன். எனவே நியாயம் வழங்குவதில் மன இச்சையைப் பின்பற்றி விடாதீர்கள். மேலும் நீங்கள் மாற்றிக் கூறினாலும் அல்லது (சாட்சி கூறுவதைப்) புறக்கணித்தாலும், நிச்சயமாக அல்லாஹ் நீங்கள் செய்வதையெல்லாம் நன்கு அறிந்தவனாகவே இருக்கின்றான். (4:135)

இன்னும் நீதி செலுத்துவதற்கு நேரம் காலம் எதுவும் கிடையாது. எந்நேரத்திலும் நீங்கள் நீதி செலுத்துவது உங்கள் மீது கடமையாகவும் இருக்கின்றது.

நம்பி உங்களிடம் ஒப்படைக்கப்பட்ட அமானிதங்களை அவற்றின் சொந்தக்காரர்களிடம் நீங்கள் ஒப்புவித்து விடவேண்டுமென்றும், மனிதர்களிடையே தீர்ப்பு கூறினால் நியாயமாகவே தீர்ப்புக் கூறுதல் வேண்டும் என்றும் உங்களுக்கு நிச்சயமாக அல்லாஹ் கட்டளையிடுகிறான் நிச்சயமாக அல்லாஹ் உங்களுக்கு (இதில்) மிகவும் சிறந்த உபதேசம் செய்கிறான் நிச்சயமாக அல்லாஹ் (யாவற்றையும்) செவியுறுவோனாகவும், பார்ப்பவனாகவும் இருக்கின்றான். (4:58)

இன்னும் அவ்வாறு நீதி நிலைநாட்டுவதனால், அது உங்களுக்குப் பாதகமாகவும் உங்களது எதிரிகளுக்குச் சாதகமாகவும் இருப்பினும் சரியே..! நீங்கள் சத்தியத்திற்குச் சான்று பகர்பவர்களாக இருக்க வேண்டுமே ஒழிய, அநீதத்திற்குத் துணை போகக் கூடியவர்களாக இருக்கக் கூடாது, பாவத்திலும், பகைமையிலும் நீங்கள் ஒருவருக்கொருவர் அநீதம் இழைத்துக் கொள்ளாதீர்கள் என்றும் கூறுகின்றான் :

முஃமின்களே! நியாயத்தைநிலை நாட்டுவதற்காக அல்லாஹ்வுக்கு நீங்கள் உறுதியான சாட்சியாக இருங்கள், எந்த ஒரு கூட்டத்தார் மீதும் நீங்கள் கொண்டுள்ள வெறுப்பு நீதி செய்யாமலிருக்க உங்களைத் தூண்ட வேண்டாம். நீதி செய்யுங்கள் இதுவே (தக்வாவுக்கு) - பயபக்திக்கு மிக நெருக்கமாகும் அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள் நிச்சயமாக அல்லாஹ் நீங்கள் செய்பவற்றை(யெல்லாம் நன்கு) அறிந்தவனாக இருக்கின்றான். (5:8)

முஸ்லிம் அல்லாதவர்களுக்கு எவ்வாறு நீதி வழங்க வேண்டும் என்ற இஸ்லாமிய நடைமுறை மிகவும் ஆழமானது. அது அவர்களது சொந்த நீதித்துறையைச் சார்ந்து இருக்கவும் அனுமதிக்கின்றது, இன்னும் நியாயத்தைப் பெற்றுக் கொள்ளும் உரிமையையும் வழங்கி இருக்கின்றது, இன்னும் அவர்கள் நீதியை இஸ்லாமிய ஷரீஅத் சட்டங்கள் மூலமாக எதிர்ப்பார்ப்பார்கள் என்று சொன்னால் - அதற்கு முன்பாக, நீதி கேட்டு அவர்கள் உங்களிடம் வந்தால் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்று இறைவன் முஸ்லிம்களுக்கு அறிவுறுத்துவது என்னவென்றால்,

(நபியே!) இவர்கள் உம்மிடம் வந்தால், இவர்களுக்கிடையே தீர்ப்பு வழங்கும் அல்லது இவர்களைப் புறக்கணித்து விடுவீராயினும், இவர்கள் உமக்கு யாதொரு தீங்கும் செய்ய முடியாது. ஆனால், நீர் (இவர்களிடையே) தீர்ப்பளிப்பீராயின் நியாயமாகவே அவர்களிடையில் தீர்ப்பளிப்பீராக. ஏனெனில் நிச்சயமாக அல்லாஹ் நீதிமான்களையே நேசிக்கின்றான். (5:42)

ஒரு முஸ்லிம் முஸ்லிமல்லாத பாதுகாப்பு வரி செலுத்தி வரக் கூடியதொரு பிரஜையிடம் ஒரு பொருளைத் திருடி விட்டானென்று சொன்னால், அவன் திருடியதற்குத் தண்டனையாக அந்த முஸ்லிமினுடைய கை துண்டிக்கப்படும். அதனைப் போலவே ஒரு பாதுகாப்பு வரி செலுத்தி வரக் கூடியதொரு முஸ்லிமல்லாத நபர், முஸ்லிமிடமிருந்து ஒரு பொருளைத் திருடி விட்டானென்று சொன்னால், திருடிய குற்றத்திற்காக அந்த முஸ்லிமல்லாதவனின் கை துண்டிக்கப்படும்.

இதனைப் போலவே, ஒரு முஸ்லிம் முஸ்லிமல்லாதவனை அவமதித்தானென்று சொன்னால், அவனை அவமதித்த குற்றத்திற்காக முஸ்லிமிற்குத் தண்டனை வழங்கப்படும். அதனைப் போலவே முஸ்லிமல்லாதவன் ஒரு முஸ்லினை அவமதித்தானென்று சொன்னால், அதற்குத் தகுந்தாற் போல தண்டனை வழங்கப்படும். Rights of the People of the Convenant in the Muslim State, pp.19-20.

இதுவே இஸ்லாமிய நடைமுறை. நீதியை யாருக்கும் பாரபட்சமில்லாமல், சரியான அளவில் வழங்கி நீதியை நிலைநாட்டுவதில் கண்ணும் கருத்துமாகச் செயல்பட்டதொரு மார்க்கம் இந்தப் பூமியில் உண்டென்று சொன்னால், அது இஸ்லாத்தினைத் தவிர நீங்கள் வேறு எங்குதான் பார்க்க இயலும்.

கடந்த வருடம் குஜராத்தில் ஒரு இனப் படுகொலையை நடத்திய மோடியுடன் உட்கார்ந்து குதூகலமாகச் சிரித்து மகிழும் சங்கராச்சாரியர்கள் எங்கே?! நீதியை நிலைநாட்டுவதற்காகவே இந்த பூவுலகத்துக்கு வந்துதித்த தேவ தூதர்கள் போல இந்தப் பூமியில் நடமாடித் திரிந்த, மன்னராக இருப்பினும் நாங்களும் சாதாரண மனிதனே..! என்று நீதியை நிலைநாட்டுவதற்காக மணிமுடியிலிருந்து கீழ் இறங்கி, சாதாரண பிரஜையாக நீதிபதியின் முன் நின்று சாட்சியம் பகர்ந்த அந்த முஸ்லிம்கள் எங்கே..! மலைக்கும் மடுவுக்கும் உள்ள வித்தியாசம்..!

வாருங்கள் சத்தியத்திற்குச் சான்று பகர்ந்த அந்த இஸ்லாமிய இளவல்களின் வரலாற்றைப் புரட்டுவோம்..!

தைமா இப்னு உபைரிக் என்பவர் அன்ஸாரிகளுள் ஒருவர், இவர் பனூ துஃபார் இப்னு அல் ஹாரித் கோத்திரத்தைச் சேர்ந்தவரும் ஆவார். இவர் தனது அண்டை வீட்டுக்காரரான குதாதா இப்னு அன் நுஃமான் என்பவருடைய கவச உடையைத் திருடி விடுகின்றார். இந்த கவச உடையை குதாதா இப்னு அன் நுஃமான் அவர்கள் ஒரு மாவு மூட்டையில் போட்டு வைத்திருந்தார். தைமா இப்னு உபைரிக் அவர்கள் அந்த மாவு மூட்டையுடன் இருந்த கவச உடையைத் திருடிக் கொண்டு சென்ற பொழுது, அந்த மூட்டையில் இருந்த ஓட்டை வெளியே பாதை நெடுகிலும் மாவு சிந்திக் கொண்டு சென்றதை வைத்து, இவர் தான் இந்த கவச உடையைத் திருடி இருக்க வேண்டும் என்ற சந்தேகம் பக்கத்து வீட்டுக்காரரான குதாதா அவர்களுக்கு ஏற்பட்டது. ஆனால் கவச உடையைத் திருடிய தைமா

அவர்கள், அந்தக் கவச உடையை தனது அண்டை வீட்டுக்காரரான ஸைத் இப்னு அஸ் ஸாமின் என்ற யூதருடைய வீட்டில் மறைத்து வைத்து விடுகின்றார். மக்கள் களவு போன கவச உடையைத் தேடிய பொழுது, ஒழுகிக் கொண்டு வந்த மாவின் அடையாளத்தை வைத்து குதாதா அவர்களது வீட்டைச் சோதனை இட்டனர். ஆனால் குதாதா அவர்களது இல்லத்தில் கவச உடை கிடைக்கவில்லை. தைமா அவர்களோ தான் அந்த கவச உடையை எடுக்கவும் இல்லை, அது பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்று சத்தியமும் செய்து விடுகின்றார். எனவே, அவரை விட்டு விட்டு, மேற்கொண்டு ஏதேனும் துப்புக் கிடைக்கின்றதா என ஆராய்ந்த பொழுது, அந்த மாவின் அடையாளம் சென்ற தடயத்தை வைத்து, மீண்டும் அவர்கள் அந்த மாவின் அடையாளத்தை பின்பற்றிச் சென்ற பொழுது, அந்த மாவு அந்த யூதருடைய வீட்டில் முடிவடைய, யூதருடைய வீட்டைச் சோதனை செய்த பொழுது, களவு போன கவச உடை கிடைத்தது. இதன் காரணமாக அந்த யூதர் கைது செய்யப்பட்டு, இறைத்தூதர் (ஸல்) அவர்கள் முன் நிறுத்தப்பட்டார்.

அந்த யூதரோ தான் அந்தக் கவசத்தை எடுக்கவில்லை என்றும் தைமா அவர்கள் தான் அவர்கள் தன் வீட்டில் அந்த கவசத்தை வந்து வைத்ததாகவும் கூறி, தனக்கும் இதற்கும் சம்பந்தமில்லை என்று கூறினார். இவரது இந்தக் கூற்றுக்கு சில யூதர்களும் ஆதரவாகச் சாட்சி கூறினார்கள்.

இந்த நிலையில் பனூ து.ஃபார் குலத்தவர்கள், அதாவது தைமா வின் குலத்தவர்கள் தைமாவிற்கு ஆதரவாக தங்களது குலத்தவர்களில் சிலரைத் தேர்வு செய்து தைமாவிற்குச் சார்பாகப் பேசுவதற்கு, இறைத்தூதர் (ஸல்) அவர்களிடம் அனுப்பி வைத்தார்கள். அந்தத் தூதுக் குழுவினர் கூறினார்கள் :

இறைத்தூதர் (ஸல்) அவர்களே..! நீங்கள் அந்த யூதருக்குச் சார்பாக வாதாடினீர்கள் என்று சொன்னால், எங்களுடைய குலத்தவர் மரியாதையை இழக்க நேரிடும், இன்னும் தண்டனையும் கடுமையாக இருக்கும், ஆனால் அந்த யூதனோ சுதந்திர மனிதனாக விடப்பட்டு விடுவான் என்று கூறினார்கள்.

இறைத்தூதர் (ஸல்) அவர்களும் இவர்களது வாதத்தை ஏற்றுக் கொண்டு, தைமா அவர்களை குற்றமற்றவர் எனக் கருதி, அந்த யூதனுக்குத் தண்டனை வழங்குவதென்று முடிவெடுத்து விட்டார்கள். இந்த நிலையில், இறைவன் தனது தூதருக்குக் கீழ்க்கண்ட வசனத்தை அந்த யூதனுக்குச் சார்பாக இறக்கி வைத்ததோடு, யார் அந்த யூதன் மீது குற்றம் சுமத்தினாரோ அவரது அந்த குற்றச் செயலையும் தோலுரித்துக் காட்டி விட்டான். Al-Wahidi, History of Revelation, 210-211.

அந்த இறைவசனம் இன்றளவு தொழுகையின் பொழுது ஓதப்பட்டுக் கொண்டிருக்கின்றது, வரும் நாட்களிலும் அந்த வசனம் ஓதப்பட்டுக் கொண்டிருக்கும், இன்னும் அந்த வசனம் ஒலிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் காலமெல்லாம் நீதியும், நியாயமும் நிலைநாட்டப்பட்டுக் கொண்டிருக்கும், நீதி செலுத்துவது தான் இறைநம்பிக்கையாளர்களாகிய முஸ்லிம்களின் வழிமுறையாகும் இன்னும் அந்த நீதியை முஸ்லிம்களிடம் மட்டுமல்லாது முஸ்லிம் அல்லாதவர்கள் மீதும் நிலைநாட்டி, அதனைப் பின்பற்றக் கூடிய மக்களாகவும் இருந்து வருவார்கள். அல்லாஹ் கூறுகின்றான் :

(நபியே!) அல்லாஹ் உமக்கு அறிவித்ததைக் கொண்டு, நீர் மனிதர்களிடையே தீர்ப்பு வழங்குவதற்காக, முற்றிலும் உண்மையைக் கொண்டுள்ள இவ்வேதத்தை நிச்சயமாக நாம் உம்மீது இறக்கியுள்ளோம் எனவே சதி மோசக்காரர்கள் சார்பில் வாதாடுபவராகி விடாதீர். (தவறுகளுக்காக) நீர் அல்லாஹ்விடம் மன்னிப்புக் கோரும், நிச்சமாக அல்லாஹ் மன்னிப்பவனாகவும் மிக்க கருணை உடையவனாகவும் இருக்கின்றான். (நபியே!) பிறருக்கு தீமை செய்து அதனால் எவர் தமக்குத் தாமே தீங்கிழைத்துக் கொண்டார்களோ அவர்களுக்காக நீர் வாதாட வேண்டாம் ஏனென்றால் கொடிய பாவியான சதி செய்து கொண்டிருப்பவரை நிச்சயமாக அல்லாஹ் நேசிப்பதில்லை. இவர்கள் (தங்கள் சதிகளை)

மனிதர்களிடமிருந்து மறைத்து விடுகின்றனர். ஆனால் (அவற்றை) அல்லாஹ்விடமிருந்து மறைக்க முடியாது. ஏனெனில் அவன் பொருந்திக் கொள்ளாத சொற்களில் அவர்கள் இரவில் (சதி) ஆலோசனை செய்யும் போது அவன் அவர்களுடன் இருக்கின்றான். மேலும் அவர்கள் செய்பவற்றையெல்லாம் அல்லாஹ் சூழ்ந்து அறிந்தவனாக இருக்கின்றான். (முஃமின்களே!) என்னே! இத்தகைய மனிதர்களுக்காகவா இவ்வுலகில் நீங்கள் வாதாடுகிறீர்கள் - நியாயத் தீர்ப்பு நாளில் அவர்களுக்காக அல்லாஹ்விடம் யார் வாதாடுவார்கள்? அல்லது (அந்நாளில்) அவர்களுக்காக பொறுப்பாளியாக ஆகுபவன் யார்? (4:105-109)

நீதிக்குச் சான்று பகரும் இஸ்லாமிய வரலாற்றுச் சாட்சியங்களில் இன்னுமொரு மணிமகுடம்,

அம்ர் இப்னு அல் ஆஸ் (ரலி) அவர்கள் எகிப்தின் கவர்னராக வீற்றிருக்கின்றார். அவரது மகன்களில் ஒருவர் தனது நாட்டு கிறிஸ்தவர் ஒருவரை சாட்டையால் அடித்து விட்டு, நான் யார் தெரியுமா? கவர்னரது மகன் என்றும் கூறி விடுகின்றார். அடி வாங்கிய அந்த கிறிஸ்தவர் இஸ்லாமிய சாம்ராஜ்யத்தின் தலைநகரான மதீனாவிற்கு வந்து, ஆட்சித்தலைவர் உமர் இப்னு அல் கத்தாப் (ரலி) அவர்களிடம் எகிப்தின் கவர்னரது மகன் மீது குற்றம் சாட்டி ஒரு புகார் மனு ஒன்றைக் கொடுக்கின்றார். மனுவைப் பெற்றுக் கொண்ட உமர் (ரலி) அவர்கள் அம்ர் இப்னு அல் ஆஸ் (ரலி) அவர்களையும், அவரது மகனையும் மதீனாவிற்கு உடனே புறப்பட்டு வருமாறு அழைப்பு விடுகின்றார்கள். அவர்கள் வந்ததும், அந்த கிறிஸ்துவரிடம் சாட்டையைக் கொடுத்து, அந்த மேன்மை தங்கிய மனிதரது மகன் மீது நீங்கள் சாட்டையால் அடிக்கலாம் என்று உத்தரவிடுகின்றார்கள். அந்த மனிதரும் அடித்து முடித்தார். பின்பு உமர் (ரலி) அவர்கள் தனது தலையைக் காட்டி தன் மீது அடிக்குமாறு கூறி விட்டு, 'நான் அதிகாரத்தில் இருக்கும் பொழுது தானே உமக்கு இந்தக் கொடுமை நேர்ந்தது, ஆட்சியாளன் என்ற முறையில் உமக்கு இழைக்கப்பட்ட கொடுமைக்கு என்மீதும் பழி தீர்த்துக் கொள்வீராக என்று கூறினார்கள்.

பின்பு அம்ர் இப்னு அல் ஆஸ் (ரலி) அவர்களைப் பார்த்து, அவர்களது தாய்மார்கள் அவர்களைச் சுதந்திரமானவர்களாகப் பெற்றெடுத்திருக்க நீங்கள் அவர்களை எவ்வாறு அடிமையாக்கிக் கொள்கின்றீர்கள், அவ்வாறு நடத்துவதற்கு உங்களுக்கு எந்த உரிமையும் கிடையாது என்று அவர்களது சட்டைக் காலரைப் பிடித்துக் கூறி எச்சரிக்கின்றார்கள்.

இன்னுமொரு மணிமகுடம்..!

அலீ இப்னு அபீதாலிப் (ரலி) அவர்கள் கலீஃபாவாக இருந்து கொண்டிருக்கின்றார்கள். அப்பொழுது ஒரு யூதன் அலீ (ரலி) அவர்கள் மீது குற்றம் சுமத்தி, அந்த வழக்கை அப்பொழுது நீதிபதியாக இருந்த சுரைஹ் இப்னு அல் ஹாரித் அவர்களிடம் கொண்டு செல்கின்றார். சுரைஹ் அவர்களே..! அந்த வழக்கின் விபரத்தைக் கூறுவதைக் கேட்போம்.

அலீ (ரலி) அவர்கள் முஆவியா (ரலி) அவர்களுக்கு எதிராக போருக்குத் தயாரான சமயம், அவரது கவச உடை தொலைந்து போய் விட்டதை அறிந்து, அதனைத் தேடி கூஃபாவிற்கு வருகின்றார்கள். அங்கு ஒரு யூதருடைய கையில் தனது கவச உடை இருக்க, அதனை அவன் சந்தையில் விலை கூவி விற்றுக் கொண்டிருக்கக் கண்டார்கள். அப்பொழுது அந்த யூதனை அனுகிய அலீ (ரலி) அவர்கள்,

யூதனே..! நீ கையில் வைத்திருக்கும் கவச உடை என்னுடையது, அதனை நான் யாருக்கும் கொடுக்கவும் இல்லை, விற்கவும் இல்லை.

அந்த யூதன் கூறினான்,

இது என்னுடையது, இது என்னுடைய உடமையும் கூட..!

அலீ (ரலி) கூறினார்கள்,

நாம் இருவரும் நியாயத்தைப் பெற்றுக் கொள்ள நீதிபதியிடம் செல்வோம்.

இவ்வாறாக, இருவரும் என்னிடம் வந்தார்கள் என்று நீதிபதி சுரைஹ் அவர்கள் கூறி விட்டு, வழக்கின் போக்கைக் கூறுகின்றார்கள் :

அலீ அவர்கள் என்னருகில் உட்கார்ந்து கொண்டு, இந்த கவச உடை என்னுடையது என்று கூறி, இதனை நான் யாருக்கும் கொடுக்கவும் இல்லை, யாருக்கும் விற்கவும் இல்லை என்று கூறினார்கள்.

எனக்கு முன்பு உட்கார்ந்திருந்த யூதன் கூறினார் :

இது என்னுடைய கவச உடை. இது என்னுடையது என்றும் கூறினார்.

நான் அலீ அவர்களைப் பார்த்து,

இறைநம்பிக்கையாளர்களின் தலைவர் அவர்களே..! உங்களிடம் இதற்கான ஆதாரம் இருக்கின்றதா?

ஆம்..! என்னுடன் இரண்டு சாட்சியங்கள் இருக்கின்றார்கள். ஒன்று என்னுடைய மகன் அல் ஹஸன் மற்றும் கன்பார் என்பவரும், இது என்னுடைய கவச உடைதான் என்று சாட்சியமளிப்பார்கள் என்று கூறினார்கள்.

இறைநம்பிக்கையாளர்களின் தலைவர் அவர்களே! தந்தைக்கு ஆதரவாக மகனுடைய சாட்சியத்தை ஏற்றுக் கொள்ள இயலாது! என்றேன்.

ஆச்சரியப்பட்ட அலீ (ரலி) அவர்கள்,

மகத்துவங்கள் அனைத்தும் உனக்கே யா அல்லாஹ்! என்று இறைவனைப் புகழ்ந்தவர்களாக, சொர்க்கத்திற்கு நன்மாரயங் கூறப்பட்ட மனிதரது சாட்சியத்தை நீங்கள் ஏற்றுக் கொள்ள மாட்டீர்களா? இறைத்தூதர் (ஸல்) அவர்களது திருவதனத்திலிருந்து நான் கேட்ட நன்மொழி ஒன்று, அவர்களது பேரர்களான ஹஸன் மற்றும் ஹு ஸைன் இருவரையும் சொர்க்கத்தின் வாசமலர்கள், சொர்க்கத்தின் இளவரசர்கள் என்றல்லவா கூறுகின்றது.

இதனைக் கேட்டுக் கொண்டிருந்த அந்த யூதன் கூறினான்,

அலீ என்னை அவரது நீதிமன்றத்திற்கே அழைத்து வந்தார். அவருக்கு எதிராகவும் எனக்கு ஆதரவாகவும் இந்த நீதிபதி நீதி வழங்கி விட்டாரே?

இந்த சத்திய மார்க்கதிற்கு நான் சான்று பகர்கின்றேன், வல்ல அல்லாஹ்வைத் தவிர வணத்திற்குரிய நாயன் வேறு இல்லை என்று சான்று பகர்கின்றேன். இன்னும் அவனது திருத்தூதராக முஹம்மது (ஸல்) அவர்கள் இருக்கின்றார்கள் என்பதையும் ஏற்றுக் கொள்கின்றேன் என்று இஸ்லாத்திற்குள் நுழைந்த அவர், அலீ (ரலி) அவர்களே..! இதோ பெற்றுக் கொள்ளுங்கள்..! இந்தக் கவசத்தை..! இது உம்முடைய கவசம் தான். இதனை நீங்கள் ஒரு இரவில் தவற விட்டுச் சென்று விட்டீர்கள். அதனை நான் எடுத்து வைத்திருந்தேன் என்று கூறினார். Hostory of Judges, v.2. p.200.

இன்னுமொரு சான்று..!

வரலாற்று ஆசிரியரான இப்னு அல் அதீர் (History of the Atabegs, p.76) அவர்கள் இமாதுத்தீன் அல் ஸன்கீ அவர்களைப் பற்றி இவ்வாறு குறிப்பிடுகின்றார்கள். இவர் ஜஸீரத் இப்னு உமர் என்ற நகரத்தில் குளிர் காலத்தின் பொழுது நுழைகின்றார். இவர் ஒரு கோட்டையில் தங்கிக் கொண்டு, தனது ராணுவத்தை கூடாரத்தில் தங்க வைக்கின்றார். தனது ராணுவப்படைத் தளபதிகளில் ஒருவரான இஸ்ஸத்தீன் அபூபக்கர் அத் தபீசீ என்பவரது கருத்துக்கு மிகவும் மதிப்பு அளிக்கக் கூடியவராக

இருந்தார். இவர் தான் தங்குவதற்காக ஒரு யூதனை அவனது சொந்த வீட்டிலிருந்து வெளியேற்றி விட்டு அதில் அவர் தங்கிக் கொள்கின்றார். இந்த யூதன் ஒரு நாள் இமாதுத்தீன் அவர்களை வழியில் கண்ட போது, அவருடன் இஸ்ஸத்தீன் அவர்களும் பயணம் செய்து கொண்டிருக்கும் நிலையில், இமாதுத்தீன் அவர்களை இந்த யூதன் அழைத்தான். இமாதுத்தீன் அவர்களும் தனது பயணத்தை சற்று நிறுத்தி விட்டு, அந்த யூதனுக்கு இழைக்கப்பட்ட கொடுமையைப் பற்றி கேட்டறிந்து கொண்டார். இமாதுத்தீன் அவர்கள் எதுவும் பேசவில்லை, அவர் பார்த்த பார்வையிலேயே தனக்கு அழிவு காலம் வந்து விட்டது என்பதை உணர்ந்து கொண்ட இஸ்ஸத்தீன், தனது இருப்பிடத்தைக் காலி செய்து விட்டு, தனக்கான கூடாரத்தை நகருக்கு வெளிப்புறத்தில் அமைக்குமாறும், இன்னும் மழை பெய்து அந்த இடம் சேறும் செகதியுமாக இருப்பினும் சரியே..! என்று கூறி தனது இருப்பிடத்தை மாற்றிக் கொண்டார். இது ஒரு யூதனுக்கு இஸ்லாம் வழங்கிய நடு நிலையான தீர்ப்பாகும்.

இன்னுமொரு சான்று..!

குதைபா இப்னு முஸ்லிம் அல் பாஹிலீ (ரஹ்) அவர்கள் சீனா மற்றும் ட்ராண்ஸ்சோஸானியா ஆகிய இடங்களைக் கைப்பற்றிய பெருமைக்குரிய இவரது காலத்தில் நிகழ்ந்த நிகழ்ச்சி வரலாற்றுச் சிறப்பு மிக்கது. இவர் சாமர்கண்டைக் கைப்பற்றி பொழுது, அந்த மக்களது விருப்பங்களை நிறைவேற்றத் தவறி விட்டார். அதாவது அந்த மக்களை இஸ்லாத்தினைத் தேர்வு செய்து கொள்வதையோ அல்லது பாதுகாப்பு வரியைக் கட்டிக் கொண்டு திம்மியாக இருந்து கொள்வதையோ அல்லது போர்ப் பிரகடனம் செய்வதையோ, இவற்றில் எதனையும் தேர்வு செய்வதற்கான வாய்ப்பை அவர் அளிக்கவில்லை. சாமர்கண்ட் கைப்பற்றப்பட்டதன் இருபதாவது ஆண்டுக்குப்பின் இஸ்லாமிய சாம்ராஜ்யத்தின் கலீபாவாக உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்று நீதத்துடன் ஆட்சி செய்து வருகின்றார் என்பதைக் கேள்விப்பட்ட சாமர்கண்ட் மக்கள், தங்களது சார்பாக ஒரு குழுவை அவரிடம் அனுப்பி வைத்து, தங்களது நிலைமையைப் பற்றி புகார் மனு ஒன்றையும், உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்களிடம் அந்தக் குழு கொடுத்து நீதி வேண்டி நின்றது. மேலும் இந்த புகார் மனு கொடுக்கப்பட்ட காலத்தில் குதைபா அவர்களும் மரணமடைந்து விடுகின்றார்கள்.

அவர்கள் அந்த மனுவில், இஸ்லாம் அனுமதித்திருக்கின்ற வழிமுறைகளில் எதுவொன்றையும் தேர்வு செய்து கொள்ளும் உரிமையை குதைபா அவர்கள் எங்களுக்கு வழங்கவில்லை என்று புகார் செய்திருந்தார்கள்.

இதனைக் கேட்ட உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்கள், சாமர்கண்ட்டிற்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்ட கவர்னருக்கு ஒரு உத்தரவை இட்டு, அந்த உத்தரவில் சாமர்கண்டிலிருந்து முஸ்லிம் படைகள் வாபஸ் பெற வேண்டும் என்றும், இஸ்லாம் வழங்கியுள்ள மூன்று உரிமைகளில் எதுவொன்றையும் அவர்கள் தேர்வு செய்து கொள்ளும் உரிமையை வழங்கும்படியும் அறிவுறுத்தி இருந்தார். இந்த உத்தரவைப் பெற்றுக் கொண்ட கவர்னர், அந்த நேரத்திலிருந்து சாமர்கண்ட்டிலிருந்து முஸ்லிம் படைகளை வாபஸ் பெற்றுக் கொண்டதோடு, முஸ்லிம்களும் அங்கிருந்து வெளியேறினார்கள். முஸ்லிம்கள் எந்தவித நிர்ப்பந்தமுமின்றி வெளியேறிக் கொண்டிருப்பதைக் கண்ட சாமர்கண்ட் மக்கள் அதிசயத்தவர்களாக, அனைவரும் இஸ்லாத்தினைத் தங்களது வாழ்வியல் நெறியாக ஏற்றுக் கொண்டார்கள். Al-Tantawi, Stories from History, p.85.

இங்கே நாம் கவனிக்க வேண்டியது என்னவென்றால், முஸ்லிம்கள் முஸ்லிம் அல்லாதவர்களின் உரிமைகள் என்னவென்பதை கவனத்தில் எடுத்துக் கொள்ளாத பொழுதும், மன்னரும் கூட அந்த மக்களுக்கு அநீதி இழைக்க முடியாது, விவகாரம் நீதி மன்றத்திற்கு செல்லுமானால், அந்த மக்களின் நிலைநிறுத்துவதே நீதிமன்றத்தின் முதல் கடமையாக இருக்கும்.

இதற்கு மிகச் சிறந்த எடுத்துக் காட்டு..!

உமையா வம்சத்தவரான அல் வலீத் பின் யஸீத் அவர்கள் முஸ்லிம்களுடன் ஒப்பந்தங்களைச் செய்து கொண்டவர்களான ஸைப்ரஸ் மக்களை சிரியாவிற்கு நாடு கடத்தி விட்டார். இவரது இந்த நடவடிக்கை இஸ்லாமிய மார்க்க அறிஞர்களை கொதிப்படையச் செய்ததோடு, அவர்களின் கடும் கண்டனத்தையும் பெற்றுத் தந்தது. யஸீத் உடைய இந்தச் செயல் அடக்குமுறையைச் சார்ந்தது என்று அவர்கள் கடும் கண்டனம் தெரிவித்தனர். இவரது மகன் யஸீத் அவர்கள் ஆட்சிக்கு வந்த பொழுது, அவரது தந்தை செய்த செயலை எடுத்துக் கூறி, சைப்ரஸ் மக்களை மீண்டும் சிரியாவிலிருந்து சைப்ரஸ் க்கு திருப்பி அனுப்ப வேண்டும் கோரிக்கை வைத்தனர். இஸ்லாமிய மார்க்க அறிஞர்களின் அறிவுரையை ஏற்றுக் கொண்ட யஸீத் அவர்கள் சைப்ரஸ் மக்களை மீண்டும் சிரியாவிலிருந்து சைப்ரஸ் க்கு அனுப்பி வைத்தார். உமையா வம்சத்தில் மிகவும் நீதமாக ஆட்சி செய்தவர்களில் இருவர் இருந்தனர். ஒருவர் யஸீத் என்றால் இன்னொருவர், உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்) ஆவார்கள். Futuh al-Buldan, p.214.

இன்னுமொரு எடுத்துக் காட்டு..!

லெபனானை ஆண்டு கொண்டிருந்த அப்பாஸியக் கவர்னரான சாலிஹ் இப்னு அலீ இப்னு அப்துல்லா இப்னு அப்பாஸ் அவர்கள், முஸ்லிம்களுடன் உடன்படிக்கை செய்து கொண்ட ஒரு கிராமத்து மக்களில் சிலர் சரியாக வரிக் கொடுக்காததன் காரணமாக அந்த கிராமத்தில் வசித்து வந்த ஒட்டுக மொத்த மக்களை அந்தக் கிராமத்தை விட்டும் வெளியேறுமாறு உத்தரவு பிறப்பித்தார். இன்னும் இந்த கவர்னர், அன்றைய கலீபாவின் பிரதான அமைச்சர்களில் ஒருவரின் உறவினாராகவும் இருந்தார். இருப்பினும், இதனைப் பார்த்துக் கொண்டு இருக்க மனமில்லாத மார்க்க அறிஞரான இமாம் அல் அவ்ஸாய் அவர்கள் ஒரு மிக நீண்ட கடிதம் ஒன்றை அவருக்கு அனுப்பி வைக்கின்றார்கள்.

ஒரு சிலர் செய்த தவறுக்காக நீங்கள் எவ்வாறு அனைத்து மக்களையும் பழிவாங்கலாம், இன்னும் அவர்களை எவ்வாறு நீங்கள் அவர்களது இல்லங்களிலிருந்து வெளியேற்றலாம்? என்று கேட்டதோடு, அல்லாஹ் தனது திருமறையிலே கூறுகின்றான் :

(அதாவது) சுமக்கிறவன் பிறிதொருவனின் சுமையைச் சுமக்க மாட்டான். (53:38)

இன்னும் நீங்கள் ஆதராமாக எடுத்துக் கொள்வதற்கும் இன்னும் உங்களது நடவடிக்கைகளை சீர்திருத்திக் கொள்வதற்கும், பின்பற்றுவதற்கும் மிகவும் பொறுத்தமான ஆதாரமாகும். இதனை அடுத்து இறைத்தூதர் (ஸல்) அவர்களின் கட்டளைகளை ஏற்றுப் பின்பற்றுவதற்கும் இன்னும் பாதுகாப்பதற்கும் உரித்தானதாகும் என்று கூறி விட்டு, அவர் கூறினார்,

எவரொருவர் திம்மி (பாதுகாப்பு வரி செலுத்த ஒப்புக் கொண்ட)களுக்கு எதிராக நடக்கின்றாரோ அல்லது அவர் சுமக்கவியலாத சுமையைச் சுமத்துகின்றாரோ, அவருக்கு எதிராக நான் வழக்காடுவேன் (அதாவது திம்மி மீது குற்றமிழைத்தவர் மீது). As-Sunan al-Kubra lil-bayhaqi, v.9, p.205.

அவர்கள் உங்களது அடிமைகள் அல்ல. நீங்கள் நினைத்த மாத்திரத்தில் அவர்களை ஒரு இடத்திலிருந்து இன்னுமொரு இடத்திற்கு மாற்றுவதற்கு. அவர்கள் உங்களுடன் ஒப்பந்தங்கள் செய்து கொண்டவர்கள். Non Muslims in Islamic Society, p.31.

முஸ்லிமல்லாதவர்கள் மீது இஸ்லாம் நினைத்துப் பார்த்திராத அளவுக்கு நீதியை வழங்கியது, அந்த மக்கள் எந்த தேசத்தைச் சேர்ந்தவர்களாக இருப்பினும் சரியே, இன்னும் மதத்தை அல்லது அரசாக இருந்தாலும் சரியே.., ஆனால் இவை எல்லாம் மற்ற மதங்களில் நினைத்தும் பார்த்திர

முடியாதவைகளாக இருந்தன என்பது தான் இன்று வரை நிலைத்து நிற்கும் உண்மையாகும். உலகெங்கிலும் உள்ள அறிஞர்களும், ஆய்வாளர்களும் இதற்கான சத்திய சாட்சியத்தை தங்கள் எழுத்துக்களில் வடித்து விட்டுச் சென்றுள்ளார்கள். இதன் மூலம் இஸ்லாம் என்னும் சத்திய ஒளியை மற்றவர்களும் அறிந்து கொள்ள வழிவகுத்துள்ளார்கள்.

பிரிட்டனைச் சேர்ந்த மிகவும் புகழ் பெற்ற வரலாற்று அறிஞரான வெல்ஸ் என்பவர் இஸ்லாத்தின் போதனைகளைப் பற்றி இவ்வாறு குறிப்பிடுகின்றார் :

புரிந்துணர்வின் மூலம் அவர்கள் ஒரு மிகப் பெரும் கலாச்சாரத்தையே உருவாக்கினார்கள். அவர்கள் மக்களை தங்களது தாராளப் போக்கு மற்றும் சகிப்புத் தன்மை மூலம் கவர்ந்தார்கள், இன்னும் மனிதநேயத்தின் மூலமும், அவற்றை நடைமுறைப்படுத்திக் காட்டியதன் மூலமும் மக்களை இஸ்லாத்தின் பால் கவர்ந்தார்கள். கொடுமையையும், கொடூரங்களையும், அநீதங்களையும், வெறுப்புணர்வுகளையும் பார்க்க முடியாத மனிதாபிமானமிக்க சமுதாயத்தை உருவாக்கிக் காட்டினார்கள். இன்னும் இதனைப் போன்றதொரு சமுதாயம் முன்னெப்போதும் உருவாக்கப்பட்டதுமில்லை. As-Suba'i M, Splendors of our Civilization, p.146.

சர் தாமஸ் அர்னால்டு அவர்கள், இஸ்லாமிய ஆட்சி உச்சத்தில் இருந்த காலங்களில், கிறிஸ்தவ மதத்தில் உள்ள கிளையினருக்கிடையே உள்ள பிரச்னைகளின் காரணமாக ஒருவர் மற்றவரின் கழுத்தை நெறிக்கும் சந்தர்ப்பத்திற்காக ஏங்கிக் கொண்டிருந்தனர்.

ஒருவர் மற்றவரைக் குழி தோண்டிப் புதைக்கும் இந்தச் செயலை இஸ்லாம் தடை செய்தே வைத்திருந்தது. இத்தகைய பிரச்னைகளில் முஸ்லிம்களில் இல்லாதிருந்தது, இன்னும் பல கிறிஸ்தவ கிளையினருக்கிடையே வேற்றுமையை உண்டாக்காமல், அவர்களில் எவரையும் பிரித்துப் பார்க்காமல், நீதியோடும், நியாயத்துடனுமே அவர்களது பிரச்னையை அனுகினார்கள், அதனைத் தீர்த்து வைக்க முயன்றார்கள்.

உதாரணமாக, எகிப்தை முஸ்லிம்கள் கைப்பற்றியதன் பின்னாள், கிறிஸ்தவர்களில் ஒரு பிரிவினரான ஜேக்கோபைட்ஸ், பைசாந்தியர்களை நாட்டை விட்டே அப்புறப்படுத்தும் இந்தச் சந்தர்ப்பத்தை தங்களுக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு, சமயப் பற்றுள்ள கிறிஸ்தவர்களையும் அவர்களது மடாலயங்களையும் அப்புறப்படுத்த முயற்சிகளை மேற்கொண்டார்கள். ஆனால், சமயக் கிறிஸ்தவர்கள் சமர்ப்பித்த சான்றுகளைப் பார்வையிட்ட முஸ்லிம்கள், ஜேகோபைட்ஸ் பிரிவினரின் வாதங்களை மறுத்ததோடு, மடாலயங்களை சமயக் கிறிஸ்தவர்களுக்கே திருப்பிக் கொடுத்தார்கள். Invitation to Islam, 87-88.

சிசிலியைச் சேர்ந்த மேற்கத்திய சிந்தனையாளரான அமாரி என்பவர் கூறுகின்றார் :

முஸ்லிம்கள் சிசிலியைக் கைப்பற்றிய பொழுது, அதற்கு முன் தங்களது சொந்த சகோதரர்களான இத்தாலியர்களின் ஆட்சியில் இருந்ததை விட, பாதுகாப்பையும், சுகவாழ்வையும் பெற்றுக் கொண்டார்கள். Islam : The Perennial Religion, p.290.

நாத்மி லுகா என்பவர் கூறுகின்றார் :

திருமறைக் குர்ஆனில் ஒரு வசனம் உண்டு. இந்த வசனத்தை விட இன்னொரு சட்டத்தால் இந்த உலகத்தில் காணப்படும் அநீதத்தையும், பாரபட்சப் போக்கையும் தடுத்து விட முடியாது. Muhammad : The Message and the Messenger. p.26.

எந்த ஒரு கூட்டத்தார் மீதும் நீங்கள் கொண்டுள்ள வெறுப்பு நீதி செய்யாமலிருக்க உங்களைத் தூண்ட வேண்டாம். நீதி செய்யுங்கள் இதுவே (தக்வாவுக்கு) - பயபக்திக்கு மிக நெருக்கமாகும். (திருமறைக் குர்ஆன் அத்தியாயம் : அல்மாயிதா, வசன எண் : 8)

## வாழ்வுரிமை, சொத்துரிமை, கண்ணியம்

பொதுவாக இஸ்லாம் மனித சமுதயாத்தில் உள்ள அத்தனை பேருக்கும் வாழும் உரிமையை அடிப்படை உரிமையாக ஆக்கி வைத்துள்ளது. இதில் ஒரு மனிதனது வாழ்வாதார உரிமை, அவனது தனித்தன்மை, சொத்து, மற்றும் கண்ணியம் போன்றவற்றைப் பேணிக் கொள்வதற்கு வழி வகை செய்கின்றது. அவர்கள் முஸ்லிம்களாக இருந்தாலும் சரி அல்லது முஸ்லிம் அல்லாதவர்களாக இருந்தாலும் சரியே, இன்னும் அவர்கள் குடிமக்களாக இருந்தாலும் அல்லது குடிமக்கள் அல்லாத சுற்றுலாப் பயணியாக இருந்தாலும் சரியே..! மேற்கண்ட உரிமையை பேணிக் கொள்வதற்கு அனைவருக்கும் சம உரிமையை வழங்குகின்றது. இவை இறைவனால் வகுத்தளிக்கப்பட்ட கண்ணியமிக்க சட்டங்களாகும், மேலும் அவை மிகவும் கவனத்துடன் பாதுகாக்கப்பட்டும், இன்னும் சட்டம் அல்லாத எதனைக் கொண்டும் தள்ளுபடி செய்ய இயலாத அளவுக்கு அவற்றை நிர்வகித்து வரக் கூடியதுமாகும். ஒரு முஸ்லிம் அல்லாதவனைக் கூட காரணங்களின்றி கொல்தவற்கு தனிப்பட்ட எவருக்கும் எந்த உரிமையும் இல்லை, காரணமிருந்தாலும் அதனைச் சட்டத்தின் துணை கொண்டு தான் அதனை, உரிய அதிகாரம் பெற்றவர் தான் நிறைவேற்றும் அதிகாரம் பெற்றவராவார் என்று திருமறை தெளிவாகவே கூறி நிற்கின்றது. திருமறையை அருளிய அல்லாஹ் கூறுகின்றான் :

"வாருங்கள்! உங்கள் இணைவன் உங்கள் மீது விலக்கியிருப்பவற்றையும் (ஏவியிருப்பவற்றையும்) நாம் ஓதிக் காண்பிக்கிறேன் எப்பொருளையும் அவனுக்கு இணையாக வைக்காதீர்கள் பெற்றோர்களுக்கு நன்மை செய்யுங்கள் வறுமைக்குப் பயந்து உங்கள் குழந்தைகளைக் கொல்லாதீர்கள் - ஏனெனில் உங்களுக்கும், அவர்களுக்கும் நாமே உணவளிக்கின்றோம் வெளிப்டையான இரகசியமான மானக்கேடான காரியங்களை நீங்கள் நெருங்காதீர்கள் அல்லாஹ் தடுத்துள்ள எந்த ஓர் ஆத்மாவையும் நியாயமானதற்கு அல்லாமல் - கொலை செய்யாதீர்கள் - இவற்றை நீங்கள் உணர்ந்து கொள்வதற்காக (இறைவன்) உங்களுக்கு (இவ்வாறு) போதிக்கின்றான். (அல்குர்ஆன் அத்தியாயம் அல் அன்ஆம் (கால்நடைகள்): வசன எண் 151)

மேலும் இறைவன் கூறுகின்றான் :

இதன் காரணமாகவே, "நிச்சயமாக எவன் ஒருவன் கொலைக்குப் பதிலாகவோ அல்லது பூமியில் ஏற்படும் குழப்பத்தை(த் தடுப்பதற்காகவோ) அன்றி, மற்றொருவரைக் கொலை செய்கிறானோ அவன் மனிதர்கள் யாவரையுமே கொலை செய்தவன் போலாவான் மேலும், எவரொருவர் ஓராத்மாவை வாழ வைக்கிறாரோ அவர் மக்கள் யாவரையும் வாழ வைப்பவரைப் போலாவார்" (அல்குர்ஆன் அத்தியாயம் அல் மாயிதா (மரவட்டை) : வசன எண் 32)

இறைத்தூதர் (ஸல்) அவர்கள் ஹஜ்ஜின் பொழுது, அரஃபா பெருவெளியில் நின்று தனது தோழர்களுக்கு மத்தியில் குத்பா உரை நிகழ்த்திய பொழுது,

உங்களது இரத்தம், உங்களது சொத்துக்கள், உங்களது கண்ணியம் ஆகிய அனைத்தும் இந்த நாளைப் போலவே, இந்த நகரத்தைப் போலவே, மேலும் இந்த மாதத்தைப் போலவே புனிதமானவை" என்று கூறினார்கள். 56 Sahih Al-Bukhari, v.2, p.191.

இந்த புனிதத்தன்மை முஸ்லிம்களுக்கு மட்டும் உரித்தானதல்ல, ஏனென்றால் இது பற்றி இறைத்தூதர் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள் :

நம்முடன் ஒப்பந்தம் செய்திருக்கின்ற ஒருவரை எவரொருவர் கொலை செய்கின்றாரோ, அவர் சுவனத்தின் வாடையைக் கூட நுகர முடியாது, இன்னும் அந்த வாடையானதை நீங்கள் 40 வருட பயண தொலைவு அளவுக்குக் கண்டு கொள்ள முடியும், (நுகர்ந்து கொள்ள முடியும்). Sahih Al-Bukhari, v.8, p.48.

எந்தவிதக் காரணமுமில்லாமல், ஒரு முஸ்லிம் அல்லாதவருக்கு எந்தவித துன்பமும் விளைவித்து விட முடியாது, அது எந்தவிதத்தினில் இருந்தாலும் சரியே, அவனது கண்ணியத்தைக் குலைப்பதாக இருந்தாலும் சரியே, அவது சொத்துக்களுக்குச் சேதம் விளைவித்தாலும் சரியே, அவனை காயப்படுத்தினாலும் அல்லது கொலை செய்தாலும் சரியே.., எந்தவித சட்டக் காரணங்களும் இல்லாத நிலையில், அவன் மீது கை வைப்பது முற்றிலும் தடுக்கப்பட்டதாகும்.

இந்தமாதிரியான சட்டங்கள் சட்டங்களாக மட்டும் இஸ்லாமிய வரலாற்றில் நின்று விடவில்லை. மாறாக காலம் காலமாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன என்பதை வரலாற்றை ஆய்ந்து பார்ப்பவர்களுக்கு விளங்கும். இறைத்தூதர் (ஸல்) அவர்களது காலத்தில், ஒரு முஸ்லிம் ஒரு முஸ்லிம் அல்லாதவரைக் கொலை செய்து விடுகின்றார். இந்த நிலையில், அந்த வழக்கு இறைத்தூதர் (ஸல்) அவர்களது முன்னிலையில் வந்த பொழுது, அந்த முஸ்லிம் அல்லாதவருக்குச் சார்பாக வழக்காடுவதற்கு நானே தகுதியுடையவன் என்று கூறிய இறைத்தூதர் (ஸல்) அவர்கள், கொலையைச் செய்த அந்த முஸ்லிமை சிரச் சேதம் செய்து தண்டனையை நிறைவேற்றும்படி உத்தரவிடுகின்றார்கள். Sunan Ad-Darqutni, v.3, p.135; hadith No.168.

இஸ்லாத்தின் இரண்டாவது ஆட்சியாளர் உமர் (ரலி) அவர்களது காலத்தில் பனூ பக்ர் இப்னு வாயில் என்ற கோத்திரத்தைச் சேர்ந்த முஸ்லிம் ஒருவர், முஸ்லிம்களுடன் ஒப்பந்தம் செய்திருந்த முஸ்லிம் அல்லாத கோத்திரத்தைச் சேர்ந்த ஒருவரைக் கொலை செய்து விட்டார். இந்த வழக்கு உமர் (ரலி) அவர்களுக்கு முன்பு வந்த பொழுது, கொலையுண்ட நபரின் உற்றார்களை அழைத்து, பழிக்குப் பழி எடுத்துக் கொள்ளும்படி தீர்ப்பு வழங்க, கொலையைச் செய்த முஸ்லிமினுடைய தலை வெட்டப்படுகின்றது. Rights of the People of the Convenent in the Islamic State, p.18.

இஸ்லாமிய சாம்ராஜ்யத்தின் நான்காவது ஆட்சியாளர் அலீ (ரலி) அவர்களது காலம். முஸ்லிம்களுடன் ஒப்பந்தம் செய்திருந்த நபர் ஒருவரை ஒரு முஸ்லிம் கொலை செய்து விடுகின்றார். வழக்கு ஆட்சியாளராக அலீ (ரலி) அவர்கள் முன் வந்தது. முஸ்லிமின் மீது குற்றம் நிரூபணமானது. கொலையுண்ட முஸ்லிம் அல்லாத அந்த நபரின் உறவினர்களை அழைத்த அலீ (ரலி) அவர்கள் பழிக்குப் பழி எடுத்துக் கொள்ளும்படி, அதாவது அந்த முஸ்லிமினுடைய தலையைத் துண்டித்து விடும்படி உத்தரவிடுகின்றார்கள். தீர்ப்பினைக் கேட்ட, கொலையுண்ட நபரின் சகோதரர் கூறினார், நீங்கள் இவரின் தலையைத் துண்டிப்பதால் கொலையுண்ட எனது சகோதரர் திரும்பி வரப் போவதில்லை. அதற்குப் பதிலாக அவரிடமிருந்து எனக்கு இழப்பீட்டுத் தொகையைப் பெற்றுத் தாருங்கள், நான் திருப்தியோடு ஏற்றுக் கொள்கின்றேன் என்று கூறினார்.

இதனைக் கேட்ட அலீ (ரலி) அவர்கள், உங்களை இவரது கோத்திரத்தவர்கள் யாரும் மிரட்டினார்களா? அல்லது பயமுறுத்தினார்களா? அவ்வாறெல்லாம் நீங்கள் பயப்பட வேண்டாம். தண்டனையை நிறைவேற்ற விருப்பமா? என்று கேட்டார்கள். அதற்கு கொலையுண்ட நபரின் சகோதரர்

கூறினார், அவ்வாறல்ல, எனக்கு இழப்பீட்டுத் தொகையே போதுமானது. அவரைப் பழி எடுக்க விருப்பமில்லை என்று கூறிவிட்டார்.

இதனைக் கேட்ட ஆட்சித் தலைவரான அலீ (ரலி) அவர்கள் கூறினார்கள் :

அறிந்து கொள்ளுங்கள். எங்களிடம் ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கின்ற உங்களைப் பொறுத்தவரையில், உங்களது இரத்தமும் எங்களது இரத்தமும் ஒரே மதிப்புடையவை தான், அதற்கான இழப்பீடும் எங்களது இழப்பீட்டுத் தொகையைப் போன்று சமமானது தான் என்று கூறினார்கள். இதனை இன்னொரு வசனத்தில் கூறுவதென்றால்,

அவர்கள் நம்மிடம் பாதுகாப்பு வரியான ஜிஸ்யா வரியைச் செலுத்தி வருகின்றார்கள், எனவே அவர்களது வாழ்வும், சொத்தும் முஸ்லிம்களுடைய உடமையைப் போன்றே சரி சமமான மதிப்புடையதே..! என்று கூறினார்கள். As-Sunan al-Kubra, v.8, p.34.

இன்னும் சொல்லப் போனால், இஸ்லாமியப் போர் முறையான ஜிஹாதை எடுத்துக் கொண்டாலும் சரி.., சரியான காரணங்கள் மற்றும் நன்நோக்கத்திற்காக அன்றி நினைத்ததெற்கெல்லாம், ஜிஹாத்.., ஜிஹாத் என அறிவிக்க இயலாது. கீழ்க்கண்ட காரணங்களுக்காக மட்டுமே மேற்கண்ட போரைத் தொடுக்க இயலும், அதாவது :

1 கொடுமை மற்றும் அடக்குமுறையை எதிர்த்து, இதனை அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான் :

உங்களை எதிர்த்துப் போர் புரிபவர்களுடன் நீங்களும், அல்லாஹ்வின் பாதையில் போரிடுங்கள் ஆனால் வரம்பு மீறாதீர்கள் நிச்சயமாக அல்லாஹ் வரம்பு மீறுபவர்களை நேசிப்பதில்லை. (2:190)

மேலும் அல்லாஹ் கூறுகின்றான் :

(போர் செய்வது விலக்கப்பட்டுள்ள ரஜப், துல்கஃதா, துல்ஹஜ், முஹர்ரம் ஆகிய) புனித மாதத்திற்குப் புனித மாதமே ஈடாகும் இதே போன்று, எல்லாப் புனிதப் பொருட்களுக்கும் ஈடு உண்டு - ஆகவே, எவனாவது (அம்மாதத்தில்) உங்களுக்கு எதிராக வரம்பு கடந்து நடந்தால், உங்கள் மேல் அவன் எவ்வளவு வரம்பு மீறியுள்ளானோ அதே அளவு நீங்கள் அவன் மேல் வரம்வு மீறுங்கள் அல்லாஹ்வை பயந்து கொள்ளுங்கள் நிச்சயமாக அல்லாஹ் பயபக்தியுடையோருடன் இருக்கின்றான் என்பதை அறிந்து கொள்ளுங்கள். (2:194)

2 எவரொருவர் தங்களது உடன்படிக்கையை முறித்துக் கொள்கின்றார்களோ அல்லது செய்து கொண்ட ஒப்பந்தத்தை மீறுகின்றாரோ அதனை எதிர்த்தும் : இறைவன் கூறுகின்றான் :

அவர்களுடைய உடன்படிக்கைக்குப்பின், தம் சத்தியங்களுடைய மார்க்கத்தைப் பற்றியும் இழித்துக் குறை சொல்லி கொண்டு இருப்பார்களானால், அவர்கள் (மேற்கூறிய செயல்களிலிருந்து) விலகிக் கொள்வதற்காக நிராகரிப்பவர்களின் தலைவர்களுடன் போர் புரியுங்கள் ஏனெனில் அவர்களுக்கு நிச்சயமாக ஒப்பந்தங்கள் (என்று எதுவும்) இல்லை. (9:12)

3 சத்தியப் பிரச்சாரத்துக்குத் தடைக்கல்லாக நிற்பவர்களை எதிர்த்தும், இதனைக் குறித்து அல்லாஹ் கூறுகின்றான் :

ஃபித்னா (குழப்பமும், கலகமும்) நீங்கி அல்லாஹ்வுக்கே மார்க்கம் என்பது உறுதியாகும் வரை, நீங்கள் அவர்களுடன் போரிடுங்கள் ஆனால் அவர்கள் ஒதுங்கி விடுவார்களானால் - அக்கிரமக்காரர்கள் தவிர (வேறு எவருடனும்) பகை (கொண்டு போர் செய்தல்) கூடாது.

4 அடக்குமுறைக்குள்ளாக்கப்பட்ட மக்களுக்கு ஆதரவாகவும், அவர்களை அடக்குமுறைகளிலிருந்து விடுவிக்கவும், இறைவன் இதுபற்றித் தன்னுடைய திருமறையிலே கூறுகின்றான் :

பலஹீனமான ஆண்களையும் பெண்களையும், சிறு குழந்தைகளையும் பாதுகாப்பதற்காக, அல்லாஹ்வின் பாதையில் நீங்கள் போர் செய்யாதிருக்கக் காரணம் யாது? (அவர்களோ) "எங்கள் இறைவனே! அக்கிரமக்காரர்கள் இருக்கும் இவ்வூரைவிட்டு எங்களை வெளிப்படுத்துவாயாக் எங்களுக்காக உன்னிடமிருந்து ஓர் உதவியாளனையும் அளித்தருள்வாயாக" என்று பிரார்த்தனை செய்கிறார்கள்.

விஜய் ரோட்ரிக் என்ற இந்திய எழுத்தாளர் கூறுகின்றார் :

அநீதியையும் மற்றும் அடக்குமுறையையும் அகற்றுவதற்காக இறைத்தூதர் (ஸல்) அவர்களை ஜிஹாத் என்ற போரைத் தொடங்குவதற்கு இஸ்லாம் அனுமதி அளித்தது. இன்னும் அவர்களின் பிரச்சாரப் பாதைக்கு தடைக்கல்லாக நின்று கொண்டிருப்பவற்றை அகற்றுவதற்காகவும் அனுமதித்தது. இந்த பிரச்சாரகர்கள் யாரையும் இஸ்லாத்திற்குள் வந்து விடுமாறு வற்புறுத்தவில்லை. மாறாக, இஸ்லாத்திற்குள் வந்து விடுமாறு அழைப்பு விடுத்தார்கள், இன்னும் அதனை அவர்களது சொந்த விருப்பத்திற்கே விட்டு விட்டார்கள். இதன் காரணமாகவே, அவர்கள் எப்பொழுது இஸ்லாத்திற்குள் நுழைந்து விட்டார்களோ, அதனுடன் இறுகப் பிணைந்து விடுகின்றார்கள், அதனுடைய தீவிர ஆதரவாளர்களாகவும் மாறி விடுகின்றார்கள். இஸ்லாம் ஒரு அமைதியாக மார்க்கமாகும், இறைவனுடைய சாந்தியும், இன்னும் அனைத்து மக்களிடமும் சாந்தி சமாதானத்தையே அது கொண்டிருக்கின்றது. People's Impression about Islam. p.228.

முஸ்லிம் அல்லாதவரின் சொத்தில் முதற் கொண்டு, அடக்குமுறைகளிலிருந்தும், அதனை காரணமின்றி வலுக்கட்டாயமாக அபகரித்துக் கொள்வதிலிருந்தும் பாதுகாப்புப் பெற்றவனாக இருக்கின்றான். யாராவது ஒருவர் அவரது சொத்தைத் திருடி விட்டாரென்றால், திருடியவரின் கரம் துண்டிக்கப்படும், இன்னும் யாராவது அவரை மோசடி செய்திருந்தார் என்றால் அதற்கான தண்டனையை மோசடி செய்தவருக்கு வழங்கப்படும், இன்னும் எவராவது அவரிடம் கடன் வாங்கியிருந்தாரென்றால் அந்தக் கடன் தொகையை மீட்டுக் கொடுக்கப்படும்.

இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறியதாக காலித் பின் வலீத் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள் :

உங்களுடன் ஒப்பந்தம் செய்து கொண்டவர்களுடைய பொருள்களை, (வரி போன்ற அத்தியாவசிய வசூலிப்புக்காகவன்றி வேறெதற்காகவும்) எடுத்துக் கொள்வது, ஆகுமானதல்ல என்பதனை அறிந்து கொள்ளுங்கள்.

அஹ்மத் இப்னு துலன் என்பவர் எகிப்தின் ஆட்சியாளராக இருந்த நேரம் அது, இவருடைய தளபதி ஒருவரை ஒரு நகரத்தின் கவர்னராக நியமித்திருந்தார். ஒருநாள், கிறிஸ்தவ சந்நியாசி ஒருவர் அஹ்மத் இப்னு துலன் ன் அரண்மனைக்கு ஒரு புகார் மனுவைக் கொண்டு வந்தார். இதனை கவனித்த அரண்மனைக் காவலாளியான ஒருவர், அந்த சந்நியாசியை அழைத்து, நீங்கள் அரண்மனைக்கு வந்ததன் காரணமென்ன என்பதனை வினவினார்.

அதற்கு அந்த சந்நியாசி கூறினார்,

உங்களது கவர்னர் என் மீது அடக்குமுறையை ஏவி, என்னிடமிருந்த 300 திர்ஹம்களைக் கைப்பற்றிக் கொண்டார். அதனைப் புகாராகத் தெரிவிக்கவே அரண்மனை வந்தேன் என்றார்.

சரி..! நீங்கள் அந்த கவர்னரைப் பற்றிப் புகார் கூற வேண்டாம். அவர் கைப்பற்றிய அந்தப் பணத்தை நான் உங்களுக்குத் தருகின்றேன். என்னுடன் என் வீட்டுக்கு வந்த அதனைப் பெற்றுச் செல்லுங்கள் என்று அழைத்துச் சென்று, அந்தப் பணத்தை கொடுத்தனுப்புகின்றார்.

இந்தச் சம்பவத்தை எப்படியோ கேள்விப்பட்ட அஹ்மத் இப்னு துலன் அவர்கள், அந்த கவர்னரையும், அந்த அரண்மனைக் காவலாளியையும், கிறிஸ்தவ சந்நியாசியையும் அழைத்து வரும்படி உத்தரவிடுகின்றார். அவர்கள் அனைவரும் இப்பொழுது அரண்மனையில் அஹ்மத் இப்னு துலன் முன்பாக நின்று கொண்டிருந்தார்கள்.

முதலில் கவர்னரின் பக்கம் தனது கவனத்தைத் திருப்பிய மன்னர்,

உங்களுக்கு வரக் கூடிய வருமானம், உங்களது வாழ்க்கைத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளப் போதவில்லையா? நீங்கள் பிறரிடம் வசூலிக்கின்ற பணத்திற்கான சரியான காரணத்தைக் கூற வேண்டும் என்று கூட விரும்புவதில்லையா?

கவர்னர் மன்னருக்கு எதிராக எதையும் பேசத் திராணியற்றவராக, தனது குற்றத்தை ஒப்புக் கொள்வதைத் தவிர வேறு வழியில்லாத நிலையில் நின்று கொண்டிருந்தார். மன்னர் தொடர்ந்தார்..

பின் எதற்காக அவரிடமிருந்து அந்தப் பணத்தைக் கைப்பற்றினீர்? என்று கூறிவிட்டு, அவரைக் கவர்னர் பதவியிலிருந்து நீக்கும்படி அவையோருக்கு உத்தரவிட்டார்.

பின்பு, கிறிஸ்தவ சந்நியாசியின் பக்கம் திரும்பிய மன்னர், உங்களிடமிருந்து அவர் எவ்வளவு பணத்தை எடுத்துக் கொண்டார்.

சந்தியாசி கூறினார் : 300 திர்ஹம்களை எடுத்துக் கொண்டார், அஹ்மத் துலன் கூறினார், இது மிகவும் அற்பமானது, 3000 திர்ஹம்கள் என்று நீர் சொல்லி இருக்கக் கூடாதா? அதற்குத் தகுந்தாற் போல அவருக்குத் தண்டனையை நான் அதிகரித்திருப்பேனே..! சரி..! உம்முடைய வாக்குமூலத்தையே எடுத்துக் கொள்கின்றேன், என்று கூறி கவர்னரைப் பணி நீக்கம் செய்ய உத்தரவிட்டார்.

இன்னும் முஸ்லிமல்லாதவர்கள் தங்களது கௌரவத்தையும் பேணிக் கொள்ள உரிமை படைத்தவராகின்றார்கள், கெட்ட பேச்சுக்கள், அவதூறு போன்றவற்றிலிருந்தும் பாதுகாப்புப் பெற்றுக் கொள்ள உரிமை படைத்தவர்களாவார்கள். இவர்கள் முஸ்லிம்களுடன் ஒப்பந்தம் செய்திருக்கும்பட்சத்தில், முஸ்லிம்களைப் போலவே மேற்படி உரிமையைப் பெற்றவராகின்றார்கள். Ibn ‘Abidin, Radd al-Muhtar ‘ala ad-Durr al -Mukhtar, v.3, p.244.

இந்த உரிமை சக குடிமக்களுக்கு மட்டுமின்றி, இஸ்லாமியப் பிரதேசத்தில் வந்து தற்காலிகமாகத் தங்கிச் செல்லும் அனைவருக்கும் கூட பொதுவானதே. இவர்களுன் கூட பாதுகாவல், பாதுகாப்பு மற்றும் கவனிப்பு ஆகிய உரிமைகளைப் பெற்றுக் கொள்ள உரிமை படைத்தவர்களாகின்றார்கள். அல்லாஹ் தனது திருமறையிலே கூறுகின்றான் :

(நபியே!) முஷ்ரிக்குகளில் யாரேனும் உம்மிடம் புகலிடம் தேடி வந்தால், அல்லாஹ்வுடைய வசனங்களை அவர் செவியேற்கும் வரையில் அவருக்கு அபயமளிப்பீராக. அதன் பின் அவரை அவருக்குப் பாதுகாப்புக் கிடைக்கும் வேறு இடத்திற்கு (பத்திரமாக) அனுப்புவீராக - ஏனென்றால் அவர்கள் நிச்சயமாக அறியாத சமூகத்தினராக இருக்கிறார்கள். (9:6)

அலீ இப்னு அபீதாலிப் (ரலி) அவர்கள் அறிவித்திருக்கின்ற ஒரு நபிமொழியின் மூலமாக, அடைக்கலம் தருவது என்பது அனைத்து முஸ்லிமின் மீது உள்ள கடமையாகும்.

இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள் :

ஒப்பந்தங்களை நிறைவேற்றுவது என்பது சமுதாயத்தின் மீது விதிக்கப்பட்டது, அதனை அருகில் உள்ள முஸ்லிம் நிறைவேற்றுவதற்கு முயற்சி செய்யட்டும், ஒரு முஸ்லிமினால் பாதுகாப்பு வழங்கப்பட்டதன் பின்பு, அதனை யாராவது முறிக்க அல்லது அதனை நிறைவேற்றாமல் மீறும் பட்சத்தில், அவர் அல்லாஹ்வின் சாபத்திற்குரியவராகின்றார், இன்னும் வானவர்கள், மற்றும் அனைத்து மக்களின் சாபத்திற்கும், இன்னும் இவருக்காக எந்தப் பரிந்துரையும் அந்த மறுமை நாளின் பொழுது ஏற்றுக் கொள்ளப்படவும் மாட்டாது. Sahih al – Bukhari v.4 p.74

இன்னொரு நபிமொழியின் வாசகமானது இவ்வாறு கூறுகின்றது :

அருகில் இருக்கக் கூடிய முஸ்லிம் (மற்ற அனைவரைக் காட்டிலும்) அதிகம் பாதுகாப்பு வழங்க வேண்டும். Sunan Ibn Majah, v.2. p.895

இதன் காரணமாக, இறைத்தூதர் (ஸல்) அவர்களின் தோழியர்களுள் ஒருவாரான, உம்மு ஹானீ பின்த் அபீ தாலிப் (ரலி) அவர்கள் இறைத்தூதர் (ஸல்) அவர்களிடம் கூறினார்கள் :

இறைத்தூதர் (ஸல்) அவர்களே..!

ஹு பைராஹ் என்பவருக்கு நான் அடைக்கலம் கொடுத்திருக்கும் நிலையில், அவர் மீது அலி (ரலி) அவர்கள் போர் செய்வேன் என்று கூறுகின்றார்.

இறைத்தூதர் (ஸல்) அவர்கள் இவ்வாறு பதில் கூறினார்கள் :

நீங்கள் யாருக்கு அடைக்கலம் கொடுத்திருக்கின்றீர்களோ, அவர் நம் அனைவரின் பாதுகாப்பின் கீழ் பாதுகாப்புப் பெற்றவராக இருக்கின்றார். Sahih al – Bukhari, v.4, p.67

இந்தப் பாதுகாப்பு என்பது இஸ்லாத்திற்கு மட்டுமே உரிய உயரிய கொள்கையாகும். இதன் மூலம் ஒரு முஸ்லிமல்லாதவர், ஒரு முஸ்லிமினிடத்தில் பாதுகாப்புக் கோருவார் என்று சொன்னால், அவர் அதனை வழங்குவதோடு, அதனை மீறுவோர் கடுமையான தண்டனைக்கு உள்ளாவார் என்றும் எச்சரிக்கை செய்யயும் வேண்டும். இதன் மூலம் பாதுகாப்பைப் பெற்றுக் கொண்டவர், பிறரது தாக்குதல் மற்றும் அவருக்கு ஆபத்து விளைவிக்கும் நிலைகளிலிருந்து அவர் பாதுகாப்புப் பெற்றுக் கொள்வதோடு, முஸ்லிம்கள் தந்த வாக்குறுதியை மீறாதவர்கள் என்ற உன்னத நிலையையும் அவர் கண்டு கொள்வார். இது மற்ற மதங்களில் இல்லாததும், இஸ்லாத்தில் மட்டுமே உள்ள சிறப்புக் கூறுகளாகும்.

### அடக்குமுறையிலிருந்தும் பாதுகாப்பு

இஸ்லாமியச் சட்டங்களானது, முஸ்லிமல்லாதவர்களின் பாதுகாப்பு விஷயத்தில் பொடுபோக்குத் தனமாகச் செயல்படாது. இஸ்லாமிய ஆட்சிப் பிரதேசத்திற்குள் அவர் பாதுகாப்புப் பெற்று இருந்து கொண்டிருக்கும் நிலையில், இவர்களை அச்சுறுத்தும் நோக்கில் ஏதேனும் வெளிச் சக்திகள் முனையுமானால், முஸ்லிம்களைப் பாதுகாப்பதில் எவ்வாறு இஸ்லாமிய அரசு செயல்படுமோ அவ்வாறே, இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளாதவர்களின் பாதுகாப்பு விஷயத்திலும் அதிக அக்கறையுடன் செயல்படும். அவர்கள் செலுத்தக் கூடிய பாதுகாப்பு வரியானது, அவர்களின் பாதுகாப்பு விஷயத்திற்காகவென்று வசூல் செய்யப்படுகின்ற காரணத்தால், முஸ்லிமல்லாதவர்களின் பாதுகாப்பு விஷயத்தில் இஸ்லாமிய அரசு பொடுபோக்காகச் செயல்பட முடியாது. இன்னும், ஜிஸ்யா வரி செலுத்தி வரும் நிலையில், எதிரிகளினால் சிறை பிடித்துச் செல்லப்பட்டால், அவ்வாறு சிறை பிடிக்கப்பட்டுச் செல்லப்பட்டவர்களை, என்ன விலை கொடுத்தாவது மீட்டுக் கொண்டு வர வேண்டிய பொறுப்பு இஸ்லாமிய அரசைச் சார்ந்ததுமாகும்.

இஸ்லாமிய உலகின் மிகச் சிறந்த அறிஞரான, இப்னு ஹஸ்ம் அவர்கள், இந்தக் கடமை பற்றி இவ்வாறு குறிப்பிடுகின்றார்கள் :

நாம் எதிரி நாடு ஒன்றினால் தாக்கப்படுவோமானால், அதில் நம்முடன் ஒப்பந்தம் செய்திருக்கின்ற முஸ்லிமல்லாதவர்களும் இதனால் தாக்கப்படுவார்கள் என்றிருக்கும் நிலையில், முஸ்லிம்கள் முழு ஆயுத தரிப்பில் போருக்குத் தயாராகுவதோடு, நம்முடன் ஒப்பந்தம் செய்திருக்கின்ற முஸ்லிமல்லாதவர்களைப் பாதுகாப்பதற்கான அந்தப் போரில் செத்து மடிவதற்கும் தயாராகி விட வேண்டும், இதன் மூலம் அல்லாஹ்வும் மற்றும் அவனது தூதர் (ஸல்) அவர்களும் வழங்கியிருக்கின்ற அந்தப் பாதுகாப்பு ஒப்பந்தத்தினை முழுமையாக நிறைவேற்றிக் கொடுக்க முஸ்லிம்கள் முழுமையாகப் பாடுபட வேண்டும். இதுவல்லாமல், இதனை விட மட்டமாகவோ மற்றும் தோல்வியை ஒப்புக் கொண்டு சரணடைந்து விடுவோமென்றால், நாம் வழங்கிய அந்த புனிதமான ஒப்பந்தத்தை நிறைவேற்றாத குற்றத்திற்கும், அதனை நிறைவேற்ற மறுத்த குற்றத்திற்கும் ஆளாவோம் என்று கூறுகின்றார்கள். Al-Furuq, v.3, p.14. Also refer to As-Sawwa, A. The Islamic View of non-Muslims in Muslim Society, in : The Treatment of non-Muslims in Islam, p.211.

அபூ உபைதா பின் அல் ஜர்ராஹ் (ரலி) அவர்கள் பைஸாந்தியப் படைகளுக்கு எதிரான போரில் தளபதியாக நியமிக்கப்பட்டிருந்த நேரம். (Kitab al-Kharaj, pp.149-151). முஸ்லிம்களுடன் சமாதான ஒப்பந்தம் செய்து கொண்ட நகரங்களிலிருந்த சில நபர்களைத் தேர்ந்தெடுத்து, பைஸாந்தியப் படைகளின் சதி வேலைகள் குறித்து உளவு பார்ப்பதற்காக அனுப்பி வைக்கப்பட்டார்கள். அவ்வாறு அனுப்பி வைக்கப்பட்ட ஒற்றர்கள், பைஸாந்தியப் படைகள் மிகப் பெரிய ராணுவம் ஒன்றைத் தயார் செய்து, முஸ்லிம்களுக்கு எதிராகப் போர் செய்யத் தயாராகி வருவதாக, ஒருவர் பின் ஒருவராக வந்து தெரிவித்துக் கொண்டே இருந்தார்கள். ஒருவர் பின் ஒருவராக இந்த பைஸாந்தியப் படைகள் முஸ்லிம்களுக்கு எதிராகப் போர் செய்யத் தயாராகி வரும் செய்தியை உறுதிப்படுத்தியவுடன், பாதுகாப்பு விஷயத்தில் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதனை உறுதி செய்த அபூ உபைதா பின் அல் ஜர்ராஹ் (ரலி) அவர்கள், ஒவ்வொரு நகரத்திலும் நியமிக்கப்பட்டிருந்த தனது உதவியாளர்களுக்கு ஒரு கடிதம் ஒன்றை எழுதி அனுப்பி வைத்தார்.

அந்தக் கடிதத்தில் நாம் பாதுகாப்பு வழங்குவதற்கு உத்தரவாதம் அளித்து, யார் யாரிடமெல்லாம் ஜிஸ்யா என்ற பாதுகாப்பு வரியை வசூல் செய்திருக்கின்றோமோ, அந்தப் பணத்தை அவரவர்களிடம் திருப்பிக் கொடுத்து விடும்படிக் கூறி விட்டு, கீழ்க்காணும் செய்தியை அவர்களுக்கு அறிவித்து விடும்படி உத்தரவிடுகின்றார்கள்.

நாங்கள் உங்களிடம் வசூல் செய்த பணத்தை திருப்பிக் கொடுத்து விடுகின்றோம், ஏனென்றால், எம்மை எதிர்ப்பதற்காக ஒரு பெரும் படை தயாராகி வரும் செய்தி கிடைத்துள்ளது. நாம் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் நிபந்தனைகளின் அடிப்படையில், நாம் உங்களைப் பாதுகாப்பதாக வாக்குறுதி அளித்திருக்கின்றோம், அதனை நிறைவேற்ற இயலாத சூழ்நிலை உருவாகி வருவதாக அறிகின்றோம், எனவே பாதுகாப்போம் என்று உங்களிடம் வசூல் செய்த பணத்தைத் திருப்பித் தருகின்றோம், அதனை நீங்கள் எங்களிடம் இருந்து திரும்பப் பெற்றுக் கொள்ளுங்கள். அல்லாஹ் எங்களுக்கு வெற்றியை அளித்தால், நாம் உங்களுடன் செய்து கொண்டிருக்கின்ற ஒப்பந்தப்படி நாம் நடந்து கொள்வோம்' என்று அதில் குறிப்பிட்டிருந்தார்கள்.

அபூ உபைதா (ரலி) அவர்களின் உதவியாளர்களின் செய்தியை அந்த முஸ்லிமல்லாத மக்களிடம் அறிவித்து விட்டு, அந்தப் பணத்தைத் திருப்பிக் கொடுத்த பொழுது, அவர்கள் இவ்வாறு கூறினார்கள் :

அல்லாஹ் உங்களைப் பாதுகாத்து எங்களிடம் திருப்பி அனுப்புவானாக, அல்லாஹ் உங்களுக்கு வெற்றியையும் அருள்வானாக. நிச்சயமாக..! நீங்கள் இருக்கும் இந்த இடத்தில் பைஸாந்தியர்கள் இருந்திருப்பார்களேயானால், கண்டிப்பாக இந்தப் பணத்தில் எதனையும் திருப்பித் தந்திருக்க மாட்டார்கள். எங்களிடமிருந்து அத்தனையையும் பறித்துக் கொண்டு, எதனையும் மிச்சம் வைத்திருக்காமல் அபகரித்துச் சென்றிருப்பார்கள் என்று கூறினார்கள்'.

பின் இரண்டு படைகளும் கடுமையாக மோதிக் கொண்டன. இரு பக்கமும் கடுமையான சேதம் விளைந்த போதிலும், இறுதியில் முஸ்லிம்கள் வெற்றி பெற்றார்கள். இதற்கு முன் முஸ்லிம்களுடம் ஒப்பந்தம் செய்து கொண்டிராத மற்ற நகரத்து மக்கள், பைஸாந்தியர்கள் தங்களுடன் நடந்து கொண்ட முறையையும், தோல்வியடைந்த நிலையையும் கண்டு விட்டு, முஸ்லிம்களிடம் சாமாதனம் ஒப்பந்தம் செய்து கொள்ள தூது அனுப்பினார்கள். இதற்கு முன் மற்ற நகரத்து மக்களிடம் எவ்வாறு முஸ்லிம்கள் ஒப்பந்தம் செய்து கொண்டார்களோ, அதனைப் போலவே இவர்களிடமும் பாதுகாப்பு ஒப்பந்தம் செய்து கொண்டார்கள். ஆனால், அவர்கள் ஒரு விதிமுறையை மட்டும் இணைத்துக் கொள்ள விரும்பினார்கள். தங்களது பகுதிகளில் ஒழிந்து கொண்டிருக்கும் பைஸாந்தியப் படை வீரர்கள் பாதுகாப்பாக வெளியேறி, தங்களது நாட்டுடன், தங்களுடைய குடும்பங்களுடன் சென்று இணைந்து கொள்ளுமுகமாக அவர்களுக்கு எந்தவித இடையூறுமின்றி அவர்களது வழியில் திரும்பிச் செல்ல அனுமதி வழங்க வேண்டும் என்று வேண்டிக் கொண்டார்கள். அதற்கு சம்மதம் தெரிவிக்கப்பட்டதோடு, பைஸாந்தியப் படையின் எஞ்சிய வீரர்கள் தங்களது பகுதிகளுக்கு எந்தவித இடையூறும் இன்றி திரும்பிச் செல்ல அனுமதிக்கப்பட்டனர். பின்பு, அந்த மக்கள் ஜிஸ்யா வரியை அபூ உபைதா (ரலி) அவர்களுக்கு அனுப்பி வைத்தார்கள்.

போர் முடிந்து அபூ உபைதா (ரலி) அவர்கள் தனது தாயகம் திரும்பிக் கொண்டிருக்கின்றார். அவர் கடக்கும் ஒவ்வொரு நகரத்தைக் கடக்கும் பொழுதும், இதற்கு முன் அபூ உபைதா (ரலி) அவர்களிடம் ஒப்பந்தங்கள் செய்து கொள்ளாத மக்கள் தங்களது தலைவர்களை அபூ உபைதா (ரலி) அவர்களிடம் அனுப்பி, இதற்கு முன் மற்ற நகரங்களில் எவ்வாறு நீங்கள் பாதுகாப்பு ஒப்பந்தம் செய்து கொண்டீர்களோ, அதனைப் போன்றதொரு ஒப்பந்தத்தை நாங்களும் உங்களுடன் செய்து கொள்ள விரும்புகின்றோம் என்று கூறக் கூடியவர்களாக இருந்தார்கள். இன்னும் இதற்கு முன் பாதுகாப்பு ஒப்பந்தம் செய்து கொண்டிருந்த மக்கள், தங்களிடம் திருப்பி அளிக்கப்பட்ட பாதுகாப்பு வரி மற்றும் நில வரியை மீண்டும் அபூ உபைதா (ரலி) அவர்களிடம் திருப்பிக் கொடுத்து, தாங்கள் ஏற்கனவே ஒப்புக் கொண்டிருந்த ஒப்பந்தத்தைப் மீண்டும் அதனை எந்தவித மாற்றத்திற்கும் உட்படுத்தாமல், புதுப்பித்துக் கொண்டார்கள்.

இஸ்லாமிய வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் எழுதப்பட்ட இன்னுமொரு ஒளிபடைத்த சரித்திரச் சான்று ஒன்றை இங்கு பார்ப்போம்.

இப்னு தைமிய்யா (ரஹ்) அவர்கள் வாழ்ந்த காலமது, அப்பொழுது சிரியாவைக் கைப்பற்றிக் கொண்டனர் தார்த்தாரியர்கள். இப்னு தைமிய்யா அவர்கள் தார்த்தாரியர்கள் தலைவராக குல்துஷா என்பவரிடம் நேரடியாகச் சென்று, கைதிகளாகச் சிறைபிடிக்கப்பட்டவர்களை விடுதலை செய்யுமாறு கோரினார்கள். இப்னு தைமிய்யா அவர்களின் வேண்டுகோளை ஏற்றுக் கொண்ட குல்துஷா முஸ்லிம் கைதிகளை விடுதலை செய்தார். இப்னு தைமிய்யா அவர்கள் இந்தச் செயலுக்கு எதிர்ப்புத் தெரிவித்ததோடல்லாமல்,

எங்களுடன் ஒப்பந்தம் செய்திருக்கின்ற கிறிஸ்தவர்களையும், யூதர்களையும் விடுவிக்காத வரை நான் திருப்தியடைய மாட்டேன், அவர்களைப் பாதுகாப்பது எங்களது கடமையாக இருக்கின்றது. எங்களது

சொந்த மக்களை விடுவித்து விட்டு, எங்களுடன் பாதுகாப்பு ஒப்பந்தம் செய்திருக்கின்ற மக்களை சிறையில் வாட விட்டுச் செல்ல முடியாது. தார்த்தாரியர் தலைவர் மற்ற அனைவரையும் விடுவிக்கும் வரை இப்னு தைமிய்யா (ரஹ்) அவர்கள் ஓயவில்லை. Non-Muslim in Islamic Society, p.10.

வெளியிலிருந்து வரும் தாக்குதல்களிலிருந்தும், ஆபத்துக்களிலிருந்தும் முஸ்லிம்களைப் பாதுகாப்பது முஸ்லிம்களின் கடமையாக இருக்கின்ற அதேவேளை, உள்நாட்டுக்குள் எழுகின்ற ஆபத்துக்களிலிருந்தும் அவர்களைப் பாதுகாப்பதென்பது அதனை விட அதி முக்கியத்துவம் வாய்ந்ததாகும். அல் மவர்தி அவர்கள் கூறுகின்றார்கள் :

முஸ்லிமல்லாதவர்கள் அளிக்கின்ற ஜிஸ்யா என்னும் பாதுகாப்பு வரியானது இரண்டு விதமான உரிமைகளை அவர்கள் பெற்றுக் கொள்வதைத் தீர்மானிக்கின்றது. முதலாவது, அவர்கள் எல்லாவித தொந்தரவுகளிலிருந்தும் விடுவித்து விடுவது, இரண்டாவது, எல்லாவித ஆபத்துக்களிலிருந்தும் பாதுகாப்பது. இந்த அளவில் சமூகத்தில் அவர்களைப் பாதுகாப்பதும் இன்னும் வெளியிலிருந்து வரக் கூடிய ஆபத்துக்களிலிருந்து பாதுகாப்பதுமாகும். Al-Ahkam as-Sulthaniyah, p.143; refer also to As-Sawwa, A. The Islamic View of non-Muslims in Muslim Society, p.211.

அவர்களைப் பாதுகாக்கும் பொறுப்பிலிருந்து தவறி விடுவதானது, அவர்கள் மீது தொடுக்கின்ற அடக்குமுறைக்குயாகும். இஸ்லாம் அனைத்துவித அடக்குமுறைகளிலிருந்தும் மக்களை விடுவித்துள்ளது, அவ்வாறு செயல்படுவோரை முழு மூச்சோடு எதிர்க்கவும் செய்கின்றது. அல்லாஹ் தனது திருமறையில் இதுபற்றிக் கூறுகின்றான் :

நீங்கள் சொல்லியதையெல்லாம் திடனாக இவர்கள் பொய்யாக்கிவிட்டனா் ஆகவே (இப்போது வேதனையைத்) தடுத்துக் கொளளவோ, உதவி பெற்றுக் கொள்ளவோ நீங்கள் சக்தி பெறமாட்டீர்கள் மேலும் உங்களில் எவன் அநியாயம் செய்து கொண்டிருந்தானோ, அவனை நாம் பெரியதொரு வேதனையைச் சுவைக்கச்செய்வோம்" (என்று இறைவன் கூறுவான்). (அல் ஃபுர்கான் : 19)

அல்லாஹ் தனது குத்ஸியில் கூறுவதாக, இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறுகின்றார்கள் :

என்னுடைய அடியார்களே..! அடக்குமுறை செய்வதை எனக்கு நானே தடை செய்துள்ளேன், மேலும் உங்களுக்கிடையிம் அடக்குமுறையில் ஈடுபடுவதையும் தடை செய்திருக்கின்றேன், எனவே அடக்குமுறை செய்யாதீர்கள். Riyadh as-Saliheen, p.65

ஒப்பந்தம் செய்திருக்கின்ற முஸ்லிம் அல்லாதவர்கள் மீது அடக்குமுறையில் ஈடுபடுவது என்பது பாவமானதாகும். செய்த ஒப்பந்தத்தின் அடிப்படையில், ஒப்பந்தங்களை நிறைவேற்றுவது ஆட்சியாளரின் கடமையாகும், அதனை அவரது உதவியாளர்கள் நல்ல முறையில் நிறைவேற்றிட வேண்டும்.

அவர்களிடம் செய்திருக்கின்ற ஒப்பந்தங்களை மீறுவது, அல்லாஹ்வுக்கு எதிராகப் புரியக் கூடிய மிகப் பெரும் குற்றமாகும் என்று இறைத்தூதர் (ஸல்) அவர்கள் குறிப்பிட்டுக் கூறியுள்ளார்கள் :

யாராவது (ஜிஸ்யா வழங்கும்) திம்மியை நோவினை செய்வாராகில், அவர் என்னை நோவினை செய்வதாக எண்ணிக் கொள்ளட்டும். என்னை யாராவது நோவினை செய்வாராகில், அவர் அல்லாஹ்வுக்கு எதிராக நோவினை செய்வதில் ஈடுபட்டவராவார். Al-Jami'as -Saghir, Hadith No.8270

இன்னும் யாராவது ஒரு திம்மிக்கு நோவினை செய்வாராகில், நாளை நியாயத் தீர்ப்பு நாளன்று அந்த திம்மிக்கு ஆதரவாக நான் வழக்காடுவேன் என்றும் இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறியிருக்கின்றார்கள் :

யாராவது திம்மியை நோவினை செய்வாராகில், அவருக்கு நான் எதிரியாவேன். அவர் எனக்கு எதிரியாகி விட்டாரெனில், நாளை மறுமை நாளில் நான் அவரை எதிர்ப்பேன். Al-Jami'as -Saghir, Hadith No.8270

இதனை இன்னுமொரு வார்த்தையில் இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறியிருப்பதைப் பாருங்கள் :

நீங்கள் அறிந்து கொள்ளுங்கள், நீங்கள் ஒப்பந்தம் செய்திருக்கின்ற (திம்மிகளான)வர்கள் மீது அவர்கள் தாங்கவியலாத வரியை சுமத்துவதும் அல்லது அவர்களது விருப்பமின்றி அவர்களது பொருட்களை எடுத்துக் கொள்வோர்களுக்கு எதிராக நான் மறுமை நாளையில் வழக்காடுவேன். As-Sunan al-Kubra, v.9. p.205

இதன் மூலம் பாதுகாப்பு ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கின்றவர்களை பாதுகாப்பது என்பது நமது தலையாய கடமைகளில் ஒன்றாக இருப்பதை நாம் உணர்ந்து கொள்ளலாம்.

மேலே உள்ள அனைத்து விபரங்களும், இஸ்லாமிய அரசுடன் ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கின்ற இஸ்லாம் அல்லாதவர்களையும், அவர்களது உடமைகளையும் பாதுகாப்பது என்பது முஸ்லிம்களின் தலையாய கடமையாகும் என்பதை விளக்கி நிற்கின்றன. இதுபற்றி அல் குராஃபி என்பவர் குறிப்பிடும் பொழுது :

அவர்களுக்கிடையே நாம் செய்து கொண்டவைகள் ஒப்பந்தமென்னும் நிலையில், அதில் உள்ள விதிமுறைகள் யாவும் நம்மையும் கட்டுப்படுத்தக் கூடியவைகள், அவர்கள் நம்முடைய அண்டை வீட்டுக் காரரைப் போல நம்முடைய பாதுகாப்பு வளையத்திற்குள் உள்ளவர்கள், அது நம்முடைய பாதுகாப்பு சம்பந்தப்பட்டதும், இன்னும் அது அல்லாஹ்வினுடைய ஒப்பந்தமும், இன்னும் இறைத்தூதர் (ஸல்) அவர்களது ஒப்பந்தமும், இன்னும் நம்முடைய மார்க்கமான இஸ்லாம் செய்து கொண்ட ஒப்பந்தமுமாகும்.

யாராவது ஒருவர் இத்தகைய ஒப்பந்தங்களைச் செய்து கொண்டவர்கள் மீது பேச்சின் மூலமாக, அவரது நற்பெயருக்குக் களங்கம் ஏற்படுத்துவது, அவர்களைப் புண்படச் செய்வது அல்லது இது போன்று அவர்களை புண்படுத்தக் கூடியவற்றைச் செய்வது என்பவை யாவும், அல்லாஹ்விடமும், இன்னும் அவனது தூதர் (ஸல்) அவர்களிடமும், இன்னும் இஸ்லாத்திடமும் செய்து கொண்ட ஒப்பந்தத்தை மிகவும் இலகுவாக எடுத்துக் கொண்டவர் போன்றவராவார். Al-Furuk, p.14.

முஸ்லிம் அல்லாதவர்களிடம் செய்து கொண்டிருக்கக் கூடிய ஒப்பதங்கள் பற்றி முந்தைய ஆட்சியாளர்கள் எவ்வாறு கவனமாகச் செயல்பட்டார்கள் என்பதற்கு இஸ்லாத்தின் இரண்டாவது கலீஃபவாக – ஆட்சியாளராக இருந்த உமர் (ரலி) அவர்களின் செயல்பாடுகள் நமக்கு மிகச் சிறந்த உதாரணங்களாகத் திகழ்கின்றன.

பல்வேறு பிரதேசங்களில் இருந்து வரக் கூடிய பார்வையாளர்களிடம், அவர்களது பிரதேசங்களில் வாழக் கூடிய முஸ்லிம் அல்லாதவர்களின் நிலை எவ்வாறிருக்கின்றது என்பது பற்றி விசாரித்தறியக் கூடியவர்களாக உமர் (ரலி) அவர்கள் இருந்தார்கள்.

அதற்கு அந்தப் பார்வையாளர்கள்,

அவர்களிடம் நாம் செய்து கொண்டிருக்கக் கூடிய ஒப்பந்தங்கள், 'இன்னும் நடைமுறையில் உறுதியாக அமுல்படுத்தப்பட்டு வருகின்றன என்பதனை நாங்கள் அறிவோம்', என்று கூறினார்கள். Tarikh at-Tabari, v.4, p.218.

உமர் (ரலி) அவர்கள் தனது மரணப்படுக்கையில் இருந்து கொண்டிருக்கும் பொழுது,

"நம்முடன் ஒப்பந்தங்கள் செய்து கொண்டிருக்கக் கூடிய மக்களிடம் தொடர்ந்தும் நல்ல முறையில் நடந்து வாருங்கள்" என்று தன்னை அடுத்து வரக் கூடிய ஆட்சியாளருக்கு அறிவுரை கூறினார்கள்.

அபூ யூசுப் (ரலி) மற்றும் அம்ர் இப்னு மைமூன் (ரலி) அவர்கள் ஆகிய இருவரும் உமர் (ரலி) அவர்கள் இவ்வாறு கூறியதாகக் கூறுகின்றார்கள் :

எனக்குப் பின்னால் வரக் கூடிய ஆட்சியாளர் யாராக இருப்பினும், அவரிடம் கூறுங்கள்.., ஒப்பந்தங்கள் செய்து கொண்டவர்களிடம் நல்லமுறையில் நடந்து கொள்ளச் சொல்லுங்கள், ஒப்பந்தங்களைப் பேணி நடக்கச் சொல்லுங்கள், அவர்களைத் துன்புறுத்தக் கூடியவர்களை எதிர்த்துப் போரிடும்படிக் கூறுங்கள். இன்னும் அவர்கள் தாங்கவியலாத சுமைகளைச் சுமத்த வேண்டாம் என்றும் அவரிடம் சொல்லுங்கள் என்று கூறினார்கள். Kitab al-Kharaj, p.1136.

மேலே குறிப்பிட்ட அத்தனையும், இஸ்லாத்தை நம்பி அதனிடம் ஒப்பந்தம் செய்து கொண்ட மக்களிடம் எவ்வாறு ஒரு முஸ்லிம் நடந்து கொள்ள வேண்டும் என்பதனை இஸ்லாம் விரும்புகின்றது என்பதற்கு சிறந்த எடுத்துக்காட்டுகளும், ஆதாரங்களுமாகும். குறிப்பாக தலைவர்கள் இதனைப் பேணி வருவதோடு, அவர்களது உரிமையை மீறக் கூடிய எந்தச் செயலும் ஒரு கடுமையான குற்றமாகும் என்பதை அறிவதோடு, அவர்களுக்கும் நமக்கும் வழங்கப்பட்டிருக்கும் உரிமைகளும், கடமைகளும் மனிதனால் வகுக்கப்பட்டதல்ல, மாறாக உங்களையும் எங்களையும் படைத்த வல்ல அல்லாஹ்வினால் வகுத்தளிக்கப்பட்ட சட்டங்களாகும் என்பதனையும் உணர்ந்து அந்தத் தலைவர் செயல்படக் கூடியவராக இருக்க வேண்டும் என்பதையும் இஸ்லாம் இங்கே தெளிவாக்கி இருக்கின்றது.

## நல்ல முறையில் நடத்துவதும் அவர்களுடைய உரிமையாகும்

குர்ஆன் முஸ்லிம்களுக்குக் கூறும் அறிவுரை யாதெனில், அவர்களை நல்லமுறையில் நடத்த வேண்டும் என்பதைத் தான் தெளிவாக்குகின்றது. முஸ்லிம் அல்லாதவர்கள் நம்மீது பகைமை பாராட்டாத வரைக்கும் அவர்களுடன் நல்ல முறையிலும், தர்மத்தின் அடிப்படையிலும், தாராளத் தன்மையுடனும் அவர்களுடன் நடந்து கொள்ள வேண்டும் என்பதை அல்லாஹ் இந்த முஸ்லிம் சமுதாயத்திற்கு அறிவுருத்துவது யாதெனில்,

மார்க்க (விஷய)த்தில் உங்களிடம் போரிடாமலும், உங்கள் இல்லங்களிலிருந்து உங்களை வெளியேற்றாமலும் இருந்தார்களே அவர்களுக்கு நீங்கள் நன்மை செய்வதையும், அவர்களுக்கு நீங்கள் நீதி செய்வதையும் அல்லாஹ் விலக்கவில்லை - நிச்சயமாக அல்லாஹ் நீதி செய்பவர்களை நேசிக்கிறான். நிச்சயமாக அல்லாஹ் உங்களை விலக்குவதெல்லாம் மார்க்க விஷயத்தில் உங்களிடம் போர் செய்து உங்களை உங்கள் இல்லங்களை விட்டும் வெளியேற்றி, நீங்கள் வெளியேற்றப்படுவதற்கு உதவியும் செய்தார்களே, அத்தகையவர்களை நீங்கள் நேசர்களாக ஆக்கிக் கொள்வதைத் தான் - எனவே, எவர்கள் அவர்களை நேசர்களாக்கிக் கொள்கிறார்களோ அவர்கள் தாம் அநியாயம் செய்பவர்கள். (60:8-9)

அவர்களிடம் இரக்கத்துடனும், நீதியுடன் நடந்து கொள்ளுங்கள் என்று முஸ்லிம்களை அறிவுறுத்துவதன் மூலம், மேலே உள்ள தலைப்பின் பொருளை விட இது மிகச் சிறந்த அறிவுறுத்தலாக அமைந்துள்ளது. மிகவும் ஆழமான கருத்துடையது. இதனை இமாம் அல் குரா.ஃபி அவர்கள் விளக்குவதைப் பாருங்கள் :

பலவீனர்கள் மீது மென்மையாக நடந்து கொள்ளுதல், ஏழ்மையானவர்களின் தேவைகளை அறிந்து அதனை நிறைவு செய்தல், பசித்தவர்களுக்கு உணவூட்டுதல், அவர்களது அங்கங்களை மறைப்பதற்கு உடை அளித்தல், இன்னும் அவர்களுடன் கனிவான முறையில் பேசுதல். மேற்கண்டவற்றை அன்பாகவும், கனிவான நடத்தைகளின் மூலம் மட்டுமே நிறைவேற்ற வேண்டுமே ஒழிய, அதிகாரத்தின் மூலமாகவும் மற்றும் முஸ்லிம் அல்லாதவர்களின் கண்ணியத்திற்கு களங்கம் கற்பிக்கும் வகையிலும்

நடந்து கொள்ளக் கூடாது. இன்னும் அந்த முஸ்லிம் அல்லாதவர்கள் உங்களுக்கு சதா தொந்திரவு தரக் கூடியவர்களாக இருந்து, இன்னும் அவர்களை அந்த இடத்திலிருந்து அப்புறப்படுத்த வேண்டும் என்ற நிலை இருப்பினும் கூட, அவர்களை பலவந்தமான முறையில் அப்புறப்படுத்துவதும், இரக்கமற்ற முறையில் நடந்து கொள்வதும், இன்னும் அச்சுறுத்தும் முறையிலும் அல்லது அதற்குப் பின்புலமாக பொருளாதாரம் சார்ந்த நோக்கங்களும் இருக்கக் கூடாது. இன்னும் அவர்கள் நேர்வழி பெறுதவற்காக பிரார்த்திப்பதோடு, அருள் செய்யப்பட்ட மக்களுடன் அவர்கள் இணைந்து கொள்வதற்கும், நற்கூலிகளைப் பெற்றுக் கொண்டவர்களுடன் இணைந்து கொள்வதற்கும் பிரார்த்திப்பதோடு, உலக மற்றும் ஆன்மீக விவாகரங்களில் அவர்களுக்கு உதவதோடு, அவர்களது கண்ணியம் சீர்குலைக்கப்படும் பொழுது அதனைப் பாதுகாப்பதும், அவர்களையும் அவர்களது சொத்துக்களையும், அவர்களது குடும்பத்தவர்களைப் பாதுகாப்பதும், இன்னும் அவர்களது உரிமைகளைச் சரியான முறையில் பெற்றுக் கொள்வதற்கு உதவுவதும் அந்த சகிப்புத் தன்மையானதில் அடங்கும். அவர்களுக்கு எதிராக நடத்தப்படும் அடக்குமுறைகளுக்கான எதிர்நடவடிக்கைகளுக்கும், அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் உரிமைகளைச் சரிவரப் பெற்றுக் கொள்வதற்கு உதவுவதும் அவசியமாகும். Al-Furuk, v.3, p.15; Also refer to Religious Minorities : The islamic Solution, pp. 45-46.

இறைவனது வழிகாட்டல் எவ்வாறு இருக்கின்றதெனில், முஸ்லிம் அல்லாதவர்களுடன் செய்து கொண்டிருக்கின்ற ஒப்பந்தங்கள் யாவும் பேப்பரில் எழுதி வைத்து வாசித்துப் பார்ப்பதற்கானதல்ல, மாறாக, அதனை நடைமுறைப்படுத்துவதற்குண்டானதும், செயலில் செய்து காட்ட வேண்டிய முக்கியத்துவம் வாய்ந்ததாகும் என்று முஸ்லிம்களை எச்சரிக்கின்றது.

இந்த கட்டளைகள் யாவும் உங்கள் செயல்களில் மலர வேண்டும் என்ற உத்தரவானது, இறைத்தூதர் (ஸல்) அவர்களின் வழியாக, கலீபாக்களுக்கும், பிரதேச கவர்னர்களுக்கும், இன்னும் இறைநம்பிக்கையாளர்களான பொதுமக்களுக்கும் வந்து சேர்கின்றது. இறைத்தூதர் (ஸல்) அவர்களின் வாழ்வானது, அவர்கள் எவ்வாறு முஸ்லிமல்லாதவர்களுடன் நடந்து கொண்டார்கள் என்பதற்கான வாழ்வியல் உதாரணங்களாகத் திகழ்கின்றன.

இறைத்தூதர் (ஸல்) அவர்களின் அண்டை வீட்டுக்காரர்கள் சிலர் முஸ்லிம் அல்லாதவர்களாக இருந்துள்ளார்கள். அவர்களுடன் இறைத்தூதர் (ஸல்) அவர்கள் பெருந்தன்மையாக நடந்து வந்துள்ளார்கள். சிலவேளை அவர்களுக்குப் பரிசுப் பொருட்களை வழங்கியுள்ளார்கள், அதற்குப் பதிலாக அவர்கள் தரும் பரிசையும் ஏற்றுள்ளார்கள். இன்னும் ஏன்? ஒரு யூதப் பெண்மணி விஷம் தோய்க்கப்பட்ட ஆட்டின் தொடைக் கறியை அனுப்பிய போதும் அதனையும் சகிப்புத் தன்மையுடன் ஏற்றுக் கொண்டவர்கள் தான் இறைத்தூதர் (ஸல்) அவர்கள்.

இன்னும் முஸ்லிம் அல்லாதவர்கள் நோய்வாய்ப்பட்டிருக்கும் பொழுது அவர்களைச் சந்தித்து நோய் விசாரித்திருக்கின்றார்கள். கொடுக்கல் வாங்கல்களில் அவர்களை நம்பிச் செயல்பட்டுள்ளார்கள். இன்னும் அவர்களுக்கு மிகவும் நெருக்கமானதொரு யூதக் குடும்பம் ஒன்றிற்கு வழக்கமாக தர்மம் செய்பவர்களாகவும் இறைத்தூதர் (ஸல்) அவர்கள் இருந்ததோடு மட்டுமல்லாது, அவர்களது இறப்பிற்குப் பின்னும் கலீபாக்களால் இந்தப் பழக்க வழக்கம் தொடரப்பட்டது. The Book of Finances, p.613

அபூ குதாதா (ரலி) அவர்கள் இங்கே ஒரு சம்பவத்தை நமக்கு விவரிக்கின்றார்கள் :

அபீசீனியாவிலிருந்து ஒரு கிறிஸ்தவ தூதுக்குழு ஒன்று மதீனாவிற்கு வந்திருந்தது. இறைத்தூதர் (ஸல்) அவர்கள் அவர்களைத் தனது பள்ளிவாசலில் தங்க வைத்ததோடு, அவர்களுக்கு அனைத்து

வித கடமைகளையும் செய்ததோடு, தானே முன்னின்று உணவுகளையும் அவருக்குப் பரிமாறினார்கள். இந்த சிறப்புச் சேவையானது, அவர்கள் மீதுள்ள உயர்ந்த எண்ணமும் மற்றும் கண்ணியமும் ஆகும், இது பற்றி இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்,

என்னுடைய தோழர்களிடம் அவர்கள் மிகச் சிறந்த முறையில் நடந்து கொண்டார்கள். எனவே நானும் அவர்களைச் சிறந்த முறையில் நடத்துவதற்கு விரும்புகின்றேன் என்று கூறி விட்டு, (குறைஷிகளின் கொடுமைகளிலிருந்து) தப்பிப்பதற்காக மக்காவை விட்டும் அபீசீனியாவிற்கு எனது தோழர்கள் சென்ற பொழுது, அபீசீனியாவில் வைத்து அவர்கள் சிறந்த முறையில் நடத்தப்பட்டதை இங்கு சுட்டிக் காட்டினார்கள். At-Tadhkirah al-Hamduniyah, v.2, p.95; also refer to *Splendors of our Civilization*, p.134.

இன்னும், முஸ்லிம் அல்லாதவர்களிடம் நல்ல முறையில் எவ்வாறு நடந்து கொள்வது என்ற பயிற்சியை இறைத்தூதர் (ஸல்) அவர்கள் தனது தோழர்களுக்கும் வழங்கினார்கள். இப்னு கதீர் (ரஹ்) அவர்கள் கீழ்க்கண்ட சம்பவத்தை இங்கே நினைவு கூறுகின்றார்கள் :

ஸைத் இப்னு ஸன்ஆ என்றொரு யூதர், இறைத்தூதர் (ஸல்) அவர்களிடம் வந்து தான் கொடுத்த கடனைக் கேட்டார். அவன் இறைத்தூதர் (ஸல்) அவர்களின் கழுத்துச் சட்டையைப் பிடித்து, தனது முகத்துக்கு அருகில் கொண்டு வைத்து கொண்டு, கடுமையான வார்த்தைகளால் இவ்வாறு கேட்டார் :

முஹம்மதே..! நீர் என்னிடம் வாங்கிய கடனைக் கொடுக்க மாட்டீரா? நீயும், சரி உமது குலமான பனூ அல் முத்தலிப் கோத்திரத்தவரும் சரி..., வாங்கிய கடனை எப்பொழுதும் சரியான நேரத்தில் திருப்பித் தந்ததில்லை..! என்றான்.

அப்பொழுது, அங்கே அருகில் நின்று கொண்டிருந்த உமர் (ரலி) அவர்கள் கோபம் தலைக்கேறியவர்களாக, கண்கள் சிவப்பேறிய வண்ணம் அவரைப் பயமுறுத்தும் தொணியில்,

அல்லாஹ்வின் எதிரியே..! நீ இறைத்தூதர் (ஸல்) அவர்கள் குறித்துக் கூறிய வார்த்தைகளைக் கேட்டேன்? சத்தியத்துடன் அவரை அனுப்பிய இறைவனின் மீது சத்தியமாக, அவர் என்னை இதற்காக கடிந்து கொள்ள மாட்டார் என்றிருந்தால், நான் உனது தலையை இந்த வாளால் கொய்திருப்பேன் என்று உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்.

இதனைக் கேட்டுக் கொண்டிருந்த இறைத்தூதர் (ஸல்) அவர்கள், அமைதியாக புன்னகை தவழ தனது தோழரான உமர் (ரலி) அவர்களைப் பார்த்த அவர்கள்,

உமர் அவர்களே..! இந்த வார்த்தையை நான் உங்களிடம் இருந்து எதிர்பார்க்கவில்லை. நீங்கள், 'நான் வாங்கிய கடனை குறித்த தவணையில் திருப்பிச் செலுத்தும்படி எனக்கு அறிவுரை கூறி இருக்க வேண்டும்', 'இன்னும் கொடுத்த கடனைச் சிறந்த முறையில் கேட்டு, அதனைப் பெற்றிருக்க வேண்டும்', என்று அவருக்கு நீங்கள் அறிவுரை கூறியிருக்க வேண்டும். அவரை அழைத்துச் சென்று, அவரது கடனை (என்னுடைய இருப்பிலிருந்து எடுத்து)த் திருப்பிக் கொடுங்கள், இன்னும் அதனோடு இருபது பேரீத்தம் பழங்களையும் சேர்த்துக் கொடுங்கள் என்று கூறி அனுப்பி வைத்தார்கள்.

இறைத்தூதர் (ஸல்) அவர்கள் காட்டிய இந்த நற்பண்பாடு, அந்த யூதரை இஸ்லாத்தினை ஏற்கச் செய்தது. அந்த இடத்திலேயே அந்த யூதர், தான் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்வதாகக் கூறி கலிமா ஷஹாதத்தை முன் மொழிந்தார்.

“வணங்கத்தக்க இறைவன் - அல்லாஹ்வை அன்றி வேறு இறைவன் இல்லை என்றும், முஹம்மது (ஸல்) அவனது தூதராகவும், அடிமையாகவும் இருக்கின்றார் என்று நான் சாட்சி கூறுகின்றேன்..” என்று கூறினார். Al-Bidayah wan-Nihaya, v.2 p.310.

இன்னுமொரு சந்தர்ப்பத்தில்,

இறைத்தூதர் (ஸல்) அவர்கள் அமர்ந்திருந்த அவைக்கு ஒரு யூதர்களது குழுவொன்று, ‘உங்கள் மீது சாந்தி உண்டாகட்டுமாக..!’ என்ற ‘ஸலாம்’ என்ற முஸ்லிம்களின் வாழ்த்துச் செய்தியை, உங்கள் மீது விஷம் (அழிவு) உண்டாகட்டும்” என்று மாற்றி, விஷமத்தனத்துடன் (ஸலாம் என்பதை ஸாம் என்ற மாற்றி) கூறிக் கொண்டே அங்கே நுழைந்த பொழுது,

இறைத்தூதர் (ஸல்) அவர்கள் அமைதி பூத்தவர்களாக..,

“உங்கள் மீதும் உண்டாகட்டுமாக”, என்றார்கள்.

இதனை அடுத்து, ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்.

(நான்) அவர்கள் கூறியதைப் புரிந்து கொண்டேன், அதற்குப் பதிலும் உரைத்தேன்,

(அதாவது), உங்கள் மீது விஷம் (அழிவு) உண்டாகட்டும், இன்னும் நாசமுண்டாகட்டும் என்று பதில் கூறினேன், (என்றார்கள்).

இதனை ஆட்சேபித்த இறைத்தூதர் (ஸல்) அவர்கள்,

ஆயிஷாவே..! பொறுமையைக் கைக் கொள்ளுங்கள், ஏனெனில் அனைத்து விஷயங்களிலும் மென்மையான தன்மையைக் கடைபிடிப்பதையே அல்லாஹ் விரும்புகின்றான் என்று கூறினார்கள்.

(அதற்கு நான்) அவர்கள் என்ன கூறினார்கள் என்பது உங்களுக்குக் கேட்கவில்லையா? என்றேன்.

அவர்கள் சொன்னது எனக்கு விளங்கியது, (அதற்குத் தான்) நான், ‘உங்கள் மீதும் உண்டாகட்டுமாக’ என்று கூறினேன் என்றார்கள். Sahih al-Bukhari, v.7,p. 80; and Sahih Muslim, v.1, p.1706.

இறைத்தூதர் (ஸல்) அவர்கள் காட்டித் தந்த இந்த அடிச்சுவட்டை பின்பற்றியவர்களாக, அவர்களுக்குப் பின்னால் வந்த ஆட்சியாளர்கள் நடந்து காட்டினார்கள். இறைத்தூதர் (ஸல்) அவர்களின் காலத்தின் பொழுது, ஒரு யூதக் குடும்பத்திற்கு தொடர்ந்தும் உதவிகளைப் புரிந்து வந்தார்கள், அவர்களுக்கு தான தர்மங்களைக் கொடுத்து வந்தார்கள். இறைத்தூதர் (ஸல்) அவர்கள் மறைந்த பின்பும், அந்தக் குடும்பத்திற்கென நிரந்தரமான உதவித் தொகை ஒன்றை ஏற்படுத்தி தொடர்ந்தும், உமர் (ரலி) அவர்கள் வழங்கி வர ஏற்பாடு செய்தார்கள். Al-Kharaj, p.86; also refr to Non-Muslims in Muslim Society, p.51.

இன்னும் வேதங் கொடுக்கப்பட்டவர்களான கிறிஸ்தவர்களும் உதவித் தொகை பெறத் தகுதி பெற்றவர்களே என்ற தனது வாதத்தை, கீழ்க்கண்ட இறைமறை வசனம் மூலம் உமர் (ரலி) அவர்கள் வாதாடிக் காட்டினார்கள்.

(ஜகாத் என்னும்) தானங்கள் தரித்திரர்களுக்கும், ஏழைகளுக்கும், தானத்தை வசூல் செய்யும் ஊழியர்களுக்கும், இஸ்லாத்தின் பால் அவர்கள் உள்ளங்கள் ஈர்க்கப்படுவதற்காகவும், அடிமைகளை விடுதலை செய்வதற்காகவும், கடன் பட்டிருப்பவர்களுக்கும், அல்லாஹ்வின் பாதையில் (போர் புரிவோருக்கும்), வழிப்போக்கர்களுக்குமே உரியவை. (இது) அல்லாஹ் விதித்த கடமையாகும் - அல்லாஹ் (யாவும்) அறிபவன், மிக்க ஞானமுடையோன். (9:60)

இறைத்தூதர் (ஸல்) அவர்களின் கண்ணியமிக்க தோழர்களுள் ஒருவரான அப்துல்லா இப்னு அம்ர் இப்னுல் ஆஸ் (ரலி) அவர்கள், தனது அண்டை வீட்டுக்கார யூதருக்கு அடிக்கடி தானங்கள் வழங்கும் பழக்கத்தைக் கொண்டவராக இருந்தார்கள். பெருநாள்கள் அல்லது பண்டிகைக் காலங்களின் பொழுது, ஆடு அறுக்கும் பொழுது அந்த ஆட்டின் இறைச்சியிலிருந்து ஒரு பகுதியைத் தனது அண்டை வீட்டுக்கார யூதருக்கு வழங்கி வரும்படி தனது பணியாளருக்கு இந்த நபித்தோழர் உத்தரவே இட்டிருந்தார். அவர் ஒரு யூதராக இருக்கும் நிலையில், அவருக்குத் தொடர்ந்து உதவி வரும் பழக்கத்தைக் கொண்டிருந்த தனது எஜமானரின் நிலை குறித்து, அந்தப் பணியாளர் வினவிய பொழுது, கீழ்க்கண்ட நபிமொழியை அப்துல்லா இப்னு அம்ர் இப்னுல் ஆஸ் (ரலி) அவர்கள் அந்தப் பணியாளருக்கு சுட்டிக் காட்டினார்கள் :

'வானவர் தலைவர் ஜிப்ரீல் (அலை) அவர்கள் அண்டைவீட்டுக்காரர்களுக்கு உதவுவது பற்றி அடிக்கடி அவர்கள் கூறுவதைப் பார்த்த நான், எங்கே எனது சொத்திலும் அவர்களுக்குப் பங்கு தரும்படிக் கூறிவிடுவார்களோ என்றே நான் நினைத்தேன்', (என்று இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்). Sahih al Bukhari, v.10, pp.369-370.

முஸ்லிம் அல்லாதவர்களின் உரிமைகளை பாதுகாப்பதில் இஸ்லாமிய ஆட்சியாளர்கள் தங்களது கவர்னர்களுக்கு அறிவுறுத்தி எழுதிய கடிதங்கள், முஸ்லிம்கள் எந்தளவு சகிப்புத்தன்மையுடன் முஸ்லிம் அல்லாதவர்களின் உரிமைகளைப் பேணிப் பாதுகாத்து வந்தார்கள் என்பதற்கு இன்றைக்கும் வரலாற்றுச் சாட்சியங்களாக தனிச்சிறப்புப் பெற்றவைகளாகத் திகழ்கின்றன.

முஹம்மது இப்னு அப்துல்லா என்ற மொராக்கோவின் மன்னர், ஹிஜ்ரி 1280 ஷா:பான் மாதம் 25 ஆம் தேதி (அதாவது, 1864 ஆம் ஆண்டு, பிப்ரவரி மாதம் 5ம் தேதி) தனது ஆளுநர்களுக்கு எழுதிய கடிதத்தில் இவ்வாறு உத்தரவிட்டிருந்தார் :

நம்முடைய உள்விவகார ஊழியர்களுக்கும், இன்னும் நம்மால் அங்கீகரிக்கப்பட்டு நம் ஆளுகைக்கு உட்பட்ட பகுதிகளில் செயலாற்றி வரும் நியமன முகவர்களுக்கும், இந்த கீழ்க்கண்ட உத்தரவை இடுகின்றோம் :

நம் ஆளுகைக்குட்பட்ட பகுதியில் வாழக் கூடிய யூதர்களை, அல்லாஹ் வழங்கியிருக்கின்ற நீதி நெறிப்படி முழுமையான முறையில் நடத்தி வரவும். அந்த யூதர்களை மற்றவர்களை நடத்துவது போலவே, அவர்களையும் சமமாக நடத்த வேண்டும். அதன் மூலம் யாரும் அநீதமான முறைகளான அடக்குமுறைகள், ஏமாற்றுதல் போன்றவற்றினால் பாதிக்கப்பட்டவர்களாக ஆக மாட்டார்கள். அவர்களது சொந்த இனத்தவர்கள் அல்லது வெளி இனத்தவர்கள் என்று யாரும் அவர்களின் மீதோ அல்லது அவர்களின் சொத்துக்களின் மீதோ எதிர்நடவடிக்கைகள் எடுப்பதற்கு அனுதிக்கக் கூடாது. அவர்களது தொழிலாளர்கள் மற்றும் கைவினைஞர்களை அவர்களது விருப்பத்திற்கு மாற்றமாக, அவர்களை வேலை செய்ய நிர்ப்பந்திக்கக் கூடாது. அவர்கள் நாட்டுக்குச் சேவை செய்யும் பட்சத்தில், அதற்கு மாற்றாக முழுமையான சம்பளத்தை அவர்களுக்கு வழங்கி விட வேண்டும். எத்தகைய அடக்குமுறையும், அந்த அடக்குமுறையாளனை மறுமையில் நீதித் தீர்ப்பு நாளில் அவனை நரகில் கொண்டு போயச் சேர்த்து விடும். அவர்களின் மீதோ அல்லது மற்றவர்களின் மீதோ புரியப்படும் அடக்குமுறைகளை நாம் பார்த்துக் கொண்டிருக்கவும் கூடாது, அதனை அனுமதிக்கவும் கூடாது. நம்முடைய சட்டத்திற்கு முன்பு அனைவரும் சமமே, மற்றும் யூதர்களுக்கு எதிராக எவர் அநீதத்தில் ஈடுபட்டாலும் அல்லது அடக்குமுறையில் ஈடுபட்டாலும், அவர்களை அல்லாஹ் வழங்கியிருக்கும் நீதத்தின் அடிப்படையில் அவர்களைத் தண்டிப்போம்.

இந்த உத்தரவானது, ஏற்கனவே எப்பொழுதும் நன்கறியப்பட்டதும், நிலைநிறுத்தப்பட்டதும், தெளிவாக அறிவுறுத்தப்பட்டதுமாக இருந்ததை, மீண்டும் இங்கே நிலைநிறுத்தப்படுத்துவதோடு மற்றும் அதனை விவரித்தும் இருக்கின்றோம். இதனை ஒரு அறிவுரையாகவும், இன்னும் எவரொருவர் யூத சமுதாயத்திற்கு எதிராக அநீதமான முறையில் நடக்கின்றார்களோ அவர்களை எச்சரிக்கை செய்யும் விதமாகவும் இதனை அறிவுறுத்துவதோடு, இதன் மூலம் யூதர்கள் பாதுகாப்பாக தாங்கள் வாழ்வதை உறுதிப்படுத்திக் கொள்வதோடு, இவர்களுக்கு எதிராக நடப்பவர்களின் மீது இஸ்லாமிய ஆட்சியானது கடுமையான நடவடிக்கை எடுக்கும் என்பதனை அத்தகையவர்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகவும் இந்த உத்தரவு இடப்படுகின்றது. Religious Minorities :The islamic Solution, pp.58-59.

முஸ்லிம்களின் இத்தகைய சிறந்த நற்குணச் சேவைகளுக்கு, மனமாச்சரியங்களற்ற பல நல்ல மேற்கத்திய சிந்தனையாளர்கள் சாட்சியம் பகர்ந்துள்ளார்கள். ரினால்ட் என்பவர் குறிப்பிடுகின்றார் :

அல் அந்தலூஸ் நகரில் வாழ்ந்த முஸ்லிம்கள், அங்குள்ள முஸ்லிம் அல்லாதவர்களிடம் மிகச் சிறந்த பண்பாட்டுடன் நடந்து கொண்டார்கள். அதற்குப் பகரமாக, முஸ்லிம் அல்லாதவர்களும் மிகுந்த மரியாதையுடன் முஸ்லிம்களுடன் நடந்து கொண்டதோடு, தங்களது குழந்தைகளுக்கு விருத்தசேதனம் (Circumcise) செய்து கொண்டார்கள், பன்றிக் கறி சாப்பிடுவதையும் தவிர்த்துக் கொண்டார்கள். Splendors of our Civilization, p.147.

### சமூக பாதுகாப்பு பெற்றுக் கொள்ளும் உரிமை

சில நாடுகள், நாங்கள் பாதிக்கப்பட்ட சமூக மக்களுக்கு உதவுகின்றோம் என்பதைப் பெருமையாகக் கூறிக் கொள்கின்றன, இத்தகைய சேவைகள் மதிக்கப்பட வேண்டியவை, மதிப்பு வாய்ந்தவை. நாம் இங்கு கூறவருவதென்னவென்றால், இந்த சேவைகள் அனைத்தையும் விட இஸ்லாம் மற்றும் அது வழங்கும் சட்டங்கள் யாவும் இந்தச் சேவையில் முன்னிலை வகிக்கின்றன.

இஸ்லாமியச் சட்டங்கள் வாழ்க்கையில் வறுமையால் வாடும் தேவையுள்ளவர்களுக்கு உதவுவதை சட்டமாகவே இயற்றி வைத்துள்ளது :

ஸகாத் என்னும் ஏழைவரியை ஒவ்வொரு வசதி வாய்ப்புப் பெற்ற முஸ்லிமின் மீதும் கடமையாக்கி வைத்து, அதனை வறியவர்களுக்கு வழங்கும்படி கடமையாக்கி உள்ளது. இன்னும் தான தர்மங்களை அதிகமான அளவில் செய்யும்படி ஊக்கப்படுத்தி உள்ளது. மேற்கண்ட சட்ட விதிகளைப் பற்றி விவாதிப்பதற்காக இங்கே ஆதாரமாகக் காட்டப்படவில்லை. மாறாக, சமுதாய பாதுகாப்பிற்காக மேற்காண்ட ஸகாத் மற்றும் தான தர்மங்களை எவ்வாறு முஸ்லிம்களின் மீது கடமையாக்கி வைத்திருக்கின்றது, அதன் மூலம் இஸ்லாம் சமூகத்தில் ஒருவராக வாழுகின்ற ஏழைகளின் சிரமங்களைக் குறைக்க வழி ஏற்படுத்தி வைத்திருக்கின்றது என்பதோடு, அதனை வசதி வாய்ப்புள்ள ஒவ்வொரு முஸ்லிமின் அடிப்படைக் கடமைகளுள் ஒன்றாகவும் ஆக்கி வைத்திருக்கின்றது என்பதையே நாம் சுட்டிக் காட்ட விரும்புகின்றோம்.

இஸ்லாமிய ஆட்சியின் கீழ் வாழுகின்ற குடிமகன்களில், முஸ்லிம் அல்லது முஸ்லிமல்லாதவர் இவர்களில் எவராக இருக்கட்டும், இவர்களில் சட்டபூர்வமான தொழில்களைச் செய்ய இயலாத நிலையில் உள்ளவர்களை, தொழில் செய்வதனின்றும் அவர்களைத் தடுப்பதோடு, அவர்களுக்கு அரசின் நிதிக் கருவூலகத்திலிருந்து அவர்களுக்குத் தேவையாள உதவித் தொகைகளை வழங்க வேண்டும். அவ்வாறு அவர்களின் உரிமைகளை மதிக்காது உதவித் தொகைகளை வழங்காத ஆட்சியாளர், தவறிழைப்பவராகவே கருதப்படுவார்.

இந்த முறையில், இஸ்லாமிய பூமியை ஆட்சி செய்த ஆட்சியாளர்களும், அவர்களது ஆளுநர்களும் மாற்று மதத்தவர்களின் உரிமைகளை எவ்வாறு கவனமாகப் பேணி நடந்து வந்துள்ளார்கள் என்பதற்கு, கீழ்க்கண்ட சம்பவமே மிகச் சிறந்த உதராணமாகத் திகழ்கின்றது.

உமர் (ரலி) அவர்களது காலத்தில் நடந்ததொரு சம்பவத்தைப் பற்றி அபூ யூசுப் (ரஹ்) அவர்கள் குறிப்பிடுவதைப் பார்ப்போம் : Kitab al-Kharaj, p.136.

உமர் (ரலி) அவர்கள் ஒரு வீட்டினைக் கடந்து செல்லும் பொழுது, அந்த வீட்டின் வாயிலில் கண் தெரியாத ஒரு முதியவர் பிச்சை எடுத்துக் கொண்டிருக்கக் காண்கிறார்கள்.

அந்த முதியவரின் தோளில் கையைப் போட்டவராக உமர் (ரலி) அவர்கள் கேட்டார்கள்,

நீங்கள் எந்த சமூகத்தைச் சேர்ந்தவர் பெரியவரே?

நான் ஒரு யூதன், அந்த முதியவரிடம் இருந்து பதிலாக வந்தது.

உங்களை இந்த நிலைமைக்கு ஆளாக்கியது எது? உமர் (ரலி) அவர்கள் கேட்டார்கள்.

என்னிடம் அதனைக் கேட்க வேண்டாம், ஜிஸ்யா வரி, ஏழ்மை, வயோதிபம் ஆகிய அனைத்தும் சேர்ந்து இந்த நிலைக்கு என்னை ஆளாக்கி விட்டன, என்றார் அந்தப் பெரியவர்.

அந்தப் பெரியவரை அவரது வீட்டிற்குள் இருக்க வைத்த உமர் (ரலி) அவர்கள், தனது சொந்தப் பணத்திலிருந்து அவருக்கு உதவியதோடு, தனது உதவியாளரை அழைத்து, அவரை நிதிக் கருவூலகப் பொறுப்பாளரிடம் அனுப்பி, அந்த நிதிக் கருவூகலப் பொறுப்பாளருக்கு இவ்வாறு உத்தரவிட்டார்கள் :

இப்பொழுதிலிருந்து, இவரையும், இவரைப் போன்றவர்களையும் கவனிப்பது நம்முடைய கடமையாகும். நாம் இவர்களைச் சிறந்த முறையில் நடத்தவில்லை. அவர்கள் இளமை வசந்தத்துடன் வாழ்ந்து கொண்டிருந்த காலத்தில், நமக்கு வரி செலுத்தி வந்தவர்களில்லையா, இந்த தள்ளாத வயதின் காரணமாகத் தானே அவர்கள் இந்தளவு வறுமையின் பிடியில் தள்ளப்பட்டவர்களாக ஆகி விட்டார்கள்.

பின் உமர் (ரலி) கீழ்க்கண்ட திருமறையின் வசனங்களை ஓதிக் காண்பிக்க ஆரம்பித்தார்கள் :

(ஜகாத் என்னும்) தானங்கள் தரித்திரர்களுக்கும், ஏழைகளுக்கும், தானத்தை வசூல் செய்யும் ஊழியர்களுக்கும், இஸ்லாத்தின் பால் அவர்கள் உள்ளங்கள் ஈர்க்கப்படுவதற்காகவும், அடிமைகளை விடுதலை செய்வதற்காகவும், கடன் பட்டிருப்பவர்களுக்கும், அல்லாஹ்வின் பாதையில் (போர் புரிவோருக்கும்), வழிப்போக்கர்களுக்குமே உரியவை. (இது) அல்லாஹ் விதித்த கடமையாகும் - அல்லாஹ் (யாவும்) அறிபவன், மிக்க ஞானமுடையோன். (9:60)

இந்த வசனத்தில் சுட்டிக்காட்டப்படுள்ள ஃபுகரா (ஏழைகள்) முஸ்லிம்களையும், மஸாக்கீன் (தேவையுடையவர்கள்) என்பது வேதங்கொடுக்கப்பட்டவர்களையும் குறிக்கக் கூடியது என்று கூறிவிட்டு, இன்றிலிருந்து இவரிடமும் இன்னும் இவரைப் போன்று உள்ளவர்களிடமும் ஜிஸ்யா வரியை வசூலிக்கக் கூடாது, அவ்வாறு வசூலிப்பதை நிறுத்தி விடும்படி உத்தரவிட்டார்கள்.

காலித் பின் வலீத் (ரலி) அவர்கள் ஈராக்கில் உள்ள அல் ஹிரா பகுதி மக்களிடம் கீழ்க்கண்ட சட்ட விதிகளைக் கொண்டதொரு அமைதி ஒப்பந்தத்தைச் செய்து கொள்தவற்கான ஆலோசனையை முன் வைத்தார்கள்.

அல்லாஹ் வெற்றியை வழங்கினான் என்று சொன்னால், (ஒப்பந்தம் செய்து கொண்டுள்ள மக்கள்) அவர்கள் செய்து கொண்டுள்ள ஒப்பந்த்தின் விதிப்படி பாதுகாக்கப்படுவார்கள். (ஒப்பந்தங்களைச் செய்து கொண்டுள்ள மக்கள்) - அவர்களுக்கென உரிமைகள் உள்ளன, அவை யாவும்

அல்லாஹ்வினால் வாக்குறுதி அளிக்கட்டவைகளாகும். அவர்கள் ஏற்றுக் கொண்டுள்ள இதன் விதிமுறைகளை நடைமுறைப்படுத்துவது கடமையானதாக இருக்கின்றது, அதனை எந்தநிலையிலும் மீறக் கூடாது. வெற்றிக் கொள்ளப்பட்டு விட்டாலும், அவர்கள் நிம்மதியாக வாழலாம், அவர்கள் ஒப்புக் கொண்ட சட்ட திட்டங்களுக்கு மாற்றமாக நடப்பதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலதிகமாக என்னுடைய உத்தரவு என்னவெனில், இயலாமையின் காரணமாகவும் அல்லது வறுமையின் காரணமாகவும், மற்றும் தங்களது சொந்த சமூகத்திலிருந்து உதவிகளைப் பெற்று வாழக் கூடியவர்கள், இத்தகைய உழைக்க இயலாத முதியோர்கள் ஜிஸ்யா என்னும் வரி செலுத்துவதனின்றும் விதிவிலக்கு அளிக்கப்படுவார்கள். இத்தகையவர்கள் முஸ்லிம்களின் ஆட்சிப் பிரதேசத்தில் அல்லது முஸ்லிம்களின் குடியேற்றங்களில் வாழ்ந்து வருங்காலங்களில், இஸ்லாமிய அரசின் நிதிக் கருவூலகத்திலிருந்து அவர்களுக்கும், அவர்களைச் சார்ந்திருப்பவர்களுக்கும் உதவித் தொகை வழங்கப்படும். இத்தகையவர்கள் இஸ்லாமியப் பூமியை விட்டும் அல்லது இஸ்லாமிய சமூகத்தை விட்டும் வெளியே சென்று விடுவார்களென்று சொன்னால், அவர்களுக்கும், அவர்களைச் சார்ந்திருப்பவர்களுக்கும் எந்தவித உதவித்தொகையும் வழங்கப்பட மாட்டாது. Kitab al-Kharaj, p.155-156

நன்னம்பிக்கையாளர்களின் தலைவரான உமர் இப்னுல் கத்தாப் (ரலி) அவர்கள் டமாஸ்கஸ் நகருக்குச் சென்றிருந்த பொழுது, கிறிஸ்தவ முதியவர்களின் குழுவொன்றைக் கடந்து சென்றார்கள். அந்த கிறிஸ்தவர்களுக்கு தான தர்மங்களிலிருந்து வழங்கும்படி உத்தரவிட்டதோடு, அவர்களுடைய உணவுத் தேவைகளுக்கு உதவித் தொகை வழங்கவும் உத்தரவிட்டார்கள். Non-Muslims in Muslim Society, p.17.

இன்னுமொரு ஆட்சியாளரான, உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்கள் இதுமாதிரியானதொரு உத்தரவை, பஷராவில் உள்ள தனது முகவரான அதீ இப்னு அர்தாஆ என்பவருக்கு இட்டார்கள்.

உங்களுடைய பகுதிகளில் உள்ள உழைத்து சம்பாதிக்க இயலாத வயோதிகர்கள், மற்றும் பலவீனர்கள் ஆகியவர்களைக் கண்டறிந்து, அவர்களது தேவைகளை நிறைவு செய்யும் அளவுக்கு உதவித் தொகை வழங்கி வருவதற்கு, நிதிக் கருவூலத்திலிருந்து ஏற்பாடுகளைச் செய்யவும். The Book of Finanaces. page.57.

இன்னும் சில ஆட்சியாளர்கள், கீழ்க்கண்ட குர்ஆன் வசனத்தை அவர்கள் விளங்கி இருந்த விதத்தின் அடிப்படையில், பெருநாள் தினத்தன்று முஸ்லிம்களுக்கு மட்டுமே வழங்கும்படி அறிவுறுத்தி இருக்கின்ற ஜகாத்துல் ஃபித்ர் (பெருநாள் தர்மத்தை) சில கிறிஸ்தவ சந்நியாசிகளுக்கும் வழங்கி இருக்கின்றார்கள் என்பதையும் அறிய முடிகின்றது.

மார்க்க (விஷய)த்தில் உங்களிடம் போரிடாமலும், உங்கள் இல்லங்களிலிருந்து உங்களை வெளியேற்றாமலும் இருந்தார்களே அவர்களுக்கு நீங்கள் நன்மை செய்வதையும், அவர்களுக்கு நீங்கள் நீதி செய்வதையும் அல்லாஹ் விலக்கவில்லை - நிச்சயமாக அல்லாஹ் நீதி செய்பவர்களை நேசிக்கிறான். (60:8)

மேலே உள்ள வசனத்தின் அடிப்படையில், ஜகாத் என்னும் ஏழை வரியை முஸ்லிம் அல்லாத மக்களுக்கும் வழங்கலாம் என்று சில மார்க்க அறிஞர்கள் கூறியிருக்கின்றார்கள்.

இறுதியாக, வேலை செய்யும் உரிமை, உறையுள், போக்குவரத்து, கல்வி இன்னும் இது போன்ற சில அத்தியாயங்கள் பற்றி நாம் இங்கே விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளவில்லை, காரணம், மேலே நாம் விவாதித்த விஷயங்களை விட அவை பெரிதானதல்ல என்பதனாலாகும்.

முஸ்லிம் அல்லாதார்களின் நாட்டில் கூட வழங்கப்படாத உரிமைகளை எவ்வாறு முஸ்லிம்கள் ஆட்சி செய்யும் நாட்டில், ஒரு முஸ்லிம் அல்லாதவர் பெற்றுக் கொள்ள முடியும் என்பது குறித்து நாம் இதுவரை விளக்கி இருந்தோம். இதனைச் சிலர் மறுத்து, நீங்கள் மேலே குறிப்பிடும் அத்தனையும் முன்னொரு காலத்தில் வாழ்ந்த மக்களால் நடைமுறைப்படுத்தப்பட்டு, இன்றைக்கு வரலாற்றுப் பக்கங்களில் காட்சியளிப்பவை தானே தவிர, இன்றைய முஸ்லிம் உலகின் நிலை இதற்கு மாற்றமாக அல்லவா இருக்கின்றது என்றதொரு ஆட்சேபனையைத் தெரிவிக்கக் கூடும்.

ஆனால், மேலே உள்ள அத்தனை உரிமைகளையும் இன்றைக்கும் சில முஸ்லிம் நாடுகளில் முஸ்லிம் அல்லாதவர்கள் பெற்று வாழ்கின்றார்கள் என்பதே உண்மையாகும். இன்னும் நாட்டின் சிறுபான்மை இனமாக வாழக் கூடிய அவர்கள், நாட்டின் மிக உயர்ந்த அதிகாரமிக்க பதவியையும் கூட அவர்கள் அடைய முடிந்திருக்கின்றது.

அல்லாஹ் உண்மையாளர்களாக வாழவே முஸ்லிம்களைப் பணித்திருக்கின்றான், அதனைத் தனது திருமறையில் இவ்வாறு சுட்டிக் காட்டியிருக்கின்றான் :

முஃமின்களே! நீங்கள் நீதியின்மீது நிலைத்திருப்பவர்களாகவும், உங்களுக்கோ அல்லது (உங்கள்) பெற்றோருக்கோ அல்லது நெருங்கிய உறவினருக்கோ விரோதமாக இருப்பினும் அல்லாஹ்வுக்காகவே சாட்சி கூறுபவர்களாகவும் இருங்கள் (நீங்கள் யாருக்காக சாட்சியம் கூறுகிறீர்களோ) அவர்கள் செல்வந்தர்களாக இருந்தாலும் ஏழைகளாக இருந்தாலும் (உண்மையான சாட்சியம் கூறுங்கள்) ஏனெனில் அல்லாஹ் அவ்விருவரையும் காப்பதற்கு அருகதையுடையவன் எனவே நியாயம் வழங்குவதில் மன இச்சையைப் பின்பற்றி விடாதீர்கள் மேலும் நீங்கள் மாற்றிக் கூறினாலும் அல்லது (சாட்சி கூறுவதைப்) புறக்கணித்தாலும், நிச்சயமாக அல்லாஹ் நீங்கள் செய்வதையெல்லாம் நன்கு அறிந்தவனாகவே இருக்கின்றான். (4:135)

மேலும், இவ்வாறு குற்றம் சாட்டக் கூடியவர்கள் ஒன்றை கவனத்தில் கொள்ளும்படிக் கேட்டுக் கொள்கின்றோம்.

முஸ்லிம்களின் ஆட்சிப் பிரதேசத்தில் வாழக் கூடிய முஸ்லிம் அல்லாதவர்களின் நிலையையும், இன்னும் முஸ்லிம் அல்லாதவர்களின் நாட்டில் சிறுபான்மையினராக வாழ்ந்து வரக் கூடிய முஸ்லிம்களின் நிலையையும், அதனை இன்றுள்ள நிலைகளோடும் அல்லது வரலாற்றுப் பக்கங்களின் துணையோடும் நீங்கள் ஒப்பு நோக்கிப் பாருங்கள்.

ஸ்பெயினில் வாழ்ந்து வந்த முஸ்லிம்களை ஸ்பெயினின் ஆட்சியாளரான இஸபெல்லா, சிலுவை யுத்தம் என்ற பெயரில் செய்த கொடுமைகள் என்ன என்பதை முஸ்லிம்களின் இரத்தம் தோய்ந்த அந்த சிலுவை யுத்த வரலாற்றுப் பக்கங்களைச் சற்றுத் திருப்பிப் பாருங்கள்.

கம்யூனிஸச் சீனாவின் அடக்குமுறையில் இன்றும் அழிந்து வரக் கூடிய உய்கூர் முஸ்லிம்களின் நிலையை எண்ணிப் பாருங்கள். அங்கு தான் சீனாவின் அனுச் சோதனை நடத்தப்பட்டு வரும் அவலத்தைப் பாருங்கள்.

சோவியத் யூனியனை லெனினும், கார்ல் மார்க்ஸ் ஆண்ட பொழுதும் சரி, அவர்களுக்கு முன்னிருந்த ஜார் மன்னர்களின் ஆட்சியின் பொழுதும் சரி சைபீரிய பனி வதை முகாம்களில் கொன்றொழிக்கப்பட்ட முஸ்லிம்களின் சுவடுகள் இன்னும் அழியா இரத்த சரித்திரமாக, அவர்களின் செங்கொடியில் உள்ள சிவப்போடு கலந்திருப்பதைக் காண்பீர்கள்.

இன்றைக்கு நடப்பதென்ன?

- பால்கன் பிரதேசத்தில் கொசோவோவும், போஸ்னியாவும்
- ரஷ்யா வின் செசன்யா
- பாலஸ்தீன்
- ஈராக்
- அமெரிக்காவின் வதை முகாம்களில்
- இஸ்ரேல்
- ஆப்கான்
- இலங்கை
- இந்தியாவில்

(காஷ்மீர், சமீபத்தில் குஜராத் மற்றும் 50 ஆண்டுகளுக்கு முன்னாள் இருந்த பாராளுமன்றம் மற்றும் சட்டமன்ற பிரதிநிதித்துவம் மற்றும் அதிகாகரப் பகிர்வு, மற்றும் அரசுப் பணி, கல்வி, ராணுவம், காவல் துறை போன்றவற்றில் முஸ்லிம்களின் மீது பாரபட்சமான போக்கு அதிகரித்து வருகின்றது)

எனவே, படைத்தவனால் வகுத்தளிக்கப்பட்ட சட்டங்களைப் பின்பற்றி வரும் சமுதாயம் நீதியான சமுதாயமாக நேற்றும் சரி, இன்றும் சரி திகழ்ந்து வருகின்றது என்பதை நியாய உணர்வுகளின் அடிப்படையிலும், நீதி நேர்மை, சத்தியத்தின் அடிப்படையிலும் தீர்மானிப்பது, நியாய உணர்வுள்ள அனைவரின் மீதும் கடமையாகும். அதுவே மதிப்பு மிக்கதுமாகும். மானமாச்சரியமின்றி, இனவேற்றுமைகளின்றி, துவேஷமின்றி நீதியோடும் நேர்மையோடும் சத்தியத்திற்குச் சான்று பகர்கின்றவர்களாக முஸ்லிம்கள் இருக்க வேண்டும் என்றே எங்களது திருமறை எங்களை வேண்டி நிற்கின்றது.

அல்லாஹ்..! அவனே உங்களையும், எங்களையும் படைத்த ஒரே இறைவன். அவனே நியாயத் தீர்ப்பு நாளின் அதிபதி. தீர்ப்பளிப்பவர்களில் எல்லாம் அவனே மிகச் சிறந்த தீர்பளிப்பவன். அத்தகைய அல்லாஹ் தனது திருமறையில் கூறுகின்றான் :

இறைநம்பிக்கையாளர்களே! நியாயத்தை நிலைநாட்டுவதற்காக அல்லாஹ்வுக்கு நீங்கள் உறுதியான சாட்சியாக இருங்கள், எந்த ஒரு கூட்டத்தார் மீதும் நீங்கள் கொண்டுள்ள வெறுப்பு நீதி செய்யாமலிருக்க உங்களைத் தூண்ட வேண்டாம். நீதி செய்யுங்கள் இதுவே (தக்வாவுக்கு) - பயபக்திக்கு மிக நெருக்கமானதாகும். அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். நிச்சயமாக அல்லாஹ் நீங்கள் செய்பவற்றை(யெல்லாம் நன்கு) அறிந்தவனாக இருக்கின்றான். (5:08)

நிறைகள் அல்லாஹ்வைச் சார்ந்தது, குறைகள் என்னைச் சார்ந்தது

Bibiliography


1. The Noble Quran.
2. Al-Imam Muslim, Sahih Muslim
3. Al-Bukhari, Abu Abduallah Mohammed, Sahih Al-Bukhari, Dar Sihmoon, Tunisia

4. Alruba'ai, Abu Abduallah Mohammed, Sunan Ibn Majah. Dar Sihnoon, Tunisia.

5. At-Tirmidhi, Abu Isa. Sunan At-Tirmidhi, Dar Sihnoon, Tunisia.